www.tamilarangam.net

செப்டெம்பர் - 1995

# எரிமலை




"ஜனாதிபதித் தேர்தலில் எனக்குக் கிடைத்த வெற்றியானது, சமாதான முயற்சிக்கு மக்கள் அளித்த அங்கீகாரமாகும். நாட்டில், போரின் தீ நாக்குகள் பெருமளவு உயிர்களையும், வளங்களையும் அழித்துள்ளன. மக்கள் எமக்கு வழங்கியுள்ள தீர்ப்பு சமாதானத்திற்கான அவர்களின் ஆழ்ந்த விருப்பமே."

- சந்திரிகா, நவம்பர் 1994

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சலுகைகளுக்காக... எவரிடமும் நாம் கைநீட்டமாட்டோம்

எனது அன்புக்குரிய மக்களே!

இந்த தற்காலிக போர்நிறுத்த நடவடிக்கையின் பயனாக எமது பிரச்சினைக்கு ஒரு இறுதியான அரசியற் தீர்வு ஏற்படும் என்பதில் எமக்கு நம்பிக்கை இல்லை. இனவெறி கொண்ட சிங்கள - பௌத்த தலைமைக்கு அப்படி திடீரென மனமாற்றம் ஏற்படுமென நாம் எதிர்பார்க்கவில்லை. தமிழருக்கு நீதி வழங்கவேண்டும் என்ற தார்மீக சிந்தனைக்குப் பதிலாக, தமிழர்களை மீண்டும் ஏமாற்றி ஆயுதப் புரட்சிப் போராளிகளை அடிபணியச் செய்யவேண்டும் என்பதே அரசின் அந்தரங்கத் திட்டமாகும். 35 வருட அரசியல் வரலாற்றில் மீண்டும் மீண்டும் ஏமாந்துபோன கசப்பான அரசியல் வரலாற்றுப் பாடங்களில் நாம் நிறையக் கற்றுத் தெளிந்திருக்கிறோம். ஆகவே பேச்சுக்கள் என்ற இந்த இராஜதந்திரப் பொறிக்கிடங்கில் நாம் சிக்குப்படப் போவதில்லை என்பதை நான் உறுதியாக திட்டவட்டமாக உங்களுக்கு எடுத்துரைக்க விரும்புகின்றேன்.

எமது விடுதலைப் போராட்டத்தில் நாம் அளப்பரிய தியாகங்களைச் செய்திருக்கிறோம். தாங்கமுடியாத துன்ப, துயரங்களை அனுபவித்திருக்கிறோம். ஆயிரமாயிரம் அப்பாவி மக்களின் உயிர்களைப் பறிகொடுத்திருக்கிறோம். எமது வீடுகள், சொத்துக்கள், செல்வங்களை இழந்திருக்கிறோம். பெருந்தொகையான இளம் போராளிகளை களத்தில் பலிகொடுத்திருக்கிறோம். சகிக்க முடியாத அளவிற்கு நாம் அவமானப் படுத்தப்பட்டிருக்கிறோம். சிங்களப் பயங்கரவாதமானது எமது தேசிய ஆன்மாவில் விழுத்திய வடுக்கள் என்றுமே மாறப்போவதில்லை.

இத்தனை கொடுமைகளுக்குப் பின்னர், இத்தனை உயிரழிவுகள், பொருளழிவுகளுக்குப் பின்னர், இத்தனை வீரச்சாவுகளுக்குப் பின்னர் நாம் சிங்கள அரசிடம் மண்டியிட்டு சலுகைகளுக்காக கைநீட்டப் போவதில்லை.

தர்மமும், உண்மையும் இறுதியில் வெற்றியளித்து, தமிழ்த் தாயில் கருக்கொண்டுள்ள வரலாற்றுக் குழந்தையான தமிழீழம் என்றோ ஒருநாள் பிரசவமெடுக்கும் என்பது எனது நம்பிக்கை.

எம்மிடம் ஆத்ம பலமும், ஆயுத பலமும் இருக்கிறது. மக்கள் பலமும் எமது கரங்களைப் பலப்படுத்துமானால் எமது இலட்சியம் வெற்றியடைவதை யாராலும், எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்திவிட முடியாது என்பதை உறுதியுடன் கூற விரும்புகின்றேன்.

தமிழீழத் தேசியத் தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# எரிமலை

கலை பண்பாடு
அரசியல் சமூக ஏடு

★

பதின்நான்காம் ஆண்டு
செப்டெம்பர் 1995

★

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrénées,
75020 Paris.
Tel: 43 58 11 42

# இராணுவ நடவடிக்கையை வெற்றி கொள்வதில் வெளிநாட்டுத் தமிழர்களின் பங்களிப்பு என்ன?

www.tamilarangam.net

சந்திரிகா அம்மையாரால் ஏவிவிடப்பட்ட போர் அரக்கன், தமிழ் மக்கள் மீது அனர்த்தங்களைப் புரியத் தயாராகி வருகிறான். ஆட்சேர்ப்பு, நிதி சேகரிப்பு, ஆயுதக் கொள்வனவு, படை, படைக்கல நகர்வு என்ற ரீதியில் இவ்வாயத்தங்கள் இடம் பெறுகின்றன.

"முன்னோக்கிப் பாய்தல்" நடவடிக்கையின் இரண்டாம் கட்ட நடவடிக்கை, இம்முறை 40,000 இராணுவத்தினரைக் கொண்டு, பல்வேறு முகாம்களில் இருந்து ஒரே நேரத்தில் புறப்படுவதாக இருக்கும் என்று கூறப்படுகிறது. அடுத்த வாரமோ அல்லது செப்டெம்பர் மாத முடிவுக்குள்ளோ, மரபுரீதியாக பருவமழையின் வருகையைக் கருத்தில் கொள்வதற்கு இடம் கொடுக்காமல் தொடர்ந்து நடத்த சிறிலங்கா இராணுவம் உத்தேசித்துள்ளதாக கூறப்படுகிறது. யாழ். நகரைக் கைப்பற்றி, யாழ். குடாநாட்டை முழுமையாக 'மீட்டு', தமிழ் மக்களை 'விடுதலை' செய்வதுதான் அரசாங்கத்தின் நோக்கம் என அறிவிக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளைக் காடுகளுக்குள் துரத்துவதோ, பலவீனப்படுத்துவதோ, அழித் தொழிப்பதோ இவ் இராணுவ நடவடிக்கையின் முதன்மையான இலக்கு என்றும் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இப்பாரிய இராணுவ நடவடிக்கையின் போது, பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள், குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் கொல்லப் படுவார்கள், காயம் அடைவார்கள், உடல் உறுப்புகளை இழப்பார்கள். பல கோடி ரூபாய் பெறுமதியான சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படும். பல இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாவார்கள். ஏற்கனவே மோசம் அடைந்து வரும் உணவுப்பற்றாக்குறை நிலைமை இன்னும் அதிபயங்கர பரிமாணத்தை அடையும். மக்கள் பஞ்சத்தாலும், மருத்துவ வசதி இன்மையாலும் இறக்கின்ற நிலைமை ஏற்படும். இத்தகைய நாசகார திட்டத்தை நடைமுறைப்படுத்தவே அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இத்தகைய அழிவு நடவடிக்கையின், ஓர் அம்சமாக உணவு, மருந்துப்பொருட்களை தடைசெய்து, மக்களை பட்டினி போட்டு, அவர்களது உடல், உள உறுதிகளைச் சிதறடித்து மண்டியிடச்செய்வதும் அரசாங்கத்தின் தந்திரமாக உள்ளது. இவ் அடிப்படையிலேயே, உணவுக் கப்பல்களை யாழ் குடாநாட்டுக்கு அனுப்புவதில் அரசாங்கம் பல்வேறு சாக்குப் போக்குகளைச் சொல்லிக் காலம் கடத்தி வருகின்றது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், காங்கேசன்துறையில் நிலைகொண்டுள்ள இராணுவத்துக்கும் உணவு, மருந்து விநியோகங்களைச் செய்ய வேண்டும் அல்லது நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்ற நிபந்தனையுடனான மிரட்டல்களை அரசாங்கம் செய்து வருகின்றது.

இத்தகைய மனித உரிமைக்கும், மனிதாபிமான அடிப்படைக்கும் எதிரான, கொடூர இன அழிப்பு நடவடிக்கையை, சர்வதேச ரீதியில் நியாயப்படுத்தி அங்கீகாரத்தையும், உதவிகளையும் பெறுவதற்காக அரசாங்கம் பிரச்சார யுத்தமொன்றிலும் ஈடுபட்டுள்ளது. இதற்கு வசதியான, கை வந்த கருவியாக, இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்ட யோசனைகள் அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் தீர்வுத்திட்டம் என்று அறிவிக்கப்பட்ட போதும், அது சந்திரிகாவின், அதிகாரப் பரவாலக்கல் தொடர்பான யோசனைகளாக, ஏற்கனவே மாற்றங்களுக்கு உட்பட்டு வருகின்றது. இவ் யோசனைகளில் நாளுக்கொரு மாற்றங்கள் ஏற்பட்டு, அது தன்னுடைய ஆரம்பத் தோற்றத்தை இழந்து உருமாறி வருகின்றது. இவ் யோசனைகள், அரசியல் சட்டத்திருத்த வரைவாக வடிவெடுக்கும் போதோ, பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் ஆராயப்படும் போதோ, சிங்களப் பராளுமன்றத்தில் விவாதிக்கப்படும் போதோ மேலும் மாற்றங்களுக்கு உட்படுவதற்கு வசதியான தரிப்பிடங்களை "அதிகாரப் பரவாலக்கல் பாதை"யில் அரசாங்கம் உருவாக்கியுள்ளது. உலக்கை தேய்ந்து உளிப்பிடியாவது போல், இறுதியில் ஒன்றுக்கும் உதவாதவாறு மாற்றங்களுக்கு உட்படக் கூடிய தீர்வுத்திட்ட யோசனைகளையே, தமிழ் மக்களின் அபிலாசைகளைத் திருப்தி பண்ணக்கூடிய தீர்வுத்திட்டமாக்ப் பிரச்சாரப்படுத்தி, தனது நாசகார இராணுவ நடவடிக்கைக்கு உலக அரங்கில் சிறிலங்கா அரசாங்கம் ஆதரவு தேடுகின்றது. இப் பயங்கரப் போர்த் திட்டத்தை எதிர்க்க விடுதலைப் புலிகளும் மக்களும் தயாராகி வருகிறார்கள். பெரும் எண்ணிகையான சிங்கள இராணுவத்துக்கு ஈடுகொடுக்க போராளிகளின் ஆட்பல அதிகரிப்பு அவசியமாய் உள்ளது. மேலும், இராணுவ ஆயுத சக்தியை முறியடிக்க விடுதலைப் புலிகளும் நவீன ஆயுதங்களை வாங்க வேண்டிய நிலையில் உள்ளனர். அது மாத்திரமில்லாமல், பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை வெற்றி கொள்ள, உணவு, மருந்து, எரிபொருள், வெடிபொருட்கள் என்ற ரீதியில் ஏற்படும் ஏகப்பட்ட செலவுகளையும் சமாளிக்க வேண்டிய நிலையில் விடுதலைப் புலிகள் உள்ளனர். தமிழீழ மக்கள் தாயகத்தில், விடுதலைப் போராட்டத்தில் முழுமையாக இணைந்து கொண்டிருக்கிறார்கள். மிகவும் கஸ்டமான காலத்திலும், தம்மிடமிருந்த அற்ப சொற்ப பணங்களையும் மண்மீட்பு நிதிக்காக பெரும் தியாக உணர்வுடன் வழங்கி வருகின்றனர்.

இந்நிலையில், வெளிநாடுகளில், மிகையான பணங்களை வைத்திருக்கும் நாம் என்ன செய்யப் போகிறோம். நாமும் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொள்ள நாடு திரும்பப் போகிறோமா? அல்லது எம்மிடமுள்ள பணங்களின் பெரும்பகுதியை விடுதலைப் போர் நடவடிக்கைக்கு அளித்து எதிரியை எம் மண்ணிலிருந்து விரட்ட உதவப்போகிறோமா?

புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள், வரலாற்று முக்கியம் வாய்ந்த இக் காலகட்டத்தை, விடுதலைப் போரின் திருப்பு முனையான தருணத்தைத் தெளிவாக உணர்ந்து தீர்மானிக்க வேண்டிய சந்தர்ப்பம் இது. தேசிய விடுதலையை வென்றெடுப்பதற்கான முக்கியத்துவம் வாய்ந்த சண்டை ஒன்றில் எமது பங்களிப்பை முழுமையாகக் கொடுக்கப் போகிறோமா? அல்லது எமது விடுதலையை தாயக மக்கள் வென்று தருவார்கள் என்று வாளா இருந்திடப் போகிறோமா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தேசத்தின் இதயத்தில்

www.tamilarangam.net

**"எதிரியை விடத் துரோகியே ஆபத்தானவன்" என்ற தலைவரின் கூற்றின் தாற்பரியத்தை இந்தச் சோக நிகழ்ச்சி துல்லியமாகக் காட்டி நிற்கின்றது.**

சோகத்தை வெல்லத் தேவையானது வீரம்; ஆயினும் வீர முயற்சிகள் சிலவேளை, சோகத்தையும் தரலாம். ஆக்கிரமிப்பு ஆட்சியாளரிடமிருந்து விடுதலை வேண்டிப் போராடும் ஒரு தேசம் - இந்த வகைச் சோகத்தை - இடையிடையே சந்திக்க வேண்டி வரலாம். 28-07-1995 அன்று, தமிழீழம் அத்தகையதொரு சோகத்தைச் சந்தித்தது (இந்த வகைச் சோகத்தை நேர சூசிவைத்து, சிங்கள தேசம் அடிக்கடி அனுபவிக்கின்றது என்பது வேறுவிடயம்!).

தமிழீழத்தின் இதயப் பகுதியாக இருக்கும் மணலாற்றுக் கோட்டத்தின் கணிசமான நிலத்தை ஆக்கிரமித்து வைத்திருக்கும் சிங்களப் படை முகாம்களில் ஐந்தைப் புலி வீரர்கள் தாக்கி அழிக்க முற்பட்ட போது, எதிர்பாராத வகையில் இந்தச் சோக அதிர்ச்சியைத் தமிழினம் எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. யாரோ ஒரு தேசவிரோதியின் காட்டிக்கொடுப்பால், புலிகளின் தாக்குதலை எதிரிப் படைகள் முன்கூட்டியே அறிந்துகொண்டன. இதனால், இந்தப் பிரதேசத்தில் உள்ள ஏனைய இராணுவ முகாம்களில் இருந்த கணிசமான படையினரைக் குறித்த முகாம்களுக்கு வரவழைத்து ஆட்பலத்தை ஒருங்கு திரட்டிய சிங்களத் தளபதிகள், தமது பிரமாண்டமான படைக்கல சக்தியை (Fire Power) சில குறித்த பகுதிகளை நோக்கி இலக்குவைத்து, தாக்க நகர்ந்த புலிகளை எதிர்பாராத வகையிலும், எதிர்பாராத இடங்களில் இருந்தும் தாக்கினர்; இந்த எதிர்பாராத நிகழ்ச்சியால் 180 போராளிகள் வீரச்சாவடைந்தனர். ஆயினும், அந்த மரணப் பொறிக்குள் சிக்கிய புலிகளின் படையணிகள், வீரத்துடனும், சமயோசிதத்துடனும் போராடி, வரவிருந்த பேரிழப்பைத் தவிர்த்துக் குறைந்த இழப்புடன் திரும்பினர்; இல்லையேல் இதைவிடப் பலமடங்கு சோகத்தைத் தமிழினம் எதிர்கொள்ள வேண்டியிருந்திருக்கும்.

"எதிரியை விடத் துரோகியே ஆபத்தானவன்" என்ற தலைவரின் கூற்றின் தாற்பரியத்தை இந்தச் சோக நிகழ்ச்சி துல்லியமாகக் காட்டி நிற்கின்றது.

எமது விடுதலைப் போரின் இராணுவ பரிமாணம், இன்று உலகமே வியக்கும் வகையில் வளர்ச்சி கண்டுவிட்டது. முன்னர் சிறிய தொகையினரான போராளிகள், தாம் விரும்பிய இடத்தில் வைத்து, ஒரு குறித்த தொகையினரான படையினரைத் திடீரெனத் தாக்கி அழித்துவிட்டு, அடுத்தகணமே மறைந்துவிடுவர். ஆனால், இப்போதைய தாக்குதல்களின் இராணுவ பரிமாணம் அப்படியல்ல. ஆயிரக் கணக்கான போராளிகள், பல்லாயிரக் கணக்கில் படையினர் நிலைகொண்டுள்ள இராணுவத் தளங்களை அல்லது இராணுவக் கிராமங்களைத் தேடிச் சென்று தாக்கி, நிலங்களை விடுவிக்க முயலும் அதி உயர் வடிவத்திற்கு, விடுதலைப் போரின் இராணுவ பரிமாணம் வளர்ந்துவிட்டது. இந்தப் பரிமாண வளர்ச்சிக்கேற்ப சில பிரத்தியேகப் பிரச்சினைகளையும் ஒரு விடுதலை இயக்கம் சந்திக்க வேண்டியது தவிர்க்க முடியாதது. இந்தப் பிரச்சினைகளில் பிரதானமானது தாக்குதலின் இரகசியத் தன்மையைப் பாதுகாப்பது சம்பந்தப்பட்டது; அடுத்தது, எதிர்பாராத நெருக்கடிகளால் தாக்குதல் முயற்சி ஆபத்தில் சிக்கிக் கொண்டால் ஏற்படும் இழப்பு சம்பந்தப்பட்டது.

ஒரு சிறிய தொகைப் போராளிகள் மேற்கொள்ளும் ஒரு கெரில்லாத் தாக்குதலின் இரகசியத் தன்மை மக்களுக்குத் தெரியவர, வாய்ப்புக்கள் மிகக் குறைவு. ஆனால், பெருந் தொகைப் போராளிகள் பங்குகொள்ளும் ஒரு பாரிய படைக்கல அழிப்பின் இரகசியத் தன்மை, ஒரு குறித்ததொகை மக்களுக்கும், ஏதோ ஒருவகையில் கசிய வாய்ப்புக்கள் உண்டு. இந்த நிலையில், இரகசியம் பேணுதல் என்பது, ஒரு சிறிய கெரில்லா அணியின் ஒருசில வீரர்களின் கடமை என்ற தன்மை மாறி, மக்களின் கடமை என்ற விரிந்த நிலை தவிர்க்க முடியாது எழுகின்றது. இந்தக் கட்டத்தில்தான், மக்களாகிய நாம் பொறுப்புணர்ச்சியுடனும், விழிப்புணர்வுடனும் போராட்ட நடவடிக்கைகள் பற்றிய செய்திகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். இத்தகைய பொறுப்புணர்வையும், விழிப்புணர்வையும்

**சிறிலங்கா படையினரின் இராணுவ நடவடிக்கையின் போது போராளிகளுக்கு உறுதுணையாக செயற்பட்டவர்களையும் மக்களை அழிவில் இருந்து பாதுகாத்து பல்வேறு உதவிகளைப் புரிந்தவர்களையும் நன்றி கூர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட செயலகம் விடுத்த அறிக்கையில் இருந்து:**

"எமது மண்ணை ஆக்கிரமித்து குழந்தைகள் வயோதிபர்கள் என்று பாராது ஈவு இரக்க மின்றி கொன்றொழிப்பதன் மூலம் தமிழீழத்தை அழித்து விடலாம் என்ற நீண்ட நாள் கனவுடன் யாழ். குடாநாட்டின் மீதான பாரிய இராணுவ நடவடிக்கையை முன்னோக்கிப் பாய்தல் என பெயர் சூட்டிக்கொண்டு சிங்கள இராணுவத்தினர் முன்னேறி வந்தனர். அவ்வேளை எதிர்த்து முகம் கொடுத்து இராணுவத்தினரை விரட்டியடிக்க முனைந்து பதில் தாக்குதல் தொடுத்த போது தோளோடு தோளாக களத்தில் ஆபத்துக்களுடன் பக்க பலமாக நின்றார்கள். எமது மண்ணில் அசையாத பற்றுக்கொண்ட நாட்டுப் பற்றாளர்கள் உற்றாரையும் சொத்துக்களையும் இழந்து, இன்னலுற்ற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நடந்த பெருஞ்சமர்!

**யாரோ ஒரு கோடரிக்காம்பின் தேசவிரோதச் செயலால், மணலாற்றைத் துவம்சம் செய்துகொண்டு நிற்கும் 'யானை' தற்காலிகமாகத் தப்பிவிட்டது.**

**ஆனால், இனிமேலும் வேல்கள் வீசப்படும்!**

போராளிகள் மிகக் கடுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும். எமது படையணிகளின் பிரயாணங்களை அல்லது புதிய இடங்களில் எமது படையணிகளின் திடீர்ப் பிரசன்னங்களை (தங்குதல்களை) காணும் மக்கள், அவை பற்றிய செய்திகளையோ அல்லது 'இந்த முகாமுக்கு அடிவிழப்போகுது; அந்த முகாமுக்கு அடிவிழப்போகுது' என்ற தங்களின் ஊகங்களையோ எவருடனும் கதைக்கக் கூடாது. ஏனெனில், அவ்வாறு கதைக்கும்போது, அப்படியே 'காதுமாறிக் காதுமாறி' உளவாளியின் காதுகளுக்கும், அந்த அதி உயர் இரகசியம் சென்று விட்டால், அதன் விளைவுகள் ஒரு தேசிய இனத்தையே துயரத்தில் ஆழ்த்திவிடும் என்பதை, நாம் மறந்துவிடக் கூடாது.

எமது மண்ணில் நிலைகொண்டிருக்கும் எதிரிப் படைகளின் பலம் பாரியது என்பது எல்லாருக்கும் தெரியும். எனவே, பாரிய படை பலத்தைக் கொண்ட இந்தப் படை முகாம்களைத் தாக்கி அழிப்பது என்பது சாதாரண விடயமல்ல.

> திசை தெரியாது உடுத்த உடு புடவையுடன் தவித்து இடம் பெயர்ந்தவர்களுக்கு உண்டி, உறை தந்தவர்கள், காயமுற்று உயிருக்குப் போராடியவர்களை மீட்டு மருத்துவம் செய்தவர்கள், இரத்ததானம் செய்தவர்கள், காலமறிந்து முற்று முழுதாக தாமாகவே முன் வந்து உதவிகளை வழங்கியவர்கள் கௌரவத்திற்கு உரியவர்கள்.
>
> அல்லற்பட்ட மக்களுக்கு சிறந்த சேவையாற்றியதுமன்றி இனிவரும் காலங்களில் தமிழீழ மக்களுக்கு இன்னல் விளைத்திட சிறிலங்கா பேரினவாதிகள் முயலும் போதெல்லாம் திடசங்கற்பத்துடன் செயற்படும் அனைத்து வெகுஜன அமைப்புக்கள், கூட்டுறவுத்துறையினர், பொது ஸ்தாபனங்கள், குறிப்பாக அயராது உழைத்த சிற்றூர்தி சேவை சங்கம் தனியார் போக்குவரத்துத் துறையினர், வணிகர் கழகங்கள் ஆகியோருக்கு எமது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் சிறிலங்கா இராணுவத்தின் கொடூரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நேயம் மிக்க ஆறுதலையும் பலியான பொது மக்களினது குடும்பங்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிக்கின்றோம்."

எதிரியின் காவல் நிலைகளையும், அந்தக் காவல் நிலைகளின் ஆயுத பலத்தையும் மற்றும் எதிரி முகாமின் பாதுகாப்பு வியூகங்களையும் கண்டறிந்துகொள்வதுடன், எதிரி முகாமின் மொத்த ஆள், ஆயுத பலத்தையும் அறிந்த பின்பே அந்தப் படைமுகாமைத் தாக்கி அழிக்கத் திட்டம் தயாரிக்க முடியும். இந்த அளவு இராணுவ விபரங்களும், எதிரி முகாமினுள் ஏதோ ஒரு இடத்தில் உள்ள கரும்பலகையில் எழுதப்பட்டிருக்க மாட்டா. ஒவ்வொன்றாக இந்தத் தகவல்கள் சேகரிக்கப்பட வேண்டும்; சேகரிக்கப்படும் ஒவ்வொரு தகவலும் சரிபார்க்கப்பட வேண்டும்; சரி பார்க்கப்பட்ட பின் அந்த அந்தப் புவியியல் அமைப்பிற்கும், ஆயுத பலத்திற்கும் ஏற்றாற் போல தாக்குதற் திட்டங்களை வகுக்க வேண்டும்; ஒவ்வொரு தாக்குதலுக்கும் ஏற்றவாறு பல்வேறு தாக்குதற் தந்திரோபாயங்கள் வகுக்கப்பட வேண்டும். எனவே, எதிரி முகாம் மீதான தாக்குதல் நாளன்று முதலாவது துப்பாக்கி வெடிக்க முன்னரே, வேவுப் போராளிகள் பல உயிரிழப்புக்களைச் சந்தித்தபடி ஒரு வேவுச் சமரையே நடாத்தி முடித்திருப்பார்கள்.

தாக்குதற் திட்டங்கள் நன்றாக வரையப்பட்டாலுங்கூட அது தடங்கல்கள் எதுவுமின்றி நடைமுறைப் படுத்த வேண்டும். 'கண்ணுக்குள் எண்ணெய் விட்டுவிட்டு' காவல் நிலைகளில் காத்திருக்கும் எதிரிப் படையாட்களின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு, அவர்களது காவல் நிலைகளுக்கு அருகே அல்லது அதை ஊடுருவி உள்ளே சென்று தாக்குதலை நடாத்துவது என்பது, சாதாரண விடயமல்ல. எதிரி முகாம் நோக்கிய பல முனை நகர்வுகளில் ஏதாவது ஒரு நகர்வை, எவனாவது ஒரு எதிரிச் சிப்பாய் கண்டுவிட்டால், அந்த முகாமே விழித்துக் கொள்ளும். வெளிச்சக் குண்டுகள் மூலம், இரவு பகலாக் கப்படும். 'வந்தா வா! போனாப் போ!' என்று கருதி விதைக்கப்படும் பெரும்போக நெல் விதைப்பைப் போல, எதிரியின் எறிகணைகள் முகாமைச் சூழ அள்ளி விதைக்கப் படும். அந்த எறிகணை விதைப் பிற்கு நீர் பாய்ச்சுவது போல ரவை மழை பொழியும். இந்த வெடிமருந்துப் புயலுக்குள் நின்றுபிடித்து, நிலை தடுமாறாது, எதிரிப் படைகளைச் சுட்டு வீழ்த்தி, அவனது நிலைகளைக் கைப்பற்றுவது என்பது சாதாரண விடயமல்ல. நூற்றுக் கணக்காக வரும் எதிரி வீரர்கள் முன்பாக, கோயில் நந்திபோல் நின்று, எதிரிகளைச் சுட்டு வீழ்த்தும் 'ரம்போ' திரைப்படப் பாத்திரத்தைப் போல நிஜமான போர்க்களம் நிச்சயமாக இருக்காது.

இப்படித்தான் சில ஆண்டுகளுக்கு முன்னர், ஈரான் நாட்டின் தலைநகரான 'தெஹ்ரானில்' பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த தனது குடிமக்களை மீட்கவென, அமெரிக்க வல்லரசு ஒரு பாரிய தாக்குதற் திட்டத்தை நடைமுறைப் படுத்தியது. மத்தியதரைக் கடலில் நிறுத்தப்பட்டிருந்த அதனது கடற் படைக் கப்பலில் இருந்து மீட்பு நடவடிக்கைக்கெனப் புறப்பட்ட உலங்கு வானூர்தி அணி ஒன்று, ஈரானின் பாலைவனத்தில் புயலுக் குள் சிக்கி விபத்திற்கு உள்ளான தால், இரண்டு உலங்கு வானூர்தி களையும், சில படை வீரர்களையும் அது இழந்ததுடன் மீட்பு முயற்சியும் நிறைவேறாது போனது. இதே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

போலவே, எகிப்திய விமானம் ஒன்றைக் கடத்திச் சென்ற எகிப்திய தீவிரவாதிகள், அந்த விமானத்தை லிபிய நாட்டு விமானத் தளமொன்றில் நிறுத்திவைத்திருந்த போது, 40 பேர் கொண்ட எகிப்திய கொமாண்டோ அணி ஒன்று வான் வழி சென்று, திடீர்த் தாக்குதலைத் தொடுத்து, தமது விமானத்தையும், பயணிகளையும் மீட்க ஒரு துணிகர முயற்சி செய்தது. ஆனால், இந்த முயற்சியில் 40 கொமாண்டோக்களையும் எகிப்திய அரசு பறிகொடுத்துவிட்டது. திட்டமிட்டுச் செல்வதும், எதிர்பாராத ஒரு தடையால் அல்லது காட்டிக்கொடுப்பால் திட்டம் நிறைவேறாது இழப்புக்களுடன் திரும்புவதும், அல்லது திரும்ப முடியாமல் தாக்குதல் அணிகள் அழிந்துபோவதும், போரியல் யதார்த்தம் ஆகும்.

இதேவேளை, எதிர்பாராத ஒரு இக்கட்டுக்குள் பல்லாயிரம் பேர் கொண்ட ஒரு படையணி சிக்கி, அழிந்துபோக வேண்டிய அபாயத்தில் இருக்கும்போது, அழிவைக் குறைப்பதற்காகப் போர் புரிந்து, களத்தைவிட்டுப் பின்வாங்கி மீண்டு வரும் வெற்றிகரச் சமர்களை உலக வரலாற்றில் காணலாம். 'டங்கேக் சமர்' என்ற ஒரு புகழ்பெற்ற சமர் உண்டு. இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது, பிரான்சு தேசம் ஜேர்மனியிடம் வீழ்ந்தபோது, பிரான்சில் நிலை கொண்டிருந்த ஆங்கில பிரான்சு கூட்டுத் துருப்புக்கள் மூன்றரை இலட்சம் பேர் போரிட்டபடி பின்வாங்கி இங்கிலாந்து மீண்டதை, "அற்புதமான ஒரு மீட்பு நடவடிக்கை" என்று வின்சன்ற் சேர்ச்சில் வர்ணித்துள்ளார். அதாவது, போரிடச் சென்ற படை எதிர்பாராத விதத்தில் தோல்வியைச் சந்திக்க நேரிடும் போது, படையாட்களை அழிய விடாது மீட்டுவரும் செயலும் வெற்றியின் ஒரு அம்சம்தான்.

துணிவிலும், தாக்குதற் திறனிலும், போர்த் திட்டமிடலிலும், சிங்களப் படைகளைவிட புலிகள் இயக்கம் மேலோங்கி நிற்கின்றது என்பது, உலகிற்கே தெரியும். 'மூன்றாம் ஈழப்போர்' ஆரம்பித்த நாளில் இருந்து அடுத்தடுத்த இராணுவ வெற்றிகளைப் பெற்ற புலிகள் இயக்கம், சிங்களப் படைக்கு ஒரு தொடர் சோகத்தைக் கொடுத்தது.

www.tamilarangam.net

★ சிங்களக் கடற்படையின் அதி சக்திவாய்ந்த சண்டைக் கப்பல்கள் இரண்டை (சூரயா, ரணசுறு) திருகோணமலைத் துறைமுகத்தினுள் கரும்புலிகள் மூழ்கடித்த போதும்...

★ அடுத்தடுத்து இரண்டு 'அவ்ரோ' விமானங்களை விழுத்தி சுமார், 100 படையினரைக் கொன்ற போதும்...

★ தென்தமிழீழத்தில் கட்டுமுறிவு, தரவைக்குளம் உட்பட பல படைமுகாம்களையும் பல ரோந்து அணிகளையும் அழித்து சில நூறு பேரைக் கொன்ற போதும்...

★ மண்டைதீவுக்குள் புலி வீரர்கள் புகுந்து 120 படையினரைக் கொன்று, ஆயுதக்கிடங்கையும் கைப்பற்றி வந்தவேளையிலும்...

★ 'புலிப்பாய்ச்சலில்' புக்காரா வீழ்த்தப்பட்டு எடித்தரா மூழ்கடிக்கப்பட்டு, 150 இற்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்ட போதும்...

## சிங்க(ள)த் துறவிகள்

- அலெக்ஸ் பரந்தாமன்

அவர்களுக்கு,
எந்த நாளும்
எம்மைப்பற்றித்தான்
கவலை!



யோசிக்க...
யோசிக்க...
நோய்தான் கூடுகிறது!

பக்கவாதம்...
பாரிசவாதம்...
மூட்டுவாதம்...
முழங்கால் வாதம்...
எல்லாமே ஒன்றுசேர
ஏற்படுகிறது
இனவாதம்!

சிங்கள தேசம் அதிர்ச்சி மேல் அதிர்ச்சி அடைந்து, இடிந்துபோய் இருந்தது.

இவ்விதம் அடுத்தடுத்து வெற்றிகளைப் பெற்றுவந்த தமிழினம், 28-07-1995 அன்று, மணலாற்றில் ஒரு பேரிழப்பைச் சந்தித்து விட்டது. ஆயினும், அந்தப் பேரிழப்பிலும் ஒரு பெரும் நிம்மதி உள்ளது. அதாவது, தாக்குதலின் இராணுவ பரிமாணமும், வெற்றிகரமாகச் செய்து முடிக்கப்பட்ட ஆட்டிலறி தகர்ப்பும், மற்றும் பேராபத்தை எதிர்கொண்ட போதும் ஒப்பீட்டளவில், குறைந்த இழப்புக்களுடன் புலிகளின் படையணிகள் பாதுகாப்பாக மீண்டுவந்த நிலையும், இழப்புக்கள் ஏற்படுத்திய சோகத்துக்குள்ளும் நிம்மதி அளிக்கின்றன.

நாங்கள் ஒரு சமரை (Battle) வெல்லத் தவறிவிட்டோம் என்பது உண்மைதான்; ஆயினும், விடுதலைப் போரில் (War) இன்றும் நாம் முன் நிலையிலேயே இருக்கின்றோம்!

இதேவேளை, திட்டமிட்டபடி ஐந்து முகாம்கள் மீதான அந்தப் பெருந்தாக்குதல் வெற்றிகரமாக நடந்திருந்தால், சிங்களப் படைகளின் பாரிய புதைகுழியாக மணலாறு மாறியிருக்கும்; அது சிங்கள தேசத்தையே உலுக்கி எடுத்திருக்கும். எனவே, தமிழீழம் ஒரு பேரிழப்பைச் சந்தித்தது என்பதைவிட, எதிரிச் சேனை மயிரிழையில் தப்பித்துவிட்டது என்பதே இந்தத் தாக்குதல் தொடர்பான சரியான மதிப்பீடாகும்.

சுருக்கமாகச் சொன்னால் 28-07-1995 ஆம் திகதியிலான பெருந்தாக்குதல், 'யானைக்குக் குறிவைத்து குறிதவறிய வேலுக்கு ஒப்பானதே.' தமிழ்வேதம் தந்த வள்ளுவப் பெருந்தகை கூறுவது போல... 'முயலுக்கு எய்து அதைக் கொன்ற அம்பைவிட, யானைக்குக் குறிவைத்து வீசி, இலக்குத் தவறி வீழ்ந்த வேலுக்கே பெருமை அதிகம்.'

யாரோ ஒரு கோடரிக்காம்பின் தேசவிரோதச் செயலால், மணலாற்றைத் துவம்சம் செய்துகொண்டு நிற்கும் 'யானை' தற்காலிகமாகத் தப்பிவிட்டது.

ஆனால், இனிமேலும் வேல்கள் வீசப்படும்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தாயகத்தைப் காக்கும் பணியில் அனைவரும் இணையவேண்டும்



எல்லையில் எதிரி வந்து குவிந்துவிட்டான். நமது தாயகப் பகுதியெங்கும் ஊடுருவி எம் வீட்டு வாசல்களைத் தட்டித் திறக்கப் போகும் எதிரி, எம்முடைய அன்புக்குரிய விருந்தாளியாக நடந்துகொள்ளப் போவதில்லை என்பது மட்டும் நிச்சயம். முன்னைய பல சம்பவங்களும், இப்போதும் மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் நடந்துகொண்டிருக்கும் ஏராளமான சம்பவங்களும் எமக்கு இதை உணர்த்தியிருக்கின்றன. தெரியாத்தனமாக தவறு செய்யலாம். தெரிந்துகொண்டும் செய்யலாமா? நமது தவறுகளால் ஏற்படப்போகும் பாரதூரமான பின் விளைவுகள் நம் நாட்டின் வளமான எதிர்காலத்தையே பின்தள்ளிவிடும் என்பது மட்டும் நிச்சயம்.

நீண்ட கனவுகளுடன் க. பொ. த. (சா /த), க. பொ. த. (உ/த) பரீட்சைகளுக்காக இரவு, பகலாகத் தீவிரமாகப் படிக்கும் எங்கள் வாரிசுகளின் எதிர்காலம் இருளாகப் போவதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியுமா? தன் படையெடுப்பால் எதிரி அழிக்க நினைப்பது வெறுமனே நமது தாயகபூமியின் விளைநிலங்களையும் குடிமனைகளையும் மட்டுமல்ல. தமிழரின் இரத்தத்தோடு கலந்துவிட்ட பெருஞ்செல்வமான கல்வியையும் தான். கல்வியை அழித்து - தமிழரின் அறிவை அழித்து - அப்படியே விடுதலை உணர்வையும் அழித்து - தமிழரை ஒரு அடிமைக் குழுவாக மாற்றுவது எதிரியின் நோக்கங்களில் ஒன்று. அடிமைத்தனத்தில் மூழ்கிக்கிடக்கும் மக்களால் எந்த ஆளும் சக்திக்குமே அச்சுறுத்தல் இராது. அதுமட்டுமல்ல, யார் ஆண்டாலும் அந்த மக்கள் கட்டுப்பட்டு நடப்பார்கள். ஆட்சியாளர்களின் சின்னச் சின்னச் சலுகைகளையெல்லாம் பெரிதாக நினைத்து, அவர்களுக்கு விசுவாசமாக நடப்பார்கள்.

இதை ஏற்கனவே இலங்கை இராணுவம் பல தடவைகள் செய்ய முனைந்திருக்கின்றது. தான் ஆக்கிரமித்த இடங்களிலுள்ள தமிழர்களுக்கு பாரிய தீங்குகளைச் செய்துவிட்டு, பின்னர் அவர்கள்மேல் அன்புகொண்டு உதவுவது போல் நடக்க முனைவார்கள். அன்பாகப் பேசுவார்கள். அரிசியும் பருப்பும் இலவசமாகக் கொடுப்பார்கள். ஆனால் எப்போதும் தமது கத்தியை தமிழரின் கழுத்திலேயே வைத்திருப்பார்கள். தமிழர்களிடம் இயல்பாகவே உள்ள வீரமும் விடுதலை உணர்வும் இந்தச் சின்னச் சின்னச் சலுகைகளுக்கெல்லாம் பணிந்து போனதில்லை. எனினும் பெரும் எண்ணிக்கையில் எதிரிகள் இருக்கும் இடத்தில் மக்களின் வாழ்க்கை நிலை பாதிப்படுவதைத் தடுக்கமுடியாமல் போய்விடும்.

இப்போது தென்தமிழீழத்தில் சிறீலங்கா இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் நடந்துகொண்டிருக்கும் சம்பவங்களைத் தெரிந்துகொண்டால், இனிமேல் இராணுவம் ஊடுருவும் பகுதிகளில் என்ன நடக்கும் என்பது தெரியும். 1990-க்குப் பிற்பட்ட காலத்தில் தென்தமிழீழத்தில் பல பெண்கள் இராணுவத்தினரால் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவங்கள் யாராலும் சற்றும் எதிர்பார்க்காத நேரங்களில், எதிர்பார்க்காத இடங்களில்தான் நடந்தன. பாடசாலைக்குப் போய்க்கொண்டிருந்த மாணவிகள், சீருடைகளுடனும் புத்தகப் பைகளுடனும் இராணுவ முகாம்களுக்குள் அழைத்துச் செல்லப்பட்டனர். பெற்றோர்கள் போய்க் கேட்டபோது, விசாரணைக்காக தடுத்துவைக்கப்பட்டிருப்பதாகவும், விசாரணை முடிந்த பின் விடுதலை செய்யப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டது. நாலைந்து நாட்களின் பின் விடுவிக்கப்பட்ட மாணவிகள் யாவருமே பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டிருந்தனர்.

இரவு நேரங்களில் இராணுவ நடவடிக்கைக்குப் பயத்தில் கிராமத்துப் பெண்கள் எல்லோருமே தேவாலயத்தில் தங்கினார்கள். ஆண்கள் அருகிலுள்ள காடுகளுக்குள் மறைந்திருந்தனர். ஒரு நாள் இரவு நல்ல குடி வெறியில் தேவாலயத்துக்குள் புகுந்த இராணுவம் அங்கிருந்த இளம் பெண்கள், தாய்மார்கள் எல்லோரையுமே பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியது.

வீதியில் மிதிவண்டியில் கணவனுடன் போய்க்கொண்டிருந்த இளம் மனைவியைத் தடுத்து நிறுத்திவிட்டு கணவனைப் போகுமாறு அனுப்பியது இராணுவம். தமது தேவை தீர்ந்த பின்னர் அந்தப் பெண்ணை விடுதலை செய்தது.

இப்படித்தான் இன்று தென்தமிழீழம் வாழ நிர்ப்பந்திக்கப்படுகின்றது. தம் உயிரையும் மானத்தையும் கையில் பிடித்தவாறு அந்த மக்கள் வாழ்கின்றனர். இளம் பெண்களும் வாலிபர்களும் படிப்பதற்குக் கூட வெளியில் போகமுடியாமல் முடங்கிக் கிடக்கின்றனர்.

தென் தமிழீழம்போல வட தமிழீழத்தையும் ஆக்குவதற்குத்தான் சிறீலங்கா அரசும் இராணுவமும் இந்தப் பாடுபடுகின்றன. அப்படியொரு இருண்ட நிலையை வராமல் தடுப்பது தமிழ் இளம் பெண்களினதும் இளைஞர்களினதும் கையில்தான் இருக்கிறது. வடதமிழீழத்துக்கு வரவிருக்கும் ஆபத்தை நீக்கி, தென்தமிழீழத்தை மீட்டெடுக்க ஒவ்வொருவரும் தமது முழுப் பலத்தையும் பயன்படுத்தி தாயகத்தைக் காக்கும் பணியில் இறங்க வேண்டும்.

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மணலாறு எங்கள் இதயபூமி; அதில் வாளை செருகுவது தான் எதிரியின் வேலை. மணலாற்றில், 5 சிங்கள இராணு முகாம்கள் மீது விடுதலைப் புலிகள் அண்மையில் மேற்கொண்ட தாக்குதலுக்கான அரசியல் பின்னணியை, அதன் முக்கியத்துவத்தை நாம் புரிந்து கொள்ளல் வேண்டும்.

இதனை நாம் உணர்ந்து கொண்டால், மணலாறு, எவ்வித விலை கொடுத்தும் உடனடியாக மீட்கப்பட வேண்டியதொன்று என்பதை அறிந்து கொள்வோம்.

யில் என்பது நினைவு கூரத்தக்கது. ஆயினும், இதற்கான திட்டங்கள் 1983-ம் ஆண்டின் முன்பே தீட்டப்படத் தொடங்கி விட்டன.

www.tamilarangam.net

மகாவலி அபிவிருத்தி அமைச்சின் ஒரு முக்கிய அதிகாரியான கேர்மன் குணரத்ன, இதற்கான திட்டம், சர்வதேச அமைப்புக்களில் பதவிகளை வகித்த (சிங்கள) நிபுணர்களால் வரையப்பட்டதென்றும், அதனை நடைமுறைப்படுத்துபவராகத் தான் இருந்ததாகவும் குறிப்பிடுகின்றார். எல்லாப் போர்களும், நிலத்துக்காகவே நடைபெற்றுள்ளன

லைக்கு 50 கி.மீ. வடக்கே, கடந்த மே, 25-ல் கல்லாறவ கிராமத்தில், சிங்கள மீன்பிடிக்குடியிருப்பு தாக்கப்பட்டு, அங்கிருந்த குடியேற்ற வாசிகள் கொல்லப்பட்ட சம்பவத்தையும், அதைத்தொடர்ந்து, திம்புலாகம துறவி என்றழைக்கப்படும், மாத்தறை கித்தலகம சிறீ சிலாங்கார தேரர் மே, 26-ல் கொல்லப்பட்ட சம்பவத்தையும் குறிப்பிடுதல் வேண்டும்.

மிக அண்மைக்காலத்தில், நீர்கொழும்பிலிருந்து சென்று குடியேறிவர்களே அவர்கள் என்றும்,

# தாயின் இதயத்தில் உ

மணலாற்றின் முக்கியத்துவத்தை, அதனை அபகரிக்க வேண்டும் என்ற அரச செயல்பாட்டை 1983-ம் ஆண்டிலிருந்து அதிகமாகக் காண்கிறோம். கென்ற் டொலர் பாம் (Kent dollar farm) போன்ற சிங்களக் குடியேற்றங்கள் அப்பகுதியில் ஸ்திரப்படுத்தப்பட்டதும், ஒதியமலையில் தமிழ்மக்கள் படுகொலைசெய்யப்பட்டுத் துரத்தப்பட்டதும், 1983-ம் ஆண்டின் பிற்பட்ட காலப்பகுதி

என்று கூறும் அவர், அந் நிலப் பகுதிகளில், ஈழக்கொள்கைக்கு எதிரான, நிலப்பசியுள்ள குடியானவர்களைக் குடியேற்றுவதன் மூலம், திருகோணமலையைக் கிளர்ச்சிக்காரரிடமிருந்து பாதுகாப்பதோடு, சிறிலங்காவின் நில ஒருமைப்பாட்டையும் பேணமுடியும் என்று தெரிவித்துள்ளார்.

இச்சந்தர்ப்பத்தில் திருகோணம

அவர்களைப் பாதுகாக்க ஒரு இராணுவ மினி முகாம் அமைக்கப்பட்டு, இராணுவத்தினர் நாலாபுறங்களிலும் காவலில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் என்றும் மே, 28-ம் திகதி 'sunday island' பத்திரிகை எழுதியிருந்தது.

சந்திரிகா குமாரதுங்கா ஆட்சிக்கு வந்த பின்னரே, இக்குடியேற்றம் இடம்பெற்றதை சிறீலங்கா ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினியின் முன்னாள் தலைவர் வசந்தராஜா "சிறிலங்கா அரசாங்கம், புதியதான இராணுவ ஆட் சேர்ப்புக்களைச் செய்ததோடு, திருகோணமலைப் பகுதியில், புதிய குடியேற்றங்களை சம்பிரதாயபூர்வமாக உருவாக்கியதும், பேச்சுவார்த்தையின் போது இருக்கவேண்டிய பரஸ்பர நம்பிக்கைக்கு ஆப்பு வைக்கும் காரணங்களாக இருந்தன" என்று விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தை முறிந்தமை குறித்துக் கூறும் போது குறிப்பிட்டார்.

இதேவேளை, பொலநறுவ, மட்டக்களப்பு ஆகிய எல்லையோரப் பகுதிகளில், எவ்வாறு திம்புலாகமத் துறவி செயல்பட்டார் என்பது மிகவும் உன்னிப்பாக அவதானிக்கப்படவேண்டிய விடயம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஊடுருவிய சிங்கவாள்!



கேர்மன் குணரத்னா எழுதிய 'For a sovereign state' என்ற நூலில், இப் புத்தபிக்கு ஒரு போர்வீரப் பிரபுவாக 'warrior lord' வர்ணிக்கப்பட்டுள்ளார். சிங்கள தேசியவாதத்தால் ஆசீர்வதிக்கப்பட்ட இப் புத்தபிக்கு, துட்டகைமுனுவின் வாரிசு என்றும் அழைக்கப்பட்டார். ஒரு இனம், ஒரு மதம், ஒரு மொழி என்பதே இவரது போர்க்கோஷங்களாக விளங்கின. மதுறு ஓயா ஆற்றங் கரையில், மட்டக்களப்பின் எல்லைப்பகுதிகளில், குளங்களை அண்டிய பகுதிகளில், விகாரைகளை அமைப்பதும், ஆயுதம் தாங்கிய விவசாயிகளை, விவசாய நிலங்களில் குடியேற்றுவதுமே இவரது செயல்பாடாக இருந்தது.

இந்தச் செயல்பாட்டை, அரசாங்கங்களின் மறைமுக ஆதரவோடு, 1983-ம் ஆண்டிலிருந்து செய்து வந்தார். 1983-ம் ஆண்டு, செப்டெம்பர் மாதம், தென்பகுதியிலிருந்து பலரக வாகனங்களில் கொண்டுவரப்பட்ட குடியேற்றவாசிகளுக்கு ஆற்றிய உரையில் கித்தலகம தேரர் கூறுகிறார், "நீங்கள் இங்கு கூடியிருக்கிறீர்கள். நீங்கள் இங்கு வந்ததன் நோக்கம், ஒரு துண்டு நிலத்தைப் பெற்று விவசாயம் செய்வதற்காக மட்டுமல்ல. வேறொரு உயர்ந்த நோக்கமும் உள்ளது. எங்கள் நாடு ஒரு மோசமான காலகட்டத்துள் சிக்கியுள்ளது. பிரிவினைவாதிகளால் நாங்கள் நான்கு புறமும் மிரட்டப்படுகிறோம். பிரிவினைவாதிகளுக்கு தேவையானது நிலம். ஈழம் என்று கூறப்படும், தொடர்ச்சியான நிலப்பரப்பு. நீங்கள் அத்தொடர்ச்சியை உடைக்க காரணமாக இருக்கப் போகிறீர்கள். சிறிலங்காவின் ஒருமைப்பாட்டுக்காக, கடைசித் துளி இரத்தம் உள்ளவரை நாம் போராட வேண்டும். இது தான் உங்கள் கடமை. இது தான் உங்கள் பயணம். நீங்கள் தான் முன்னணிக் காவலர்கள். மன்னன் துட்டகைமுனுவை நினைவு கூருங்கள். இது ஒரு புனிதப் பயணம். இதில் பின்வாங்குதல் என்பது கிடையாது. எனவே முன்னோக்கிப் போவோம்."

இப் புத்த பிக்குவின், தமிழர் தாயகத்துக்கு விரோதமான செயல்பாட்டில், கடந்தகால U.N.P. அரசு மட்டுமல்ல, தற்போதைய சந்திரிகா அரசும் துணையாகச் செயல்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஆகவே இங்கு ஒரு விடயம் தெளிவாகப் புலனாகிறது. சிங்கள அரசாங்கங்களின் ஒரே கொள்கை தமிழர் தாயகத்தை இராணுவ முகாம்கள், சிங்கள குடியேற்றங்கள் மூலம் துண்டாடுவதே. அதன் மூலம், வடக்கு கிழக்கென தமிழர் தாயகத்தை பிரித்து, தமிழீழத் தலைநகரான திருகோணமலையை முழுமையாக ஆக்கிரமித்தலே அரசாங்கத்தின் திட்டமாக உள்ளது.

நீண்டகாலமாக, ஆற்று அபிவிருத்தித் திட்டங்கள் (மகாவலி உட்பட) என்ற போர்வையில் நடைபெற்ற சிங்களக் குடியேற்றங்கள் மட்டுமல்ல, இராணுவ முகாங்களைச் சுற்றி, பௌத்த விகாரைகளைச் சுற்றி அமைக்கப்பட்ட குடியேற்றங்களும் நில ஆக்கிரமிப்பு என்ற ஒரே நோக்கம் கொண்டவை. எனவே, பொலநறுவை, மட்டக்களப்பு எல்லைப்புறத்திலிருந்து, திருகோணமலையின் வடபகுதியை உள்ளடக்கிய கரையோரப்பகுதி வரை மட்டுமல்லாது, கொக்குத்தொடுவாய், கொக்கிளாய் ஆகிய முல்லைத்தீவுப் பகுதிகளை உள்ளடக்கியதாக இந்த ஆக்கிரமிப்பு அமைகிறது. இராணுவ முகாங்களும், ஆயுதம் தாங்கிய குடியேற்றவாசிகளும் கலந்து அமைந்த அப்பகுதியை வட கிழக்கைப் பிரிப்பதற்கான 'இராணுவ வேலி' என்றும் கூறலாம். தமிழீழத் தாயின் இதயத்தை ஊடுருவிப் பாய்ந்துள்ள சிங்களச் சிங்கத்தின் வாளானது, தாயகத்தை இரு கூறாக்கிச் சிதைக்கும் நாசகார எண்ணம் கொண்டது. இதனை முறியடிக்கும் நோக்கிலேயே, மணலாற்றில் அமைந்திருந்த 5 முகாங்கள் மீது விடுதலைப் புலிகள் அண்மையில் தாக்குதலை மேற்கொண்டனர். சிறிலங்கா அரசாங்கத்தின் தீர்வுத்திட்ட யோசனைகள் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட நேரத்திலேயே இத்தாக்குதல் இடம்பெற்றது. இத்தீர்வுத்திட்ட யோசனைகளின் பிரகாரம் இவ்வளவு காலமும் சிறிலங்கா அரசாங்கங்கள் மேற்கொண்ட திட்டமிட்ட குடியேற்றங்கள் அங்கீகரிக்கப்படுவது மாத்திரமல்லாமல், புவியியல் ரீதியாக, தமிழர் தாயகத்தை துண்டாடுவதாகவும் அமைந்துள்ளது. வட கிழக்குப் பகுதியில் உள்ள சிங்கள மக்களின் கரிசனைகளைக் கருத்திற் கொண்டு, இக்குடியேற்றப் பகுதிகள் சிங்கள மாகாணங்களோடு இணைக்கப்படும் என்று தீர்வுத்திட்ட ஆலோசனைகள் தெரிவிக்கின்றன. இதன் பிரகாரம், கொக்குத்தொடுவாய், கொக்கிளாய் ஆகிய கடற்கரையோர, பறவைகள் சரணாலயப் பகுதிகள் மாத்திரமல்லாமல், திருகோணமலைத் துறைமுகமும் பறிபோகின்றது. சிங்களக் குடியேற்றங்களால், தமிழ் அன்னையின் இதய நாளம் அறுக்கப்படுகின்றது. அவளின் உயிரைக் காப்பாற்ற மணலாற்றில் போராளிகள் குருதித் தானம் செய்தார்கள். அவர்களது தியாகம் மகத்தானது. இதய பூமி மீட்கப்படும் வரை போராட்டத்துக்கும் ஓய்வில்லை.

**- வளவன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



www.tamilarangam.net

தேசியத் தலைவருடன் கடற் கரும்புலிகளான மேஜர் தங்கமும் மேஜர் செந்தாளனும்

# காங்கேசன்துறை: புலி பாய்ந்த கடல்!

நரேஸ்,

பிரபாகரனையே பிரமிக்கச்செய்த அவரது தலைசிறந்த படைவீரர்களுள் ஒருவன்.

புலிகளின் ஆற்றல் மிகு கடற் போர்த் தளபதி.

கிளாலிக் கடற் சமர் அரங்கில் மாவீரன் சாள்ஸ் களப்பலியாகிய பின்னரே, கடற் புலிகளின் தாக்குதற் படைத் தளபதியாக பொறுப்பேற்ற போதிலும் -

கடற்புலிகளின் சரித்திரத்தில் மிகப்பெரும் பகுதியோடு, நரேஸ் பின்னிப் பிணைந்தவனாகவே உள்ளான்.

"கடற்புலிகளின் சிறப்புத்தளபதி போல இயங்கியவன் அவன்தான்" என்கிறார், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி.

லெப். கேணல் நரேஸ்
சிவராஜசிங்கம் நவராஜன்
திருகோணமலை.

கண்களில் நீர்வழிய நீர்வழிய நாங்கள் மண் அள்ளித் தூவி விதைகுழியவிட்ட அந்தத் தோழன்-

ஐந்தாண்டுகளுக்கு முன்பு 'ஈரோஸ்' அமைப்பு புலிகளோடு சங்கமித்த போது கடற்புலியாகியவன்.

அதன் பிறகு அவனில்லாமல் கடலில் புலிகள் பாய்ந்ததாகச் சரித்திரமே இல்லை.

அவனுடைய கதை ஒரு நீண்ட காவியம்.

அதை முழுமையாக எழுதுகிற போது உலகப் புகழ் பூத்த புலிகள் இயக்கத்தின் கடற்போர் வரலாறாய் அது விரியும்.....

காங்கேசன்துறைப் 'புலிப் பாய்ச்சல்' வரையும்.

★★

"எட்டாண்டுகளுக்கு முந்திய வடமராட்சித் தாக்குதலை விடவும் உயர்ந்த இராணுவ பரிமாணத்தைக் கொண்டது" என வர்ணிக்கப்பட்ட 'முன்னோக்கிப் பாய்தல்'

விடுதலைப் போராட்டத்தின் அத்திவாரத்திற்கு வைக்கப்பட்ட குறி.

"மைய யாழ்ப்பாணமே, பாய்ந்து முன்னேறுவதன் இலக்கு" என்று, படைத் தளபதிகள் பறைசாற்றிக் கொண்டார்கள்..

பல அரசியல் மேலாண்மைகளை எய்தும் சந்திரிகா அரசுத் தலைமையின் உள் நோக்கத்திற்காக நகர்த்தப்பட்ட படையெடுப்பு-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மூன்று நாட்களில் முன்னூறு மக்களைப் படுகொலைசெய்து முன்னேறி வந்தது.

"திறமையின்மையாலும், பலவீனத்தாலும் சிங்கள தேச வீரர்களின் போராற்றலுக்கு எதிர் நிற்க முடியாமல், புலிப் பயங்கரவாதிகள் யாழ்ப்பாணத்தை விட்டுத் தப்பி ஓடிக் கொண்டிருக்கிறார்கள்" என்று சிங்களத் தளபதிகள் கொழும்பில் மார் தட்டிக் கொண்டார்கள்.

'முன்னோக்கிப் பாய்தல்'- புலிகள் இயக்கத்தின் போரியல் வல்லமைக்கு விடுக்கப்படும் பெரும் சவாலாகவும் பரிமாணம் பெற்றது.

பகைவனுக்குப் படுதோல்வியைப் பரிசளிக்க, தலைவர் முடிவெடுத்தார்.

தரையிலும் வானிலும் கடலிலும், முப்படைகளுக்கும் அதனைப் பகிர்ந்தளிக்கவும் எண்ணினார்.

அவரது எண்ணங்கள் பகைவனின் மடியில் நிதர்சனமாகின.

'முன்னோக்கிப் பாய்தல்' மீது நிகழ்ந்தது 'புலிப் பாய்ச்சல்'! படையெடுப்பின் ஒவ்வொரு அங்கத்திலும் விழுந்தது அடி.

தாக்குதலுக்குத் தயாரான நிலையில் கடற் கரும்



www.tamilarangam.net

நிலவழியாக நகர்ந்த தரைப் படையை எதிர்த்து முறியடிக்கும் சம நேரத்தில்-

வான் வழியால் துணை சேர்க்கும் விமானப்படையின் முதுகெலும்பை உடைக்கும் அதேவேளையில்-

படையெடுப்பின் உயிர்நாடியென இயங்கிய கடல் வழி விநியோகத் திற்கும் அடி கொடுக்க வேண்டிய தேவையும் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது.

அது ஒரு உடனடி ஏற்பாடு.

குறுகிய காலத் தயார்ப்படுத்தல்.



தேசியத் தலைவருடன் கடற் கரும்புலி மேஜர் தமிழினி

'முன்னோக்கிப் பாய்தல்' சமர் முனைக்குப் புதிய துருப்புக்கள் அனுப்பப்பட்டு, சிங்களப் படையணிகளுக்கு புத்தூக்கம் அளிக்கப்படுவதைத் தடுப்பதற்கும்-

படையெடுப்பு முனைக்கு இடையறாது மேற்கொள்ளப்பட்ட படைக்கல வழங்கலை நிறுத்துவதற்கும் மட்டுமன்றி

குடாநாட்டை முற்றுகையிட்ட போரபாயத்தை உடைத்தெறியவும், மக்களைப் பீடித்த பய பீதியைத் தகர்த்து எறியவும் என-

புலிகள் மேஜர் தங்கமும் மேஜர் செந்தாளனும்



திடீரென ஒழுங்கமைக்கப்பட்ட 'புலிப்பாய்ச்சல்' தாக்குதல் திட்டத்தின் ஒரு அங்கமாகவும் நிகழ்த்தப்பட்ட முன்னேற்பாடுகள் செய்யப்படாத அதிரடி.

காங்கேசன்துறை கடற் படைத் தளம்-

வடபிராந்தியத்தில், சிங்களக் கடற்படையின் நிர்வாகச் செயலகமான காரைநகருக்கு அடுத்தபடியான ஒரு தளமாகவே இருப்பினும் கூட-

வடக்குப் போர் அரங்கின் தனி ஒரு வழங்கற் பாதையான கடல் வழி மூலம் - முப்படையினருக்குமான விநியோகத்தை மேற்கொள்ளும் பிரதான இறங்குதுறை என்ற வகையில், அது கேந்திர முக்கியத்துவம் பெற்று தனித்துவமானது.

மிக மிகப் பலத்த பாதுகாப்புக்கு உட்பட்ட அந்தப் படைத்தளத்தின் கடற் பரப்பிற்குள் ஊடுருவித் தாக்குதலை நிகழ்த்துவது என்பது, ஒரு சுலபமான காரியமல்ல என்பதும் எமக்குத் தெரிந்திருந்த போதும்...

யாழ். குடா நாட்டிற்குள் உருவாகியிருந்த நெருக்கடியான இராணுவச் சூழல் காரணமாக, காங்கேசன்துறைத் தளம் மீதான 'புலிப் பாய்ச்சல்' தவிர்க்க முடியாததாகியிருந்தது.

இழப்பைக் கொடுத்தல், படையெடுப்பிற்குத் தடங்கலை ஏற்படுத்தல், எதிரிகளைத் திகைப்பிற்குள் ஆழ்த்துதல் போன்ற போர்த் தந்திரோபாய ரீதியான நோக்கங்களிற்காக மட்டுமன்றி-

எம் நீண்ட கால [illegible] ஒரு கட்டளைக் கப்பலை மூழ்கடிக்கும் இராணுவ இலக்கை எய்துவதற்காகவும்தான் தாக்குதல் மையமாக, காங்கேசன்துறையே தேர்ந்தெடுக்கப்பட்டது.

மின்காந்த அலை அதிர்வியக்கம் மூலம் தன்னிலையிலிருந்து வானூர்திகள், கடலூர்திகள் முதலியவற்றின் நிலைகளைக் கண்டறியும் ஆற்றல் மிகு 'தொலைநிலை இயக்க மானிகள்' பொருத்தப்பட்ட 'எடித்தாரா', 'அபிதா', 'விக்கிரம' ஆகிய பெயர்களைக் கொண்ட மூன்று பாரிய கப்பல்கள் மேற்கு, வடக்கு, கிழக்குப் பிராந்தியங்களுக்கான சிங்களக் கடற்படையின் கட்டளைப் பீடங்களாகச் செயற்படுகின்றன.

புலிகளுக்கு எதிரான கடற் சண்டைகளில் ஈடுபடும் போர்ப்படகுகளின் மூளையாகச் செயற்பட்டு, அவற்றை வழிநடாத்தும் கட்டளைப் பணியை, இந்தத் தாய்க் கப்பல்களே ஆற்றுகின்றன.

அந்த வகையில் ஒரு கட்டளைக் கப்பலை மூழ்கடிப்பதானது ஒரு இமாலய சாதனையும், இராணுவ ரீதியான ஒரு பெரு வெற்றியுமாகும். 1990-ம் ஆண்டு யூலை 10-ம் நாள் காந்தரூபன், வினோத், கொலின்ஸ் ஆகிய கரும்புலி வீரர்கள் தாக்க முனைந்ததிலிருந்து-

1991-ம் ஆண்டு ஏப்ரல் 5-ம் நாள் சிதம்பரம், ஜெயந்தன் ஆகிய கரும்புலி வீரர்கள் தாக்கியது ஊடாக-

1994-ம் ஆண்டு ஒகஸ்ட் 16-ம் நாள் காங்கேசன்துறையில் அங்கயற்கண்ணி ஊடுருவித் தாக்கியது வரை-

எங்கள் போராட்டத்தின் சரித்திரத்தில், பொன் எழுத்துக்களால் பொறித்து வைக்கப்படவேண்டிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஒரு வரலாற்றுச் சாதனையாகும்.

'நீர்மேல் தாக்குதற் கரும்புலிகள்', 'சுலோஜன் நீரடித் தாக்குதற் கரும் புலிகள்', 'சாள்ஸ் சிறப்புக் கடற் படையணி', 'நளாயினி சிறப்புக் கடற்படையணி', ஆகிய கடற் புலிக ளின் நான்கு தாக்குதற் பிரிவுகள் இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்தப் பட்டன.

கடற்புலிகளின் உயர் தளபதிக ளினது நெறிப்படுத்தலின் கீழ் -

லெப். கேணல் மாதவி, தாக்கு தலில் பங்கேற்ற பெண்கள் படைப் பிரிவுகளை வழி நடாத்தினார்.

லெப். கேணல் நரேஸ், களமு னைக் கொமாண்டராக முழுத்தாக் குதலையும் வழிநடாத்தினார்.



**லெப். கேணல் நரேஸ்**
**சிவராஜசிங்கம் நவராஜன்**
**திருக்கோணமலை**

மாதவி,

கடற்புலிகள் மகளிர் படைய ணியை நளாயினி விட்டுப் போன இடத்திலிருந்து தொட்டு வளர்த்தெ டுத்த அதன் சிறப்புத்தளபதி.

'அங்கயற்கண்ணி நீரடித் தாக்கு தல் பிரிவு', 'நளாயினி சிறப்புக் கடற்படையணி', 'மங்கை படகுக் கட்டுமானப் பிரிவு' என, கடற் புலிகளின் அணி கிளை பரப்பியது அவளுடைய காலத்தில் தான்.

விடுதலைப் புலிகளின் கடற் படைக்காக, அவளது வழிப்படுத்த லின் கீழ், 'மங்கை படகுக் கட்டு மானப் பிரிவு' வடிவமைத்த 40 அடிக்கு மேலான நீளம் கொண்ட ஒரு புதிய வகைச் சண்டைப் படகு, ஒரு அருமையான உருவாக்கம். நேரடியாகப் பரீட்சித்துப் பார்த்து தலைவர் அவர்கள் பாராட்டியது, வெறுமனே பண்புக்காக அல்ல; கடற்சண்டைகளில் அவை சிறந்த பயன்பாட்டைத் தரும் என்ற நம்பிக்கையிலும் தான்.

www.tamilarangam.net

தனது ஓய்வற்ற உழைப்பின் பய னாக கடற் பெண்புலிகளை, தனித் துச் சண்டையிடும் இன்னொரு வளர்ச்சிக் கட்டத்திற்கு பரிணமிக் கச் செய்த பெருமைக்குரியவள்.

ஆண்கள் துணையின்றி தனித்த படகுகளில், தனித்த பிரிவாக, கடற் சண்டைகளிலும் பெண்கள் ஈடுபடு கின்ற இன்றைய காலம் மாதவி தோற்றுவித்தது தான்.

மண்டைதீவில் அப்படித்தான்.

காங்கேசன்துறையிலும் அப்ப டித்தான்.

யூலைத் திங்கள் 16-ம் நாள் -

அதிகாலை 1.00 மணி,

துறைமுகத்தின் உள்ளே 'எடித் தாரா' கட்டளைக் கப்பலோடு, 3 தரையிறங்கு கலங்கள், மேலும் ஒரு கப்பல் என்பன இராணுவத் தளபா டங்களை இறக்கிக் கொண்டிருந்தன.

துறைமுகத்தின் வெளிப்பகுதியில் - போர்க்கலங்கள் பலம் வாய்ந்த வியூகமிட்டு வளைத்து நின்றன.

'டோறா' அதிவேகத் தாக்குதற் படகுகள் எட்டு; 'சங்காய்' பீரங்கிப் படகுகள் மூன்று.

இரும்புக் காவல்.

அலைமடியில் தவழ்ந்து அமைதி யாக நெருங்கின புலிகளின் படகுகள்.

'சுலோஜன் நீரடித் தாக்குதற் பிரிவின்' வீரர்களான நியூட்டனும், தங்கனும் வெடிகுண்டுகளோடு 'எடித்தரா'வை அண்மித்தார்கள்.

ஆரம்பித்தது உக்கிரமான சண்டை.

காங்கேசன் கடற்பரப்பு போர்க் களமாய் மாறியது.

எம் போராட்ட வரலாறு தன் னில் பதித்துக்கொண்ட மிகப் பெரும் கடற் சமர்.

'எடித்தரா'வின் அடித்தளத்தை, வெடிகுண்டுகளோடு அணைத்து கரும்புலிகள் சிதறடித்தார்கள்.

அது நான்கு வரிகளில் எழுதி விடும் சம்பவம் அல்ல; நாற்ப தாண்டு காலச் சரித்திரத்தை மாற்ற அவர்கள் புரிந்த அரும்பெரும் செயல்! இராப்பகலாய் பட்ட கஷ் டங்களின் பெறுபேறு; வார்த்தைக ளால் வர்ணிக்க இயலாத அளப் பரிய உயிர்த்தியாகம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பெண் கரும்புலிகளின் ஒரு வெடிகுண்டுப் படகு, தரையிறக்கும் கலம் ஒன்றை நெருங்கியது. அசுர வேகம். மிக அண்மை...!

போர்க்களங்கள் அபூர்வமா னவை. அவற்றின் பொதுவான இயல்பு என்னவெனில், நினைத்துப் போவது நிகழாமல் போகும்; நிகழ்ந்துவிடுவது நினையாததாய் இருக்கும்.

வெடிகுண்டுப் படகு சன்னங் கள் பாய்ந்து சேதப்பட்டுவிட தரை யிறக்கு கலம் தாக்கப்படவில்லை.



**லெப். கேணல் மாதவி**
**திருநாவுக்கரசு திருச்செல்வி**
**இன்பருட்டி, அல்வாய் வடக்கு**

ஐந்துமணி நேரச் சரித்திரச் சமர் முடிந்து விடியும்பொழுதில் எங்கள் தாக்குதலணிகள் களத்தைவிட்டு வெளியேறின.

நரேஸ் உயிரோடு வரவில்லை....

மாதவியின் உடல்கூட வரவில்லை..

நியூட்டன், தங்கன், தமிழினி வரவில்லை.


தோளோடு தோள் நின்று களமாடிய பதினொரு தோழர்கள் வரவில்லை.

பூநகரிச் சமரின்போது நாகதே வன்துறையில் கைப்பற்றிய விசைப் படகு ஒன்றும் மூழ்கிப்போனதால் திரும்பி வரவில்லை...!

◎

# அன்றைய நினைவோடு திறந்த இன்றைய வெற்றிக் களம்!

www.tamilarangam.net




*1990-ம் ஆண்டு ஒகஸ்ட் 25-ம் நாள்.*

யாழ்ப்பாணக் கோட்டையில் சிக்கியிருந்த தனது சிப்பாய்களைக் காக்க சிங்களப்படை மண்டை தீவை நோக்கி முன்னேறியது; தடுக்கும் ஆபத்தான ஒரு முயற்சியில் புலி வீரர்கள் சண்டையிட்டனர்.

சுற்றிவரக் கடல். வெட்டை வெளித் தரை. நாற்புறமும் சூழ்ந்து தாக்கிய பகைவனோடு நடந்த அந்தச் சண்டை துயரமானது.

எங்களது 44 வீரர்களை அன்று நாங்கள் பறிகொடுத்தோம்.

அது நடந்து ஐந்து ஆண்டுகளின் பின்னர் -

*1995-ம் ஆண்டு, யூன் 28ஆம் நாள்.*

அன்றைய நினைவுகளைச் சுமந்த படி-

யாழ்ப்பாணக் கடலைக் கடந்து நகர்ந்த புலிவீரர்கள், மண்டைதீவு சிங்களத் தளத்தினுள் பூகம்பத்தை விளைவித்தனர்.

யாழ். மாவட்டத் தாக்குதற் பிரிவு, வன்னி மாவட்டத் தாக்குதற் பிரிவு, கடற்புலிகளின் தாக்குதற் பிரிவு, மகளிர் படைத் தாக்குதற் பிரிவு ஆகியவற்றின் தளபதிகள் அணிகளை நடத்திச் செல்ல-

தலைவர் பிரபாகரனின் நெறிப்படுத்தலின் கீழ்-

தளபதிகள் சொர்ணம், சூசை ஆகியோரின் துணையோடு, தளபதி பானு ஒட்டுமொத்தமான தாக்குதல் திட்டத்தை வழி நடத்தினார்.

அன்று எங்கள் 44 வீரர்களைச் சுற்றிவளைத்து வீழ்த்திய அதே நிலத்தில் 120 சிங்களப் படையினர் பிணங்களாய் சுருண்டனர்.

300-ற்கும் மேலான சுடுகருவிகளையும், 2 இலட்சத்திற்கு அதிகமான ரவைகள், வெடிப்பொருட்களுடன் ஏராளமான படை உபகரணங்களையும் விட்டு வெளியேறினர்.

கடற்புலிகள் தாக்குதலணியின் முக்கிய தளபதிகளுள் ஒருவரான லெப். கேணல் சூட்டியும் இன்னும் ஒன்பது புலிவீரர்களும் இந்த வெற்றிச் சமரில் களப்பலியாகினர்.

மண்டைதீவுப் படைத்தளமானது, அதன் மீது பெருமெடுப்பிலான ஒரு தாக்குதலை நடாத்த முடியாத புவியியல் அமைப்பையே கொண்டிருக்கின்றது. நாற்புறமும் கடலால் சூழப்பட்ட, வெட்டைத் தரையான ஒரு தீவே அதுவாகும். அத்தோடு-

நூற்றுக்கணக்கான காவல் நிலையங்களையும், விசேட கடல் கண்காணிப்புக் கோபுரங்களையும் கொண்டு ஒரு பிரதான முகாமிலும் 3 உப முகாங்களிலும் நிலைகொண்டிருந்த படையினருக்குள் - பல நூற்றூக்கணக்கான புலவீரர்கள் வெற்றிகரமாக ஊடுருவித் தாக்குதலை நிகழ்த்திவிட்டு வெளியேறியமை, உலக இராணுவ வல்லுனர்களையே வியப்பில் ஆழ்த்தி விட்டது.

தாக்குதலை நிகழ்த்திய புலிப் படையணிகள் உச்சிப் பகற் பொழுதிலேயே நீரேரி கடந்து மீண்டு சென்றதைத் தடுக்க முடியாது, சிங்கள முப்படைகளும் பரிதவித்து நின்ற நிலை சிங்களப் பேரினவாதத் தலைமையைத் தலைகுனியச் செய்து விட்டது.

**மண்டைதீவு வெற்றி: தலைவரோடு தளபதிகள்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# தீர்வுத் திட்டம்: இராணுவ

சந்திரிகா அரசாங்கம், முன் வைத்த தீர்வுத்திட்ட யோசனைகள் நல்லெண்ணத்தோடு வைக்கப்படவில்லை. அரசாங்கத்தின் இராணுவத் தீர்வுத்திட்டத்தை மூடிமறைக்கும் முகமூடியாகவே இது வைக்கப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்ததானது பொருத்தமான உருவகமாகவே உள்ளது. நீதியான, நிரந்தரமான சமாதானத்தைக் கொண்டு வருவதற்காக இவ் யோசனைகளை அரசாங்கம் முன்வைக்கவில்லை. விடுதலைப் புலிகளை அழித்தொழிக்கும் இராணுவ தந்திரோபாயத் திட்டத்தின் ஓர் அம்சமாகவே இது முன்வைக்கப்படுகிறது.

இப்படியான ஒரு திட்டத்தை வைப்பதன் மூலம், தமிழ் மக்களைக் குழப்பி விடுதலைப் புலிகளிடமிருந்து அவர்களை அந்நியப்படுத்தலாம் என்று சந்திரிகா கனவு காண்கிறார். மேலும், உலகத்தை ஏமாற்றி, தனது இனப்படுகொலை ரீதியான யுத்த நடவடிக்கைக்கு அங்கீகாரத்தையும், உதவிகளையும் பெறலாம் என்றும் நினைக்கிறார். இத்தகைய நாசகார திட்டத்தை, சந்திரிகா அம்மையார், பௌத்தமத பீடத் தலைவர்களின் ஆலோசனையின் பேரில் செய்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பௌத்த மதபீடம், இனப்பிரச்சினையும், அது தொடர்பாக எழுந்த போரும் முடியும் வரை ஜனாதிபதி முறை தொடர்ந்திருக்க வேண்டும் என்று ஆலோசனை கூறியது. மேலும், விடுதலைப் புலிகள் அழித்தொழிக்கப்படும் வரை, எவ்வித அதிகாரப் பரவலாக்கல் திட்டமும் நடைமுறைப்படுத்தக் கூடாது என்றும் ஆலோசனை வழங்கியது. இவை இரண்டுக்கும் இணக்கம் தெரிவித்த ஜனாதிபதி சந்திரிகா, இவை இரண்டையும் நிறைவேற்றும் உத்தியாகவே, இரண்டையும் இணைத்த தீர்வுத் திட்ட யோசனைகளை முன்வைத்தார். விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டால், அதிகாரப் பரவலாக்கல் திட்டம் எதையும் நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. இரண்டு விடயங்களும், பாராளுமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்பட்டால், மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவையான இந்த இரண்டு விடயங்களும் (1. ஜனாதிபதி முறை ஒழிப்பு - 2. அதிகாரப்பரவாலக்கம்) நிறைவேற்றப்படப் போவதில்லை. எனவே ஜனாதிபதி ஆட்சிமுறை தொடரும். இப்படியான சந்தர்ப்பத்தில், ஒரு இடைக்கால தேர்தலை வைத்து, தனது அரசியல் ஸ்திரத்தைப் பலப்படுத்திக்கொள்வதும் சந்திரிகா அம்மையாரின் இன்னொரு முக்கிய நோக்கமாக உள்ளது.

சந்திரிகாவின் இத்தகைய நோக்கங்களின் பின்னணியில், சிறீலங்கா அரசாங்கத்தின் தீர்வுத்திட்ட யோசனைகள் கடக்க வேண்டிய தடைகளையும், அடிப்படைக் குறைபாடுகளையும் சிறிது ஆராய்வோம். சிறீலங்கா அரசாங்கத்தின் தீர்வுத்திட்டம், நடைமுறைப்படுத்தப்படாமல் போவதற்கான, அப்படி நடைமுறைப் படுத்தப்படுவதென்றால், அதனை மேலும் மலினப்படுத்துவதற்கான தடைகள் நிறைய உள்ளன. இத்திட்டம் அரசாங்கத்தின் முழுமையான திட்டமாக இராது, திருத்தப்படக் கூடிய யோசனைகளாக உள்ளன. சந்திரிகாவின் கூட்டணிக்குள்ளேயே இவ்வாலோசனைக்கு எதிர்ப்பு உண்டு. எதிர்கட்சியான U.N.P.-குள் இரண்டு பட்ட அபிப்பிராயங்கள் உண்டு. எனவே, இத்திட்டம் சட்ட வடிவம் எடுக்கும் வரை எவ்வித கருத்தும் சொல்வதில்லை என U. N. P. தீர்மானித்துள்ளது. மேலும், தீவிர இனவாத பௌத்த பீடங்களும், பிக்குகளும், பொதுஜன ஐக்கிய முன்னணியும், இத் தீர்வுத்திட்ட ஆலோசனைகளுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளன. இத்தகைய நிலையில், இத் திட்டமானது பாராளுமன்றத்தின் தெரிவுக் குழுவின் பரிசீலனைக்கும், கருத்தொற்றுமைக்கும் உட்பட உள்ளது. அங்கு இத்திட்டம் என்னென்ன மாற்றங்களுக்கு உட்படும் என்று கூறமுடியாது. எனவே இத் தீர்வுத்திட்ட யோசனைகளை முழுமையான திட்டமாக ஆராய்தல் வீண்வேலை. அடுத்ததாக, இது சட்ட வடிவமாக்கப்பட்டு, பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையால் நிறைவேற்றப்படல் வேண்



**வீதியால் ஒருவன்:**

ஒரு குகை ஓவியம்
அசைந்து போகுது.

**பெண்:**

ஏன் தம்பி நீ குகை
காலத்து காட்டு
மிராண்டியோ?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தந்திரோபாயத்தில் ஒரு அம்சம்

டும். அதுமாத்திரமில்லாமல், நாடு தழுவிய சர்வசன வாக்கெடுப்பில் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெறவும் வேண்டும்.

இத்திட்டத்தில் அடிப்படைக் குறைபாடுகள் பல உள்ளன. இத் திட்டம் விடுதலைப்புலிகளுக்கு முன்வைக்கப்படவில்லை. விடுதலைப் புலிகளுடன் பேசமாட்டோம் என்று அரசியல் யாப்பு அமைச்சர் G.L. பீரிஸ் மட்டுமல்ல சந்திரிகாவும் பல தடவை கூறியுள்ளார். சந்திரிகா ஒரு படி மேலேறி “துப்பாக்கி குழலினூடான தொடர்பை மட்டுமே புலிகளுடன் வைத்திருப்போம்” என்று தெரிவித்தார். ஏனைய தமிழ்க் குழுக்களுடன் பேசி இனப் பிரச்சினையைத் தீர்ப்பேன் என்று சந்திரிகா கூறும்போது, விடுதலைப் புலிகளை சிறீலங்கா அரசாங்கம் தமிழ் மக்களின் சட்டபூர்வ பிரதிநிதிகளாக அங்கீகரிக்கவில்லை என்பது தெளிவாகின்றது. ஒரு பேச்சுவார்த்தை வெற்றிபெற இவ்வங்கீகாரம் அவசியமும், முக்கியமுமானது.

தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறையின் காரணமாகவும், இதற்கெதிரான அமைதிவழிப் போராட்டங்கள் தோல்வியுற்ற நிலையிலும் ஆயுதப் போராட்டம் விடுதலைப் புலிகளால் முன்னெடுக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. எனவே ஆயுதப் போராட்டமானது சட்டபூர்வமானதெனவும், அதை நடத்துவோர் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எனவும் அங்கீகரிக்கப்படல் வேண்டும். இதுவே முறையான பேச்சுவார்த்தைக்கும், சரியான தீர்வுக்கும் அடிப்படை. இவ்வங்கீகாரத்தை, சர்வதேச நாடுகளும், சர்வதேச பல் நாட்டு அமைப்புக்களும் தர முன்வந்த போதிலும், சிறீலங்கா அரசாங்கம் இன்னும் முன்வரவில்லை. எனவே விடுதலைப் புலிகளை முக்கியமான (major) பிரதிநிதியென்றும், ஏனைய துரோகக் குழுக்களையும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்றும் வரையறுத்து சிறீலங்கா அரசாங்கம் செயல்படுகின்றது. இப்படியான வரையறைக்குள்ளேயே விடுதலைப் புலிகளுடன் கதைப்பேன்; அல்லாது போனால் கதைக்க மாட்டேன்; அல்லது இராணுவப் பாஷையிலேயே கதைப்பேன் என்கிறது அரசாங்கம். எமது விடுதலைப் போராட்டமும், விடுதலைப் புலிகளும் சட்டபூர்வமானவை; தமிழ் மக்களது எதிர்ப்புச் சக்தியை பிரதிநிதிபடுத்துபவர்கள் என்ற அங்கீகாரம் சிறீலங்கா அரசாங்கத்தால் தரப்படாதது மிகப் பெரிய குறைபாடாகும்.

இரண்டாவது, இத்திட்டம் நாடு தழுவியதாக, பல்வேறு பிராந்தியங்களுக்கான அதிகாரப் பரவலாக்கலாக உள்ளது. தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்றோ, அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டென்றோ, சிங்கள தேசியத்தோடு சமனாக கருதத் தக்கதாக தமிழ் மக்களது தேசியப் போராட்டம் வளர்ச்சி பெற்றுள்ளதையோ இத் திட்டம் அங்கீகரிக்கவில்லை. மேலும், அத் தேசிய இனத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் விடுதலைப் புலிகள் அரசாங்கத்தோடு சம அந்தஸ்து பெறத் தகுதிவாய்ந்தவர்கள் என்ற அங்கீகாமுரம் இல்லை.

தமிழ் மக்களது தாயக ஒருமைப்பாட்டை இத்திட்டம் அங்கீகரிக்கவில்லை. சிங்களக் குடியேற்றங்களை அங்கீகரித்த இத்திட்டம் தமிழர் தாயகத்தை துண்டாடுகின்றது.

பெரும்பாலான தமிழர் தாயகப் பகுதிகள், சிங்கள மாகாணங்களோடு நிரந்தரமாக இணைக்கப்பட்டு பறிபோகும் நிலை உள்ளது. அது மாத்திரமில்லாமல் சிங்களக் குடியேற்றங்கள், இராணுவ முகாங்களால் மணலாற்றுப் பகுதியில் தமிழர் தாயகம் புவியியல் ரீதியில் இரண்டாகப் பிரிக்கப்படும் நிதர்சனமான ஆபத்தும் உண்டு.


எனவே, சந்திரிகாவின் தீர்வுத் திட்ட யோசனைகளின் நோக்கம் என்னவென்று பார்த்தால், விடுதலைப் புலிகளை அழிப்பதும் தமிழ் மக்கள் மீது சிங்கள மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதுமே என்பது புலனாகும். பல் சமூகங்களுக்கிடையான சமத்துவம் என்ற போர்வையில் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை நிலைநிறுத்தும் இவ் நாசகார திட்டம் குறித்து தமிழ் மக்கள் விழிப்புடன் இருத்தல் வேண்டும். சர்வதேச சமூகத்தையும் இது குறித்துத் தெளிவுபடுத்தல் வேண்டும்.

**- திலகர் -**

**ஒருவர்:**
உவர் குமாரசாமி படித்த பெரிய மனிதன்.

**மற்றவர்:**
படித்த மனிதனுக்கு அளவு கோல் என்ன?

**ஒருவர்:**
எங்களுடைய அளவு கோல் சீதனம் தான்.



**ஒருத்தி:**
சுவாமி!

**சுவாமி:**
ஓம் பிள்ளாய்


**ஒருத்தி:**
ஒரு பெண் தன் மானத்தைக் காப்பாற்ற என்ன செய்ய வேணும் சுவாமி?

**சுவாமி:**
தங்கக் காப்பிலும் தற்காப்பு மேலானது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# The Greatest Escape

**— தர்மு -**




இரண்டு இரவுகள்.... கரிய இருள்.... கனத்த மழை... இந்தியாவின் 48-வது சுதந்திரதின விழா ஏற்பாடுகள் தமிழ்நாடு பூராவும் உறக்கமின்றி நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், தமிழீழ விடுதலைப் போரில் காயமடைந்து இந்தியாவில் சிகிச்சை பெற்று வரும் போது, இந்தியப் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்ட விடுதலைப் புலிப் போராளிகள் தமது விடுதலைக்கான, ஏற்பாடுகளைப் பூர்தி செய்து தமது இறுதிக்கட்ட வேலைகளில் இறங்கியிருந்தனர்.

1990-ம் ஆண்டிற்குப் பின்னர் விடுதலைப் புலிகள் எனவும், விடுதலைப் புலிகள் ஆதரவாளர்கள் எனவும் கூறப்பட்டு கைதுசெய்யப்பட்டு பலர் தமிழ்நாட்டில் உள்ள பல சிறைகளில் அடைக்கப்பட்டனர். இதில் ஒன்றுதான் வேலூர் சிறை. இது தமிழ் நாட்டிலுள்ள சிறைகளில் மிகவும் பாதுகாப்பானதும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது மாகும்.

வேலூர் சிறையின் ஒரு பகுதி 'திப்பு மஹால்' எனப் பெயர் கொண்டுள்ளது. இன்னுமொரு பகுதி 'ஹைதர் மண்டபம்' என அழைக்கப்படுகிறது.

சிறைபிடிக்கப்பட்டு வேலூர் சிறைக்குக் கொண்டுவரப்பட்ட விடுதலைப் போராளிகளில் 72 பேர் 'திப்பு மஹால்' சிறைக்கூடத்திலுள்ள 118 அறைகளிலும், போராளிகள் அல்லாத, தமிழீழ அகதிகள் சிலர் அருகில் இருந்த 'ஹைதர் மண்டபத்திலு'ம் அடைக்கப்பட்டிருந்தனர்.

மிகவும் பலத்த பாதுகாப்பைக் கொண்ட இந்தச் சிறையிலிருந்து, போராளிகளால் மிகவும் திட்டமிடப்பட்டு, சாதுரியமாகத் தோண்டப்பட்ட (Engineering marval) 153 அடி நீளமான சுரங்கப்பாதையூடாக 43 போராளிகள் தப்பிச் சென்றனர்.

"The great escape" என PTI செய்தி நிறுவனத்தினால் வர்ணிக்கப்பட்ட இந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கு மூன்று முதல் ஐந்து மாதங்கள் எடுத்திருக்கும் என தமிழ்நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

153 அடி நீளமானதும் 3 அடி விட்டத்தைக் கொண்டதுமான இந்தச் சுரங்கப் பாதையை கடப்பதற்கு ஒவ்வொருவருக்கும் மூன்று நிமிடங்கள் எடுக்கும். 43 போராளிகளும் ஒகஸ்ட் மாதம் 13-ம் 14-ம் திகதி இரவுகளில் குளியலறையில் ஆரம்பமாகும் சுரங்கப்பதையில் இறங்கி நீண்ட தூரம் சென்று சிறையைச் சுற்றியுள்ள அகழியை அடைந்தனர்.

சுரங்கப் பாதையானது 'திப்பு மஹாலி'ன் முதலாம் இரண்டாம்

## 4 நூற்றாண்டுகள் பழமையானது

**"சின்ன பொம்மி" என்ற மன்னர் தனது ஆட்சிக் காலத்தின்போது ஏனைய மன்னர்களின் தாக்குதலில் இருந்து தன்னைப் பாதுகாப்பதற்கென இந்தக் கோட்டையைக் கட்டினார். 1526-ம் ஆண்டு கட்டத் தொடங்கப்பட்ட இந்தக் கோட்டை 1595-ம் ஆண்டிலேயே கட்டி முடிக்கப்பட்டது.**

**ஆரம்பத்தில் சிறிய கோட்டையாக இருந்த இது பின்னர் நவாப் மன்னர்களின் ஆட்சியிலும், ஆங்கிலேயரின் ஆட்சியிலும் பெரிதாக்கப்பட்டது.**

**இந்தக் கோட்டை 2600 மீற்றர் சுற்றளவைக் கொண்டது. கோட்டை மதில் சுவரை ஒட்டி 8 மீற்றர் ஆழமும் 60 மீற்றர் அகலமும் கொண்ட மிகப் பெரிய அகழி உள்ளது. கோட்டைக்கு ஆக ஒரேயொரு வாசல்தான் உள்ளது. அதுவும் பாலத்தால் கடந்துதான் கோட்டைக்குள் செல்ல முடியும்.**

**இந்தக் கோட்டைக்குள் பல சுரங்கப் பாதைகள் இருந்தன. இவற்றில் சில 2 முதல் 3 கிலோ மீற்றர் தூரம் வரையானது. மன்னரும் அவரது சகாக்களும் ஆபத்தான வேளைகளில் தப்புவதற்கு இந்தச் சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட்டிருந்தன. இவை அகழிக்குக் கீழாகவும் சென்று அகழியை அடுத்துள்ள அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் செல்கின்றன.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## "பூந்தமல்லி சிறையில் அடைக்கப்பட்டுள்ள ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சந்தேகிக்கப்படும் போராளிகளைத் தப்பியோட வைப்பதற்கு வேலூர்ச் சிறையுடைப்பு ஒரு வெள்ளோட்டம்"

மாடிகளில் உள்ளவர்கள் செல்லக் கூடியவாறு, குளியலறையில் ஆரம்பிக்கப்பட்டு, மேற்குப் பகுதியிலுள்ள கோட்டைச் சுவரின் அத்திவாரங்களிற்கூடாகவும் சென்று அகழியின் மேற்பரப்பை அடைகிறது.

'திப்பு மஹாலி'ல் போராளிகள் அடைத்துவைக்கப்பட்டிருந்த 118 அறைகளும் முதலாம் இரண்டாம் மாடிகளில் அமைந்திருந்தன. முதலாம் மாடியிலிருந்து இரண்டாம் மாடிக்குத் தொடர்புகள் இல்லாமல் சீமேந்தினால் சுவர்கள் கட்டப்பட்டிருந்தன. அப்படியிருந்தும் முதலாம் இரண்டாம் மாடியிலிருந்தவர்கள் எவ்வாறு ஒன்று சேர்ந்தார்கள் என்பது இன்னும் அறியப்படவில்லை. இதேவேளை, 'ஹைதர் மண்டபத்தி'ல் இருந்தவர்களும் ஏனையவர்களுடன் தொடர்பு கொள்ள முடியாதவாறு இடையே அதேபோன்று சீமேந்துச் சுவர் எழுப்பப்படிருந்தது.

இச் சுரங்கப் பாதை ஆரம்பமாகும் இடம் வெளியிலிருந்து பார்க்க முடியாததாகும்.

முன்பு ஒருமுறை 'திப்பு மஹாலி'ன் கீழ்த்தளத்தின் தென் மேற்கு மூலையில் உள்ள அறை ஒன்றில் இருந்து சுரங்கம் அமைத்து விடுதலைப் புலிகள் தப்ப முயற்சித்ததை அடுத்து கடும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

விடுதலைப் புலிகள் தங்க வைக்கப்பட்ட மண்டபத்தில் தென் மேற்கு மூலையின் நிலப் பகுதியில் 2 சதுர அடியுள்ள பெரிய கல்லைப் பெயர்த்து எடுத்தனர். மண்டபத்தில் இருந்து அந்த இடைவெளியூடாக கம்பு ஒன்றை ஏணிபோல் பாவித்து கீழே உள்ள தளத்திற்கு இறங்கியுள்ளனர். பெயர்த்தெடுக்கப்பட்ட கடப்பாக் கல் மீது மின்சார அடுப்பு ஒன்றை வைத்து பகலில் சமைப்பது போல காவலர்களை ஏமாற்றியுள்ளனர். இரவில் அங்கிருந்து வயர் மூலம் 60 வால்ட் மின்சார பல்பை எரியச் செய்து வெளிச்சம் ஏற்படுத்தி சுரங்கம் தோண்டியுள்ளனர்.

தென்மேற்கு மூலை கீழ்த் தளத்தில் 7 அடி ஆழம் கொண்ட ஒரு குழியைத் தோண்டி பின்னர் அதிலிருந்து மூன்றடி விட்டத்தில் சுரங்கம் தோண்டப்பட்டுள்ளது.

சுரங்கம் தோண்டும்போது மண் இடிந்து விழாமல் இருக்க திப்பு மஹாலின் மற்ற அறைகளில் இருந்து மரக் கட்டைகளை எடுத்து சுரங்கத்தில் முட்டுக் கொடுத்துள்ளனர். ஜன்னல் கம்பிகளும், சாப்பாட்டுக் கோப்பைகளும் சுரங்கம் தோண்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டன. முதலாவது, இரண்டாவது சுற்றுச் சுவர்களை பெயர்த்தெடுத்து கயிறு மூலம் கட்டி வெளியே எடுத்தனர். சுரங்கம் தோண்டும்போதும் தப்பிச் செல்லும்போதும் மூச்சுத் திணறாமல் இருக்க மின்சார விசிறி பயன்படுத்தப்பட்டுள்ளது. சுரங்கத்தின் மறுமுனையான அகழிப் பகுதியின் வாசல் புற்கள் மற்றும் தழைகளால் உருமறைப்புச் செய்யப்பட்டிருந்தது.

சுரங்கத்தில் தோண்டப்பட்ட மண், மற்றும் கற்கள், பொலிசாரால் மூடப்பட்ட நான்கு அறைகளில் குவித்து வைக்கப்பட்டிருந்தன. இவை சுமார் 50 லொறிகளில் கொள்ளக் கூடியவை எனப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

சுரங்கம் வழியாக அகழிப் பகுதியில் வெளியேறும்போது கண்காணிப்புக் கோபுரத்தில் (Observation Post) இருந்து பார்க்கக் கூடியதாக இருந்திருக்கும் எனவும் புலிகள் இரவு நேரங்களில் தப்பியது மாத்திரம் அல்ல அவர்கள் தப்பும்போது மின்சாரமும் தடைப்பட்டிருந்ததால் புலிகள் தம் கண்களில் படவில்லை எனவும் காவல் கடமையில் இருந்தவர்கள் தெரிவித்தனர். மேலும் மின்சாரம் இல்லாததால் சுழல் தேடுதல் ஒளிபாய்ச்சி (Search light) வேலை செய்யவில்லை. இதனால் கண்காணிப்புக் கோபுரமும், தேடுதல் ஒளிபாய்ச்சியும் பயன்படாமல் போனது.

இவ்விசேட முகாமிற்கான பாதுகாப்பிற்கென சிறப்புப் பயிற்சி பெற்ற 100 பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அதே வேளையில் முகாமின் மேலதிக பாதுகாப்பிற்கென மூன்று காவல் கோபுரங்களும் அமைக்கப்பட்டிருந்தன. இச்சிறைச்சாலை பாதுகாப்புக்கென பொலிசாரினால் 25 லட்சம் ரூபா வரை மேலதிகமாகச் செலவுசெய்யப்பட்டது என தமிழ்நாடு தலைமைப் பொலிஸ் இயக்குனர் திரு. வைகுந்த் தெரிவித்துள்ளார்.

13-ம், 14-ம் திகதிகளில் 43 விடுதலைப் புலிகளும் முகாமை விட்டு தப்பியிருந்தாலும் 15-ம் திகதியே

## மன்னர்களும் வேலூர் கோட்டையும்

**1799-ம் ஆண்டு கர்நாடக மாநிலம் சிறீரங்கபட்டினத்தில் ஆங்கிலேய படைகளுடன் நடந்த போரில் திப்பு சுல்தான் மன்னர் மரணம் அடைந்தார். இதைத் தொடர்ந்து திப்பு சுல்தானின் தாயார் பக்ஷிமி பேகம், மனைவி பாட்ஷா பேகம், மகள் பாத்திமா பேகமும், மன்னரது மந்திரிகள், உறவினர்கள் ஆகியோரும் தமிழ்நாடு கொண்டு செல்லப்பட்டு வேலூர் கோட்டையில் சிறை வைக்கப்பட்டனர்.**

**அதன்பின் 1815-ல் ஆங்கிலேயர்கள், இலங்கையில் கண்டியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த தமிழ் மன்னனான சிறீ விக்கிரமராஜசிங்கனைத் தோற்கடித்து அவனைக் கைதுசெய்து தமிழ் நாட்டிற்கு நாடு கடத்தி வேலூர் கோட்டையில் அடைந்தனர்.**

**மன்னர் சிறீவிக்கிரமராஜ சிங்கன் 1832-ம் ஆண்டு வேலூர் கோட்டையிலேயே மரணமானார். 1922-ம் ஆண்டு இந்த வேலூர்க் கோட்டை இந்தியாவின் தேசிய நினைவுச் சின்னமாக அறிவிக்கப்பட்டது. இந்த மன்னரின் நினைவாக வேலூர் கோட்டைக்கு அருகே மணிமண்டபம் ஒன்று 1989-ம் ஆண்டு தி.மு.க.தலைவர் கருணாநிதியால் திறந்துவைக்கப்பட்டது.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இவ்விடயம் வெளிச்சத்திற்கு வந்தது. 15-ம் திகதி இந்தியாவின் 48 வது சுதந்திர தின நிகழ்வுகள் நேரடியாக வானொலியில் ஒலிபரப்பிக்கொண் டிருந்த வேளையில் வானொலி படபடப்புடன் ஒரு செய்தியை மீண்டும் மீண்டும் ஒலிபரப்பியது.

"வேலூர் கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்த 43 விடுதலைப் புலிப் போராளிகளும் சுரங்கப் பாதையூடாக தப்பிச் சென்றுள்ள னர்..." என்பதே வானொலியில் மீண்டும் மீண்டும் ஒலிபரப்பப் பட்ட செய்தியாகும். இந்தியா எங் கும் இந்தச் செய்தி உடனடியாகப் பரவி பொலிஸ் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டன. எனினும் சென்னையிலும் இன்னும் சில இடங்களிலுமே பொலிசாரின் நடவ டிக்கைகள் பலமாக இருந்தன. தப்பி யவர்களில் ஒரு குழு சென்னைப் புறமாகச் சென்ற போது 11 பேர் மீண்டும் பொலிஸில் சிக்கவேண்டி ஏற்பட்டது. இத்துரதிஷ்டவசமான சம்பவத்தினால் இரு போராளிகள் சயனைட் உட்கொண்டு தற் கொலை செய்துகொண்டனர். மற்று மொரு போராளி சயனைட் அருந் திய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

'The Greatest escape' எனப் புகழத் தக்க இந்தத் துணிகரமான நடவ டிக்கைக்குத் திட்டமிட்டுத் தலைமை தாங்கிய சங்கர் என்னும் போரா ளியும் மற்றுமொரு போராளியான பஞ்சன் என்பவரும் மரணத்தைத் தழுவிக் கொண்டனர். சென்னை யில் வைத்து தமிழ் நாட்டுப் பொலி சாரால் கைதுசெய்ய முற்படும் போது இவ் இருவரும் சயனைட் அருந்தித் தற்கொலை செய்து கொண்டனர்.

பூந்தமல்லி சிறையில் அடைக்கப் பட்டுள்ள ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சந்தேகிக்கப்படும் போரா ளிகளைத் தப்பியோட வைப்பதற்கு வேலூர்ச் சிறையுடைப்பு ஒரு வெள் ளோட்டம் என இந்திய அரசியல் வாதி ஒருவர் தெரிவித்தார்.

சிகிச்சைக்கெனச் சென்று தமிழ கத்தில் சிறைகளில் வாடிக் கெண்டி ருக்கும் தமிழீழ விடுதலைப் போரா ளிகளை மீண்டும் பாதுகாப்பாக தமிழீழம் அனுப்ப தமிழகத்தைச் சேர்ந்த சகல அரசியல்வாதிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமே.

## நூல் விமர்சனம்

www.tamilarangam.net

# 'வானம் எம்வசம்'

**அவ்ரோ விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டது பற்றிய கவிதைப் பதில் குறிப்புக்கள்**

இவ்வருடம் ஏப்ரல் 28, 29-ம் திகதிகளில் விடுதலைப் புலிகள், இலங்கை அரசுக்குச் சொந்தமான இரண்டு அவ்ரோ விமானங் களை நாளுக்கொன்றாக சுட்டு வீழ்த்தியமை, நடந்துகொண்டி ருக்கும் இனப் போராட்டத்தில் ஒரு முக்கிய திருப்புமுனையாகும்.

இந்தச் சுட்டு வீழ்த்துகை இராணுவ உபாயத்தில் எத்துணை முக்கியத்துவம் பெறுகின்றதோ அத்துணை முக்கியத்துவம், மக்கள் உணர்வுப் பதில் குறிப்பு வெளிப்பாட்டிலும் பெற்றுள்ளது. ஏனெனில் இனப்போராட்டத் தாக்குதல்களில் ஆகாய விமானம் எதிர்கொள்ளமுடியாத தாக்குதல்களின் சின்னமாக விளங்கிய ஒன்றாகும். இதுவரை காலமும் எதிர்கொள்ளப்பட முடியாது விளங்கிய ஒரு சக்தி எதிர்கொள்ளப்பட்டு மேலாண்மை செய்யப் பட்டபொழுது அது பற்றிய மக்கள் நிலைப் பதில் உணர்ச்சிகள் யாவை என்பதை எடுத்துக்காட்டுவனவாகவுள்ளன இவை. 29 கவிஞர்கள் எழுதிய 30 கவிதைகள் இத்தொகுப்பிலே இடம் பெற்றுள்ளன.

ஆக்க இலக்கியத்தில் உணர்ச்சிகளை கூறுவதற்கான இயல் பான சாதனம் கவிதையே. அது உணர்ச்சியின் மொழி. அந்த அளவில் இத்தொகுப்புக் கவிதைத் தொகுப்பாக அமைவது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றேயாகும்.

"வானம் எம்வசம்" எனும் சொற்தொடர் புதுவை இரத்தின துரையின் முதலாவது கவிதை யிற் காணப்படுவதாகும்.



**நிலமு மெம்வச மானது; எங்களின்
நீல ஆழ்கடல் எம் வசமானது
நிலவு ஏறிடும் வானமும் எம்வசம்
நின்று நடந்திடும் காலம் வந்தானது.**

இலங்கையில் நடக்கும் இனவிடுதலைப் போராட்டத் தில், விமானப் பயன்படுத் துகை தமிழ் மக்கள் மீது எத்த கைய தாக்கங்களை ஏற்படுத் தியிருந்தது என்பதை விளக் கும் மிக முக்கியமான ஆவண மாக இந்தத் தொகுதி அமை கிறது.

1984-ம் முதல் உக்கிரமடைந் துள்ள இப் போராட்டத்தில் விமானத் தாக்குதல்களும், ஷெல் தாக்குதல்களுமே மக்களிடையே பாரிய விளைவுகளை ஏற்படுத்தி வந்துள்ளன. என்ன செய்வதென்பது அறியாது கையறு நிலையில் விமானங்கள் நிகழ்த்திய கோரத் தாக்குதல்களை ஏற்று, அவை ஏற்படுத்திய திடீர் இழப்புக்களை மக்கள் எவ்வாறு தாங்கி வந்துள்ளனர் என்பதை, அந்த வானளாவிய பயம் நீங்கியது என்றதும் கொப்பளித்துப் பாயும் இக்கவிதைத் தொகுதி சுட்டுகின்றது. விமானத் தாக்குதல்களின் கொடூரத்தை விளக்கும் பதிவாக இவ் வெளியீடு அமைகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# ஒரே தடவையில் 1500 கிலோ குண்டு போடவல்லது புக்காரா!

www.tamilarangam.net



ஏற்கனவே சிங்களப் படையிடம் உள்ள 'சியா மாசெட்டி' ரக போர்விமானங்களை விட, 'புக்காரா' தரத்தில் சிறிதளவு உயர்ந்தது.

'சியா மாசெட்டி'க்கு ஒரு விமானி மட்டுமே இருப்பார்; அத்துடன் ஒரு பறப்பின் போது 300 கி. கி. எடைகொண்ட வெடிகுண்டுகளை (50 கி. கி. கொண்ட ஆறு குண்டுகள்) காவிச்சென்று வீசவல்லது. இதன் வேகம் மணிக்கு 260 மைல்களாகும்.



இதேவேளை 'புக்காரா'வில் இரண்டு விமானிகள் பயணம் செய்யமுடியும். ஒரே தடவையில் 1500 கி. கி. எடைகொண்ட வெடிகுண்டுகளை காவிச்செல்ல முடியும். அது 500 கி. கி. கொண்ட மூன்று குண்டுகளாகவோ அல்லது 250 கி. கி கொண்ட 6 குண்டுகளைகவோ அல்லது 125 கி. கி கொண்ட பன்னிரண்டு குண்டுகளைகவோ இருக்கும். அதன் வேகம் மணிக்கு 310 மைல்களாகும்.

'சியா மாசெட்டி'யைப் போன்றே 'புக்காரா' வும் குண்டுகளையும் வீசும்; றொக்கட்டுக் களையும் ஏவும். அத்துடன் 20 மி. மீ அல்லது 30 மி. மீ பீரங்கியையும் (CANNON) பொருத்தமுடியும். எது எப்படியிருந்தாலும்,

'புலிப்பாய்ச்சல்' நடவடிக்கையில் சுட்டு வீழ்த்தப்பட்ட 'புக்காரா' விமானத்தின் சிதைவுகள்



ஒரே பறப்பில் 1500 கி. கி. கொண்ட குண்டுகளை மட்டுமே 'புக்காரா' கொண்டுசெல்ல முடியும்.

போர் விமானங்கள் - அவை எந்தவகையாக இருந்தாலும் இரண்டு முறைகளிலேயே குண்டு வீச்சுக்களை நடாத்தும்.

1. கிடையாகப் பறந்து குண்டு போடுவது.

2. குத்திப் பதிந்து குண்டு போடுவது.

கிடையாகப் பறந்து குண்டு வீச்சு நடாத்தும் போது, குறித்த ஒரு இலக்கின் மீது குண்டுவீச முடியாது. பெரிய நிலப்பரப்பில் நடக்கும் சண்டைகளில் இம்முறையில் குண்டுகள் வீசப்படுவது வழமை. பொது மக்கள் மீது கண்முடித்தனமாக குண்டுகளை வீசும் போதும், அடர்ந்த காடுகள் மீது குண்டு வீச்சுக்கள் நடத்தும் போதும், இம்முறை பயன்படுத்தப்படும். 'வை 8, 'அவ்ரோ', ரக விமானங்கள் குண்டுகளை இந்த முறையிலேயே வீசி வந்தன.

குத்திப் பதிந்து குண்டு வீசும் முறை மூலம் இலக்குகள் தாக்கப்பட அதிகளவு வாய்ப்புகள் உள்ளன. அதேபோல விமானம் சுட்டு வீழ்த்தப்படவும் அதிகளவு வாய்ப்புகள் உண்டு.

## புலிகளிடம் இழந்த விமானங்களின் விபரம்

விடுதலைப் புலிகளினால் 14-07-95 அன்று சிறீலங்கா வான்படையின் குண்டுவீச்சு விமானமான புக்காரா சுட்டுவீழ்த்தப்பட முன்னர் ஏற்கனவே சிறீலங்கா வான்படையினர் புலிகளிடம் இழந்த விமானங்களின் விபரம் பின்வருமாறு:

1978-ம் ஆண்டு இரத்மலானையில் அவ்ரோ விமானம் (குண்டு வைத்துத் தகர்ப்பு)

1984-ல் ஊர்காவற்துறை பருத்தியடைப்பில் சீ பிளேன் (எரிப்பு)

1985-ல், மூதூரில் உலங்குவானூர்தி (சுட்டு வீழ்த்தப்பட்டது)

12-09-90-ல் யாழ் கோட்டையில் சியா மாசெட்டி குண்டுவீச்சு விமானம் (சுட்டு வீழ்த்தப்பட்டது)

1991-ல் வவுனியாவில் பெல் ரக உலங்குவானூர்தி (சுட்டு வீழ்த்தப்பட்டது)

05-07-1992-ல் இயக்கச்சியில் வை-8 ரக விமானம் (சுட்டு வீழ்த்தப்பட்டது)

1993-ல் புனானையில் உலங்குவானூர்தி (சுட்டு வீழ்த்தப்பட்டது)

1994-ல் பலாலியில் பெல்ரக உலங்குவானூர்தி (கரும்புலித் தாக்குதல்)

28–04-95-ல் யாழ். வான் பரப்பில் அவ்ரோ எ. எச்-748 ரக விமானம் (நவீன விமான எதிர்ப்பு ஏவுகணையினால் வீழ்த்தப்பட்டது)

29–04-95-ல் யாழ். வான் பரப்பில் அவ்ரோ எ. எச்-748 ரக விமானம் (நவீன விமான எதிர்ப்பு ஏவுகணையினால் வீழ்த்தப்பட்டது)

10-07-1995ல் வலிகாமம் பகுதியில் உலங்குவானூர்தி (சுட்டு வீழ்த்தப்பட்டது)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# உலகப் பத்திரிகையாளர்களைக் கவரும் விடுதலைப் புலிகள் பெண் போராளிகள்

அண்மைக் காலமாக தமிழீழத்தை நோக்கி வெளிநாட்டுப் பத்திரிகை நிருபர்களின் படையெடுப்புக்களும், உலகின் முக்கிய ஒலிபரப்பு நிலையங்களின் செய்தியாளர் வருகையும் அதிகரித்துள்ளன. சில நாட்களுக்கு முன்னிருந்த யுத்தநிறுத்த சூழ்நிலையில் பல நூற்றுக்கணக்கான வெளிநாடுகளைச் சேர்ந்த செய்தியாளர்கள் தமிழீழத்துக்கு வந்து, இங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்தும் பதிவுசெய்துகொண்டும் சென்றனர். இவர்கள் தமிழீழ மக்களின் வாழ்க்கை நிலை, தமிழீழ விடுதலைப் போராட்டம் என்பவற்றை அறிய மிக்க ஆவலுற்றவர்களாகக் காணப்பட்டனர்.

உலகின் பல நாடுகளில் போராட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அடக்குமுறைகளும் ஒடுக்குமுறைகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற போது அதற்கு ஆளாகி அல்லற்பட்டுக்கொண்டிருக்கின்ற மக்கள் நீதிகேட்டு தங்கள் உரிமைகளுக்காகப் போராடிக்கொண்டிருக்கின்றனர்.

அந்த வகையில் உலக நாடுகளிடையே உன்னதமான போராட்டமாகக் கணிக்கப்படும் தமிழீழ விடுதலைப் போராட்டம் மிகுந்த வளர்ச்சி கண்டு உலகின் கண்களை ஈர்த்துள்ளது.

இப்போராட்டத்தின் தன்மைகளை, இவற்றில் ஈடுபட்டுள்ளவர்களை நேரிற் காணவேண்டும் என்று உலகின் பல பகுதிகளிலிருந்தும் செய்தியாளர்கள் வந்த வண்ணம் இருந்தனர்.

இதில் முக்கிய விடயம் என்னவென்றால் இங்கு வருகின்ற அனைவரும் இங்கு நடக்கின்ற உன்னதமான விடுதலைப் போராட்டம் பற்றியும் அவற்றுள்ளும் குறிப்பாக பெண்கள் போராட்டத்தில் பங்கெடுக்கின்ற நிலைமை பற்றியும் துருவித் துருவிக் கேட்டறிந்து செல்கின்றனர். இங்கு வருகை தந்த செய்தியாளர்கள் அனைவரும் பெண் போராளிகளைச் சந்திக்கவேண்டும் என்று மிக்க ஆர்வம் கொண்டிருக்கின்றனர்.

பெண்களின் அதிசயிக்கத்தக்க வளர்ச்சியையும் கண்டு வியப்படைந்தனர். ஆசிய பண்பாட்டு மரபிலிருந்தும் அவற்றுள்ளும் இறுக்கமான எமது சமூக மரபிலிருந்தும் எவ்வாறு இவர்கள் விடுபடத் துணிகின்றார்கள், அதற்கான உத்வேகம் அடைந்தார்கள் என்பது தங்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தை அளிப்பதாகக் கூறியுள்ளனர்.

குறிப்பாக எந்தவொரு விடுதலைப் போராட்டத்திலுமே காணமுடியாதவாறு ஆண்களுக்குச் சமமாக எல்லாத் துறைகளிலுமே பெண் போரா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளிகள் செயலாற்றுவது தம்மை வியக்கவைக்கிறதாகவும், இது இந்தப் போராட்டத்தில் முக்கிய சிறப்பாகவும் அமைகிறது எனவும் கொரியப் பத்திரிகை ஒன்றின் நிருபர் குறிப்பிட்டார்.

இங்குள்ள கரும்புலிகளின் ஈகங்கள், தற்கொடைகள் ஓர் உன்னதமான, சாதாரண மனித எல்லைக்கு அப்பாற்பட்ட சாதனையாக உள்ளது என்றும் இவற்றுள்ளே பெண் கரும்புலிகளின் செயற்பாடுகள் மிகப் பெரிய வளர்ச்சியாக உள்ளது என்றும் குறிப்பிட்டனர்.

அதாவது இந்தப் போராட்டத்தின் கடினமான பயிற்சிகளையும் கடினமான வாழ்க்கை முறைகளையும் தாங்குகின்ற ஆத்மசக்தி அவர்களுக்கு எங்கிருந்து வந்தது என்றும் ஆச்சரியப்பட்ட ஒரு நிருபர், பெண்கள் எவற்றின் மீதும் தீவிர பக்தி வைத்துச் செயலாற்றுவார்கள் என்றும் குறிப்பிட்டார். மற்றும் வெளிநாட்டுப் போராட்டங்களைப் போலல்லாது இங்கு பெண்களின் செயற்பாடுகள் முன்னுதாரணமாக அமைவதோடு, இங்கு பெண்கள் போராட்டத்தில் வீரச்சாவடைகின்ற வீதமானது உலக நாடுகளில் ஏனைய போராட்டங்களில் பெண்களின் வீரச்சாவு வீதத்தைக் காட்டிலும் கூடுதலாக உள்ளது என்றும் குறிப்பிட்டனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக இப் போராட்டத்தின் மூலம் வெளியேயுள்ள பெண்களின் வாழ்க்கை நிலை என்பது குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தைக் கண்டுள்ளதாக ஒரு பெண் நிருபர் குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பதினேழு வருடங்களுக்கு முன்தான் இதழியல் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம் ஒரு சுற்றுலாவில் யாழ்ப்பாணம் வந்திருந்த போது அப்போதிருந்த யாழ்ப்பாணப் பெண்களின் நிலைக்கும் தற்பொழுதுள்ள பெண்களின் நிலைக்கும் இடையில் குறிப்பிடத்தக்களவு மாற்றம் நிகழ்ந்துள்ளதாகவும் குறிப்பிட்டார். தான் இங்கு வந்த போது பெண்களை யாழ்ப்பாணத்தில் தனியே காணமுடியாது, ஒரு பெண் தன் பெற்றோருடனோ அன்றி சகோதரனுடனோதான் செல்லுகின்ற நிலையைத்தான் பார்த்ததாகவும் இப்போதுள்ள



**“அஞ்சாத நெறிகளும் நிமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால் செம்மை மாதர் திறம்புவதில்லை”**

முன்னேற்றம் மூக்கில் விரலை வைக்கத் தோன்றுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஒட்டுமொத்தமாக இதிலிருந்து எமது போராட்டத்தின் செயற்பாடும் பெண் போராளிகளின் சாதனைகளும், பெண்களின் வாழ்க்கை முறைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்தி சமுதாய வளர்ச்சிக்கு அடிகோலியுள்ளது என்று அவர்கள் குறிப்பிட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு பச்சை மரம் பற்றி

இராசமணி புரண்டு படுத்தாள். பக்கத்து வயற்குடிலிலிருந்து கொட்டும் பனியில் மிதந்து வந்த அந்தப் பாடல் மிகத் தெளிவாகக் கேட்டுக் கொண்டிருந்தது. இருளிலே விழித்திருந்த அவளுடைய விழிகள் அவனை நினைத்து உறங்க மறுத்தன.

இனிமையான இசையுடன், சிருங்கார ரசம் சிந்தும் சினிமாப் பாடலின் ஒவ்வொரு சொல்லும், அவற்றின் பின்னே மறைந்திருக்கும் அப்பட்டமான உறவுச் சங்கதிகளும் அவளுக்கு மிகவும் தெளிவாக, இனிமையாகப் புரிந்தன.

அவள் மணமானவளல்ல. அவளுடைய குடும்பத்தின் ஏழ்மை அவளுக்கு இன்னமும் மனைவியாகும் வாய்ப்பை அளிக்கவில்லை. முப்பது வயதுக் கன்னிப் பெண். இருப்பினும் அவளுக்கு முத்தங்கள், பருவ அணைப்புக்கள் புதியனவல்ல. உணர்ச்சியின் எல்லையில் துடிக்கும் ஆண்மையின் பலமும், வேகமும் அவளுக்குத் தெரியாத ஒன்றல்ல. ஆனால் அவள் என்றுமே வரம்பை மீறியது கிடையாது.

அவன் இன்னமும் சற்று நேரத்தில் வந்துவிடுவான்.

இராசமணி பாயில் எழுந்து உட்கார்ந்து கொண்டாள். பக்கத்திலே அவளுடைய தங்கையும், தம்பிமாரும் குளிருக்கு ஒருவரையொருவர் அண்டிக் கொண்டு உறங்கிக் கொண்டிருந்தனர். மங்கலாக எரிந்து கொண்டிருந்த அரிக்கன் லாம்பின் ஒளியில் அவர்கள் ஒவ்வொருவரையும் கவனமாகப் பார்த்தாள் இராசமணி.

கடந்த வருடம் தந்தை இறந்த பின் பருவம் அடைந்த தங்கை - வயலிலும் தோட்டத்திலும் வேலை செய்ய வேண்டும் என்பதால் இப்போ பாடசாலைக்குச் செல்லாத இரண்டு தம்பிமார் - அப்பாலே சுருண்டு படுத்திருந்து, தொய்வினால் அவதியுறும் தாயார். நாள் முழுவதுமே கடுமையான வெய்யிலில் கச்சான் பிலவில் வேலை செய்த களைப்பில் தம்மை மறந்து உறங்கும் அவர்களைப் பார்க்கையில் அவளுடைய கண்கள் பனித்தன.

பாடல் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தது. முன்னையதைவிட இது இன்னமும் பச்சை. உடம்பால் மட்டுமல்ல, பார்வையால் மட்டுமல்ல, குரலால்கூட ஒருவரைத் தீண்டித் தழுவமுடியும் என்று நிரூபிப்பதுபோல இழையும் குரல்கள்.

அவன் வரும் வேளை நெருங்குகின்றது.

அவளுடைய உடல் இலேசாகத் தகித்தது. இருபதுகளில் அனுபவிக்க வேண்டியவை முப்பதுகளிலுங் கூடக் கிடைக்காமற் போய்விடுமா?

அவள் பாயைவிட்டு எழுந்து குடிசைக் கதவைத் திறந்தாள்.

“எங்கை புள்ளை பனியுக்கை போறாய்?” அவளுடைய தாய் முனகினாள். தொய்வு அவளுடைய குரலை அடைத்தாலும் அக் குரலிலே தொனித்த பாசம் இராசமணியைக் குளிர்வித்தது.

“தேத்தண்ணி ஆத்தித் தாறனணை” அவள் குசினிக் கொட்டிலினுள் சென்று அடுப்பை மூட்டிவிட்டுத் தண்ணீர் கொதிக்கும் வரை காத்திருக்கின்றாள்.

மீண்டும் அந்தப் பாடல்!

முழங்கால்களை மார்போடு இறுக அணைத்துக் கொண்டு எரியும் நெருப்பையே உற்று நோக்கிய வண்ணமிருக்கும் அவளுடைய காதில் அப்பாடல் விழுந்து, உள்ளத்தில் நிறைந்து, உடலெங்கும் பரவிப் பிரவகிக்கின்றது. அவள் தன் முழங்கால்களை இன்னமும் நெருக்கமாக நெஞ்சோடு சேர்த்தணைத்துக் கொண்டு அந்தப் பாடலிலேயே மூழ்கிவிட்டாள்.

முளாசி எரியும் நெருப்பில் அலுமினியப் பானையிலிருக்கும் தண்ணீர் மளமளவெனக் கொதிக்கின்றது.

**நிலக்கிளி**
**அ. பாலமனோகரன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இதோ இன்னமும் சில நிமிடங்களில் அவன் வந்துவிடுவான்.

தேனீரைச் சுடசுடக் கொண்டுபோய்த் தாயிடம் கொடுத்த இராசமணி, “பண்டி கச்சானைக் கிண்டிப் போடும்! ஒருக்காப் பாத்து தீவறையை அண்டிவிட்டிட்டு வாறனணை!” என்று கூறிவிட்டுக் குடிசையின் பின்புறம் இருக்கும் கச்சான் பிலவை நோக்கி நடக்கிறாள்.

முழுநிலவின் ஒளி பனிப்படலத்தில் தேங்கித் தளும்புகின்றது. குடிசையின் முன்புறமாக இருந்த வயலில் நெற்பயிர்கள் சலனமின்றி நின்றன.

பாடல்கள் இப்போ மிகவும் தெளிவாகக் கேட்கின்றன. இரவின் தனிமையிலே, இருவராய்க் கேட்க வேண்டுமென்றே தேர்ந்து ஒலிபரப்பப்படும் அப் பாடல்கள் ஓயவில்லை. உள்ளத்தின் ஆழத்தைத் தொட்டு, உறங்கும் உணர்வுகளையெல்லாம் கிளர்ந்தெழ வைக்கும் அப் பாடல்களில் அவள் கிறங்கிப் போகிறாள்.

தீவறை சுவாலைவிட்டு எரிகின்றது.

அவனை ஏன் இன்னமும் காணவில்லை?

அவள் கச்சான் பிலவு மூலையில் நிற்கும் நாவல் மரத்தை நோக்கி மெல்ல நடக்கிறாள். அந்த நாவலும் அதன் அடியில் பரந்திருக்கும் வெண்மணலும் அவளுக்கு மிகவும் பிடித்தமானவை. அங்குதான் அவர்களிருவரும் யாரும் அறியாமற் சந்தித்துக் கொள்வார்கள்.

கடந்த ஓராண்டு காலமாக ஏற்பட்ட உறவு. அவனுக்கு அவள் வேண்டுமாம். அத்துடன் சீதனமும் வேண்டுமாம். அதுவும் அவளுடைய குடும்பத்தின் தற்போதைய ஒரே சொத்தான அந்த வயலும் பிலவும் வேண்டும். இல்லையேல் அவனுடைய தகப்பன் சம்மதிக்கவே மாட்டாராம். நேற்றிரவு அவன் கூறினான். இன்று அவனுக்கு முடிவைக் கூறியாக வேண்டும். என்ன முடிவைக் கூறுவது?

பாடல்கள் முடிந்துவிட்டிருந்தன. ஆனால் பனிபடர்ந்த அந்த இர

வின் தனிமையிலே, நிலவு தேங்கும் அந்த நேரத்தில் அந்தப் பாடல்கள், கேளாத கானங்களை, எழுதாத சித்திரங்களையெல்லாம் அவளுடைய கன்னி நெஞ்சிலே உருவாக்கி விட்டிருந்தன.


கொட்டும் பனியிலும் உடலில் வெம்மை பரவுவது போன்றதொரு உணர்வு.

அதோ அவன் வந்துவிட்டான்.

அருகில் வந்ததுமே உரிமையுடன் கைகளைப் பற்றி "கனநேரமாய்க் காத்திருக்கிறியே மணி?" என்று ஆதரவாகக் கேட்டவாறே அவளைத் தன்னுடன் சேர்ந்து அணைத்தான். அவனுடைய நெஞ்சில் சாய்ந்த இராசமணி தன் முகத்தை நிமிர்த்தி அவனை விழுங்கி விடுவதுபோலப் பார்த்தாள். அகன்ற விழிகள் நிலவில் பளபளத்தன.

.... அவள் நினைத்தால் அவனை

# எரிகிறது


www.tamilarangam.net

மணக்க முடியும்... ஆனால்...

இப்படியே அவனுடைய முகத்தைப் பார்த்துக் கொண்டே, இந்த அணைப்பினுள் கட்டுண்டவாறே வேறெதையுமே சிந்திக்காமல் இருந்து விட முயன்றவளின் முகத்தை நோக்கிக் குனிந்தான் அவன்.

"கொம்மாவைக் கேட்டனியே மணி? அவ என்ன சொன்னவ?"

அவள் பதில் சொல்லவில்லை. அவனைச் சுற்றிப் படர்ந்திருந்த அவளுடைய கரங்களின் பிடி ஒரு கணம் இறுகியது. பின் அவனுடைய அணைப்பினின்றும் தன்னை மெல்ல விடுவித்துக் கொண்டு தழுதழுக்கும் குரலில் கூறினாள்.

"இந்தக் காணி ஒண்டை நம்பித்தான் எங்கடை குடும்பம் முழுக்க இருக்குது... இதை எனக்கு மட்டும் தந்திட்டால் தங்கச்சியும் தம்பியவங்களும் பிறகு என்னண்டு சீவிக்கிறது...!"

அவன் வெறுமே சிலை போல நின்றான்.

அவனுடைய நெஞ்சில் மீண்டும் ஒருமுறை முகம் பதிக்க விழைந்த தன் ஆசையைக் கட்டுப்படுத்திக் கொண்ட இராசமணி "இனிமேலும் நான் உங்களைச் சந்திக்கிறது சரியில்லை. நான் போறன்." என்று கூறிவிட்டுச் சட்டென்று திரும்பிக் குடிசையை நோக்கி நடந்தாள்.

... அப்பு குடியாமல், கடன் பட்டு காணி நிலத்தை விக்காமல் இருந்திருந்தால்...

வயலோரம் வந்துவிட்ட இராசமணி நின்று திரும்பி நாவலடியைப் பார்த்தாள். அவன் அங்கே இல்லை. அவளுடைய விழிகள் சற்றுக் கலங்கின.

அண்மையில் எங்கோ வாசித்தது அந்நேரம் அவளது நினைவுக்கு வருகின்றது.

நேற்றைய எம்மவரின் தவறுகட்காகவும், நாளைய சந்ததியின் ஏற்றத்திற்காகவும், இன்றைய நாங்கள் அனுப்பவிப்பது வேதனையல்ல- அது சாதனை!

வயல் மூலையில் தேங்கி நிற்கும் நீரில் இறங்கி, சில்லென்ற பச்சைத் தண்ணீரைக் கைநிறைய வாரியள்ளி முகத்திலடித்துக் கழுவிப் பின் தனது கரங்களையும் நன்கு தேய்த்துக் கழுவிவிட்டு இராசமணி தன் குடிசைக்குச் செல்கின்றாள்.

**வீரகேசரி வாரமஞ்சரி**
**(02-12-73)**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஐ. நாவை நோக்கி ஆர்ப்பாட்டப் பேரணி



கடந்த 14-8-1995 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுவிஸ் நாட்டின் ஜெனிவா நகரில், தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளை வழிகாட்டலில் சுவிஸ் தமிழ் சங்கங்களின் கூட்டமைப்பு, கத்தோலிக்க ஆத்மீகப் பணியகம், சைவத் தமிழ்ச் சங்கம் என்பன ஒழுங்கு செய்த மிகப் பிரமாண்டமான ஊர்வலம், சிறிலங்கா அரசு தமிழ் மக்கள் மீது மேற்கொண்டுவரும் தமிழ் இனப் படுகொலையைக் கண்டித்தும், தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க கோரியும், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை அங்கீகரிக்க கோரியும் ஐ. நாடுகள் மனித உரிமை மன்றினை நோக்கிச் சென்றது.

நண்பகல் 12 மணிக்கே சுவிஸ் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் ஜெனிவா நகர் நோக்கி மக்கள் வந்து கொண்டிருந்தார்கள். சுவிஸ் நாட்டின் பெரும்பாலான கன்டோன்கள் ஜெனிவா நகரிலிருந்து முன்னூறு கிலோமீற்றர்களுக்கு அப்பாலேயே இருந்தன. அத்தோடு அன்றைய தினம் வேலை நாளாகவும் இருந்தது. ஆயினும் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஈடுபாட்டுடன் கூடிய உணர்வுகளோடு ஜெனிவா ரயில் நிலைய முன்றலில் திரளத் தொடங்கியதை அவதானிக்க முடிந்தது. தமிழீழத் தேசியக் கொடியைத் தாங்கிய வண்ணம் மக்கள் பேரணி நகர்ந்து கொண்டிருந்ததைப் பார்க்க மெய்சிலிர்த்தது.

**தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரி!**

**தமிழீழ விடுதலைப் புலிகளை அங்கீகரி!**

சிறிலங்கா அரசே! தமிழ் மக்கள் மீதான இனப் படுகொலையை நிறுத்து!

என்று பொறிக்கப்பட்ட பதாகைகளையும் தமிழீழத் தேசியத் தலைவரின் உருவப் படங்களையும் தாங்கிய வண்ணம் ஊர்வலம் ஐ. நாவை நோக்கி நகர்ந்தது.

ஊர்வலம் நகரத் தொடங்கியதும் சூரிச் பிரதான ரயில் நிலையத்திலிருந்து விசேடமாக ஒழுங்கு செய்யப்பட்ட ரயில் வண்டி வந்து சேர்ந்தது. "தமிழீழ ரயில்" என்று பெரிய வாசகங்கள் பொறிக்கப் பட்ட இதில் வந்த சுமார் இரண்டாயிரம் மக்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

சூரிச்சிலிருந்து புறப்பட்ட ரயில் வண்டி சூரிச்சுக்கும் ஜெனிவாவுக்கும் இடையில் உள்ள புகையிரத நிலையங்களில் தரித்து அங்கு காத்து நிற்கும் மக்களையும் ஏற்றி வர வேண்டும் என்பது ஏற்பாடாக இருந்தது. ஆனால் சூரிச்சிலேயே ரயில் வண்டி நாலில் மூன்று பகுதி நிறைந்து விட்டதால் ஏனைய முக்கிய ரயில் நிலையங்களில் உள்ளோருக்கு தகவல் அனுப்பப்பட்டதையடுத்து, விசேட பஸ்கள், கார்கள் ஏனைய புகைவண்டிகள் என விசேட ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டு மக்கள் ஊர்வலத்தில் வந்து கலந்து கொண்டனர்.

விசேட பஸ்கள் அனைத்தும் புலிக் கொடியினால் போர்க்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தன. மக்கள் விடுதலை வேண்டி ஒலித்த கோஷங்கள் வானைப் பிளந்தது. ஐ. நா. சபை முன்றலுக்கு முன் 10000-க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டிருந்தார்கள்.

இப் பேரணிக்கு சுவிஸ் தொலைக் காட்சி நிலையங்கள் பெரும் முக்கியத்துவம் கொடுத்து செய்திகள் வெளியிட்டன. சூரிச் தொலைக் காட்சி நிலையம் இப் பேரணியில் 6000-ம் மக்கள் கலந்து கொண்டதாக முதலில் செய்தி வெளியிட்டது. பின்பு பேரணியை நேரடியாக ஒலிபரப்பு செய்து இதில் 10000-ம் மக்களுக்கு மேல் கலந்து கொண்டதாக குறிப்பிட்டது.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பேரணியை அடுத்து சுவிஸ் தமிழீழ விடுதலைப் புலிகள் பிரதிநிதி திரு. நடராஜா முரளிதரன் தலைமையில் மாபெரும் கூட்டம் ஆரம்பமாகியது. விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினரும், சர்வதேசப் பேச்சாளருமான லோறன்ஸ் திலகர் மக்கள் எல்லோரும் எழுந்து வணக்கம் செலுத்த தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். கொடி ஏற்றப்பட்டதும் மக்கள் உணர்ச்சி வசப்பட்டு ஆரவாரித்தனர்.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இக்கொடியேற்று வைபவத்தை தொடர்ந்து திரு. லோறன்ஸ் திலகர் உரையாற்றுகையில் இன்று ஐ.நா. சபை முன்பாக ஏற்றப்பட்ட தமிழர் தேசியக் கொடி விரைவில் ஐ.நா. சபைக்குள்ளே சட்டபூர்வமாக ஏற்றப்படும் என்று கூறினார்.

பெல்ஜியத்தில் நடக்கும் குர்திஷ் விடுதலை இயக்க தொலைக்காட்சி கலந்துரையாடலில் கலந்து கொள்வதற்காக, திரு. திலகர் அவர்கள் தமது உரையை சுருக்கமாக முடித்துக் கொண்டு விமானநிலையம் சென்றார். தொடர்ந்த கூட்டத்தில், தமிழீழ தேசிய கீதங்களை நாதஸ்வரக் கலைஞர்கள் வாசித்தார்கள்.


சர்வதேச கல்வி அபிவிருத்தி என்ற மனித உரிமை அமைப்பொன்றின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

தலைவியான சட்டத்தரணி திருமதி. கரன்பாக்கர், முன்னாள் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. வசந்தராஜா, கிறிஸ்தவ மதத் தலைவர் கோர்னலியஸ் கொக் ஆகியோர் உரையாற்றினர்.

தமிழீழ மக்கள் மீது சிறிலங்கா இராணுவம் நடத்தும் இனப்படுகொலையையும், மக்கள் மீது பொருளாதாரத் தடை விதித்து அவர்களை மனிதாபிமானமற்றுப் பட்டினி போட்டு கொலை செய்வதையும் கண்டித்து பேச்சாளர்கள் உரை நிகழ்த்தினர். தமிழ் மக்களின் நியாயமானதும் நீதி மிக்கதுமான போராட்டத்தை அங்கீகரித்துப் பேச்சுவார்த்தை நடத்தி நீதியான தீர்வுக்கு வர இலங்கை அரசை வலியுறுத்துமாறு கோரியும் ஐரோப்பிய நாடுகள் இலங்கை அகதிகள் எவரையும் போர் முடியும் வரை திருப்பி அனுப்பக்கூடாதெனக் கோரியும் ஐ. நா. சபையின் சிறுபான்மையோருக்கெதிரான பாரபட்சத்தைத் தடுத்துப் பாதுகாக்கும் மனித உரிமை ஆணைக் குழுவிடம் கையளிக்கப் பட்டது. அன்று காலை நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில், சுவிஸ் நாட்டின் பிரபல பத்திரிகையாளர்களும் செய்தித் தொடர்பாளர்களும் கலந்து கொண்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திலீபாஞ்சலி!

## "நீ அழைத்தது..."



- துறையூரான், யாழ்ப்பாணம்

இதுவரை பார்த்தோம்
மற்றவர் மரணத்தை
அன்றுதான் பார்த்தோம்
எங்களின் மரணத்தை!

உண்மையில் அன்று
இறந்தது நாங்கள்
ஆனால்
ஏனோ உன்னைப் புதைத்தார்?

சிதையில் தீமூட்டி
உடலை எரிப்பர்
நீயோ...
உயிரில் தீமூட்டி
உன்னை எரித்தாய்!

சாவுக்குப் பயந்த நாங்கள்
உன்னைச் சாகவிட்டு
பார்த்துக் கொண்டோம்

ஈழத்தை
நாம் பார்க்க வேண்டும்
என்பதற்காகவா
உன் கண்களை நீ
மூடிக் கொண்டாய்?

சுதந்திரக் காற்றை
நாம் சுவாசிக்கட்டும்
என்பதற்காகவா
உன் சுவாசத்தையே
நீ நிறுத்திக் கொண்டாய்?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இந்த உலகிற்கு
வேறு சூரியன் இருக்கலாம்
எங்களுக்கு
நீதானே என்றென்றும்
இளஞ்சூரியன்!

சூரியனை இழந்தும்
இந்தப் பூமி உயிர் வாழலாம்
ஆனால்
நீ இல்லாத ஈழத்தை
எங்களால்
அனுபவிக்க முடியவில்லையே!

இந்த மண்ணை
இந்த இனத்தை
நேசித்த உந்தனுக்கு
நாங்கள்
பட்டினிச் சாவைத்தானே
பரிசளித்தோம்!

உனக்கு வெறும்
கண்ணீர் அஞ்சலி மட்டும் போதாது
நீ நேசித்த இந்த மண்ணை
அன்றைக்கே
காணிக்கையாய்த்
தந்திருக்க வேண்டும்!

கண்டவர்கள் சொல்லுங்கள்
அன்று நடந்தது என்ன?
கொலையா...
இல்லை தற்கொலையா?

உன் எதிரியைக் கூட
மன்னித்துவிடு
வஞ்சனையாக
உன்னை வதை செய்து
கொன்ற எங்களை
மறந்தும் மன்னிக்காதே!

காந்திதான் நீயும்
காந்தியைக் கொன்றவனும்
ஒரு கணம்தான்
கல்லாயிருந்திருப்பான்
நாங்களோ...
நீ சாகும் வரை
கல்லாகத்தான் இருந்தோம்!

போர்க்களம்...

www.tamilarangam.net
அதுதானே நீ வாகை சூட வேண்டிய
இடம்!
ஆனால்
நல்லூரர் வீதியிலே
ஏன் தொடுத்தாய்
அறப்போரை?

நீ நினைத்திருந்தால்
துப்பாக்கி முனையிலேயே
எதிரியை நிறுத்தியிருக்கலாம்
மாறாக...
உன்னோடு
நீயே போர் தொடுத்து
ஏன் வென்றெடுத்தாய்
எங்கள் இதயத்தை?

உன் அறப்போருக்கு
அர்த்தங்கள் ஆயிரம்!
அது எங்கே புரியப் போகிறது
அவர்களுக்கு?
அவர்களோ...
காந்தி தேசத்தில்
பிறந்தவர்களாயிற்றே!

ஈழம் தவிர
இன்னொரு தீர்வா?
முடியாது!
அது உனக்கு நாங்கள் செய்யும்
நம்பிக்கைத் துரோகம்!

உன்னைக் கொன்றுவிட்டு
நாங்கள் மட்டும் வாழ நினைப்பது
மாபெரும் வஞ்சகம்!

நீ அழைத்தது ஈழத்தைத்தான்
ஆனால் சாவு முதல் வந்து
ஏனோ தழுவிக் கொண்டது?

எங்களுக்கு வேண்டாம்
இன்னொரு தெய்வம்!
நீ வந்தாலே போதும்
நிச்சயம் விடியும்
நாளை தமிழீழம்!
இது சத்தியம்!
உன் விருப்பம் நிறைவேறும்.
ஈழப்பிரகடனம்
நல்லூரின் வீதியிலிருந்தே
நாளை நடைமுறைப்படுத்தப்படும்!

★★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# நேர்காணல்

# ஓவியர் தயா

## நேர்முகம் கருணாகரன்

இன்று பரவலாக எல்லாத் தரப்பினரிடையேயும் விதந்து பேசப்படும் ஓவியராக தயா (தி. தயாநந்தனம்) விளங்குகிறார். 'ஓவியம் உயர்ந்தோர் மாட்டே' என்ற கருத்தைப் பொய்யாக்கி, பாமரரும் புரிந்துகொள்ளக் கூடியதாக வரைதலை ஒரு பண்பாக்கிய பெருமை இவரைச் சாரும்.



எமது தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு ஓவியத்துறையில் பெரும் பங்காற்றி வருபவர் இவரென்று 'வெளிச்சம்' கருதுகிறது. இளம் வயதிலேயே ஞானமும், வரைதலில் லாவகமும், சிந்திப்புத் திறனும் சிந்தித்ததைத் தெளிவாக வெளிப்படுத்தும் முறைமையும் இவரது தனித்துவத்திற்கு அடித்தளமானவை.

சிரித்திரன் சுந்தருக்குப் பிறகு கருத்தோவியத்தின் மூலம் சிரிக்கவும் சிந்திக்கவும் தூண்டியவர். எமது சூழலில் அரசியல் பரிமாணம் மிக்கனவாக இவரது கார்ட்டூன்கள் விளங்குகின்றன.

பழையனவற்றின் தளத்தில் நின்று கொண்டு நவீனத்தை எட்டித் தொடும் ஆவலும், ஆற்றலும் நிறைந்த இளந்தலைமுறைக் கலைஞராக தயா அடையாளம் காட்டுகிறார்.

தயாவின் புதிய சிந்தனைகளும், புதிய வெளிப்பாட்டு முறைமையும் நல்லதொரு ஓவிய எதிர்காலத்தை தமிழீழத்துக்கு வழங்குமென எதிர்பார்க்கலாம்.

➤ **ஈழத்து நவீன ஓவியத்தில் ஒரு புதிய வருகையாக உங்கள் ஓவியங்கள் அமைகின்றன. இதில் உங்கள் ஓவியங்களுக்கான தனிப் பண்புகள் என எதைக் கருதுகிறீர்கள்?**

உணர்வுகள், கருத்துக்களை எப்படியெல்லாம், எந்த முறைகளிலெல்லாம் ஓவியத்தளத்தினூட வெளிப்படுத்த முடியுமோ அவ்வாறெல்லாம் முயற்சி செய்கிறேன். பல்வேறு விதமான கோட்டு வரைவுகளாகவும், வர்ண ஓவியங்களாகவும் அவை இருக்கின்றன. இங்கு நான் எந்த வகையான வரையறைகளையும் யோசிப்பதில்லை. முடிவு எனக்குத் திருப்தியைக் கொடுத்தால் சரி. எமக்கென ஒரு தனிப்பண்பு, பாணி என்பனவெல்லாம் ஒரு வளர்ச்சி நிலையில் எம்மை அறியாமலே எமது படைப்புக்களில் தோற்றம் கொள்ளும்.

இங்கு எமக்கென்ற பாணி என்பது ஒரு நிலையில் எமது படைப்பாற்றல் சுயாதீனத்தை சிறைப்படுத்தும் ஒன்றாக இருப்பதை நான் விரும்பவில்லை.

➤ **உங்கள் அநேக ஓவியங்கள் நவீன ஓவியங்களாகவே இருக்கின்றன. தத்ரூப ஓவியங்களை விட நவீனத்தை ஏன் கையாளுகின்றீர்கள்?**

கட்டற்ற முறையில் உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடியதான சந்தர்ப்பத்தையே நவீன ஓவியம் எமக்கு வழங்குகிறது. சதா தேடலிலும், புதியதான சிந்தனையுடனும் இயங்கும் ஓவியன் ஒருவன் இதையே விரும்பி நிற்பான்.

தத்ரூப ஓவிய முறைமை மூலம் ஒரு வரையறைக்கப்பால் வெளிப்பாடு ஒன்றை வெளிக்கொணர முடி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



நோர்வே


**சுதந்திரதாகம்**

தமிழின விடுதலைக் காற்றுத் தழுவி விரிந்த கதிர்களின் வாசம் சுமந்து விளைந்த நோர்வே சுதந்திரதாகம். தாய்நிலம் விட்டுப்

யாது. கற்பனை வளத்துடனும் மிகுந்த சுதந்திரத்திடனும் உணர்வுகளை வெளிப்படுத்தும் நவீன ஓவியங்களே படைப்பாற்றல் வலிமை வாய்ந்தனவாகும்.

**➤ அவலங்களைச் சித்தரிக்கும் போது அது சிறந்த கலையாக உள்ளதென்றும், எழுச்சி, எதிர்ப்புணர்வு என்பவற்றைச் சித்திரிக்கும் போது அவை பிரச்சாரமென்றும் பரவலான ஒரு கருத்து உண்டு. இதுபற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?**

அவலங்கள் என்றாலென்ன, எழுச்சி, எதிர்ப்புணர்வு என்றாலென்ன அவற்றை வெளிப்படுத்தும் படைப்புக்கள் எவ்வளவுக்கு கலையாக்கம் பெறுகின்றன என்பதிலேயே இது தங்கியுள்ளது. பிரச்சாரத் தன்மை வாய்ந்த அவலச் சித்திரிப்புக்களும் இருக்கின்றனவே! அவலங்கள் எல்லோருக்கும் பொதுவான உணர்வை வழங்குவன. ஆனால் எழுச்சி, எதிர்ப்புணர்வு என்னும்போது அதற்குரிய மனோபலம் வித்தியாசப்படுகிறது. எனவே, இந்த நிலையில் ரசனை, கருத்துநிலை என்பனவும் வேறுபடுகிறது.



எல்லோரும் ஏறின குதிரையில்...

**➤ "நமது இன்றைய ஓவியங்கள் பரந்த, ஆழமான தளங்களில் இல்லை. ஒரே தன்மையான பொருட் தன்மையும், உணர்வுமே காணப்படுகிறது" என்றொரு குற்றச்சாட்டு உள்ளது. இது பற்றிய உங்கள் கருத்து என்ன?**

குண்டு வீச்சைப் பற்றிச் சொல்லும் போது நீங்கள் ஒரு குண்டு வீச்சுச் சம்பவத்தைத்தான் ஊகிப்பீர்கள். ஆனாலும் ஒவ்வொரு தடவை குண்டுவீச்சு நிகழும் போதும் வெவ்வேறான விபரிக்க முடியாத உணர்வுகளும் தாக்கங்களும் ஏற்படுகின்றதல்லவா? பொதுவாகப் பார்க்கும்போது குண்டுவீச்சு என்ற ஒரு சொல்லையே உணர முடியும். தனித்தனியா, ஆழ்ந்து பார்க்கும் போது ஒவ்வொன்றின் சந்தர்ப்பமும் ஒவ்வொரு விதமானவை, அனுபவங்களும் வேறுபட்டவை.

நமது ஓவியங்கள் போராட்டம் என்ற மிக முக்கியமான சூழிலில் ஒன்றித்த சாரமாக அமைவது தவிர்க்க முடியாதது. இது எந்தக் கலைக்கும் பொதுவானதாக இருக்கும். ஆனால் கவனித்துப் பார்க்கும் போது ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டிருப்பதை உணரமுடியும்.

எனினும், இன்னும் பரந்தும் ஆழமாகவும் நாம் செல்ல வேண்டும் என்பது உண்மையே!

**➤ எமது தேசிய விடுதலைப் போராட்டம் புதிய கலை, இலக்கிய வெளிப்பாடுகளைத் தரும் எனப் பெரிதும் பேசப்படுகிறது. இதில் ஓவியத்தின் பெறுமானம் எவ்வாறிருக்கின்றது?**

இங்கு நாடகம், கவிதை போன்ற கலை, இலக்கியப் படைப்புக்களின் வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது ஓவியத்துறையின் வளர்ச்சி பின்தங்கியதாகவே காணப்படுகிறது. ஆனாலும் போராட்டம் முனைப்படைந்த காலத்துடன் ஓவியத்துறையும் மெல்ல விழிப்புற்று செயற்பட ஆரம்பித்தது. போராட்ட காலத்தில் ஓவியத்துக்கான தேவையும் பங்களிப்பும் அதிகமாகவே வேண்டப்படும் ஒன்றாகவுள்ளது. ஆச்சரியமானதும், உன்னதமானதும், அபூர்வமானதுமான எமது போராட்ட




பிரிந்த மயில்கள் - இங்கு
தேசம் நினைத்து
தோகை விரித்ததோ
விடுதலை நாடி மனம் வேகமாய்
செல்லும் புரவி
வேங்கைகள் கதையோடு மண்மணம்
சொல்லும்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காலத்தில் படைக்கப்படும் ஓவியங்கள் ஒரு புதியவரவாகவே இருக்கும். இங்கு போராளிக் கலைஞர்களின் படைப்புகள் வித்தியாசமாக வரக்கூடிய வாய்ப்புகளும் உள்ளன. காலத்தைப் பதிவு செய்தல், மக்களை விழிப்புணர்வுடன் போராட்டத்தின் பால் பிரக்ஞையுறச் செய்தல், எங்கள் போராட்ட வாழ்வை வெளியுலகுக்கு தெரியப்படுத்துதல் போன்றவற்றில் ஓவியத்தின் செயற்பாடு இருக்கிறது.




**➤ நவீன அரங்கில் ஓவியம் சார்ந்த காட்சிகளும், செயற்பாடும் ஒரு அங்கமாக உணரப்படுகிறதே! இதில் ஓவியனின் கவனமும், செய்கையும் எத்தகையதாகிறது?**

பார்வைப் பரப்பில் சூழலையும், பாத்திரங்களின் குண இயல்புக்குரிய தோற்றங்களையும் வழங்குவதில் ஓவியன் செயற்படுகிறான்.

**➤ ஓவியத்துறையில் படித்துப் பட்டம் பெற்றவர்களாக பலர் இருக்கிறார்கள். ஆனால், அவர்களெல்லாம் வெளியே தங்களை இந்தத் துறையில் இனங்காட்டுவதில்லையே. இது ஏன்?**

பட்டங்களை வைத்துக்கொண்டு ஒருவரது படைப்பாற்றலை எதிர்பார்க்கமுடியாது. இது இன்றைய கல்விச்சூழலில் புரியப்படாத ஒன்றாகவே இருக்கிறது.

**➤ உங்கள் வர்ண ஓவியங்களில் ஏன் செந்நிறம் சார்ந்த வர்ணங்களையே அதிகமாகப் பயன்படுத்துகிறீர்கள்?**

வர்ண ஓவியங்களைக் குறைவாகவே தீட்டியுள்ளேன். இங்கு வர்ணத் தெரிவு எனும்போது ஓவியத்தின் கருப்பொருளுக்கு ஏற்பவே நிச்சயிக்கப்படுகிறது. நமது சமகால நிகழ்வுகளைப் படைப்பாக்கம் செய்யும்போது செந்நிறத்தை தவிர்க்கமுடியாது. இதனாலேயே செந்நிறத்தின் தாக்கம் அதிகமாக எனது ஓவியங்களில் காணப்படுகிறது.

ஓவிய ரசனை மனப்பாங்கு குறைவாக இருப்பதால்தான் இங்கு ஓவிய வளர்ச்சியும் பின்தங்கியதாக உள்ளது. ரசனை தொடர்பான குறைபாட்டை புத்திஜீவிகள் மட்டத்திலேயே சுட்டிக்காட்ட முடியும். ஆனால் அண்மைக்காலங்களில் ஓரளவு நல்ல மாற்றம் நிகழ ஆரம்பித்துள்ளது.

தொடரான கண்காட்சிகள், ஓவியம் பற்றிய விமர்சனங்கள், பத்திரிகைகளில் ஓவியம் சம்பந்தமான கட்டுரைகள், ஓவியங்கள் போன்றவற்றை இடம்பெறச் செய்தல், ஓவியக் கலையில் பொருத்தமான மாற்றங்களை ஏற்படுத்துதல் என்பவற்றினூடாக ரசனையை வளர்க்கமுடியும்.

**➤ ஓவியத்துறையில் ஈழத்து விமர்சனம் எந்த நிலையில் இருக்கிறது?**

ஒரு துறையின் வளர்ச்சியுடன் விமர்சன வளர்ச்சியும் சமாந்தரமாகவே எப்போதும் இருக்கவேண்டும். இங்கு ஓவியத்துறையில் குறிப்பிடும்படியாக எந்த விமர்சன முறைகளும் வளரவேயில்லை எனலாம். ஓவிய விமர்சனம் என்பது பெரிய இடைவெளியாகவே இருக்கிறது.

**➤ கார்ட்டூனிஸ்ட், ஓவியர் இரண்டுமாக எப்படி இயங்க முடிகிறது?**

ஒரு கார்ட்டூனிஸ்ட் எப்போதும் ஓவியராகவே இருப்பார்.

**➤ இன்றைய சமூக, பொருளாதார அரசியல் சூழலில் கார்ட்டூன் பெறும் முக்கியத்துவம் என்ன?**

இன்றைய எமது தேசவிடுதலைப் போராட்ட காலத்தில் பேரினவாத அரசு சகல வழிகளிலும் எம்மீது தாக்கத்தை ஏற்படுத்தி அழிக்க முற்படுகிறது. இங்கு கார்ட்டூன்கள் அரசின் சகலவகையான முகமூடிகளையும் கிழித்து உண்மையான அதன் கோர முகத்தை சாதாரண பொதுமகனுக்கும் உலகிற்கும் காட்டும் இந்தச் சந்தர்ப்பத்திலேயே கார்ட்டூன்கள் முக்கியத்துவம் பெறுகிறது.

**➤ ஒரு கார்ட்டூனிஸ்டின் கவனம் எவையெவற்றில் இருக்கவேண்டும்?**

அநிதிகளுக்கு எதிராக குரல் கொடுக்கும் சமூகத்தின் குரலாகவும், சூழலை அவதானிப்பதாகவும், பார்ப்பவரை ஈர்க்கக்கூடியதாகவும், விமர்சனத்தை நகைச்சுவைத் தளத்தில் வெளியிடுவதாகவும் இருக்க வேண்டும்.

**➤ இன்று பரவலாக அறியப்பட்ட ஓவியராக நீங்களும் ஆழமான கவனிப்புக்குரியனவாக உங்கள் ஓவியங்களும் காணப்படுகின்ற நிலையில், உங்களின் வாழ்க்கைப் பின்னணி பற்றியும் இத்துறை ஈடுபாடு குறித்தும் சொல்லுங்கள்:**

1968-ல் நல்லூரில் பிறந்தேன். ஆரம்பக்கல்வியை நல்லூர் - சி. சி. த. க. பாடசாலையிலும் பின்னர் க. பொ. த. உயர்தரம் வரையில் யாழ் - மத்திய கல்லூரியிலும் பயின்றேன்.



ஆண்டு ஒன்பது வரையுமே சித்திரக்கல்வியை ஒரு பாடமாக எடுத்திருந்தேன். பின் வேறுதுறைகளில் கல்வி திசை திரும்பியது. இங்கு ஓவியத்துறையில் மேற்படிப்பு வசதிகள் இல்லாமை என்பது என் போன்ற பலரை பாதிக்கும் வேதனையான விடயமாகவே நீள்கிறது.


சிறுவயதில் ஓவியத்துறை ஈடுபாட்டுக்கு ஆரம்ப வழிகாட்டியாக எனது தந்தையார் உதவினார். இவ்விடத்தில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



www.tamilarangam.net

**"எமக்கென்ற பாணி என்பது ஒரு நிலையில் எமது படைப்பாற்றல் சுயாதீனத்தை சிறைப்படுத் தும் ஒன்றாக இருப்பதை நான் விரும்பவில்லை"**






ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களையும் மனங்கொள்ள வேண்டும்.

பின்னாளில் எமது தேசிய விடு தலை இயக்கத்தையும் சில இலக்கிய நண்பர்களையும் மறக்கமுடியாது.

பாடசாலைக் காலங்களில் ஏதா வது வரைய வேண்டுமென்ற உந்து தல் வரும்போதெல்லாம் எனக்குத் தெரிந்த மாதிரியெல்லாம் வரைந்தி ருக்கிறேன். இப்பொழுது அவற்றைப் பார்க்கும் போது எனது வளர்ச்சி யில் ஏற்பட்ட மாற்றத்தை அவதா னிக்க முடிவதுடன் சிலவேளை சிரிப்பும் வருகிறது.

இந்திய இராணுவம் இங்கு நிலை கொண்டிருந்த இருண்ட அந்தக் காலப்பகுதியில் வெளியில் வெளிக் கிட முடியாது. வீட்டினுள் முடங்கி யிருந்தபோது கூடுதலாக நான் வரைய ஆரம்பித்தேன். ஆனால் சரி யான வழிகாட்டல்கள் இருக்க வில்லை.

பின், இந்திய இராணுவ வெளி யேற்றத்துடன் 'ஈழநாதம்' பத்திரிகை மூலம் கார்ட்டூனிஸ்டாக வெளித் தெரியவந்தேன். மறுபக்கம் போராட் டம் சார்ந்த வெளியீடுகள் மூலமும், ஏனைய வெளியீடுகள் மூலமும் எனது ஓவியங்கள் வெளித்தெரியத் தொடங்கின. இங்கு எனது கார்ட் டூன்களைப் பிரசுரிப்பதற்கான களங்களை ஏற்படுத்தித் தந்த 'ஈழ நாதம்' நிறுவனம், நான் வரைந்த ஆரம்பகால கார்ட்டூன்கள் சில வற்றை 'காலமும் கோலமும்' என்ற தொகுப்பாக்கி வெளியிட்டது. இந்த ஆரோக்கியமான ஆதரவு மேலும் இத்துறையில் நம்பிக்கைவைக்க உதவியாக இருந்தது. இங்கு ஒன்றை நிச்சயமாகக் குறிப்பிடவேண்டும்.

எனது வரைவுகளை அடையாளம் காணுவதற்கு 'ஈழநாதம்', மற்றும் 'விடுதலைப் புலிகள்', 'வெளிச்சம்', 'சுதந்திரப்பறவைகள்', 'சாளரம்', 'ஆதாரம்' போன்ற பத்திரிகை, சஞ் சிகைகளும் வேறு சில வெளியீடுக ளும் களம் அமைத்துத் தந்திருந்தன.

இவற்றைவிட சில வர்ண ஓவி யங்களையும் எனது சேமிப்பாகச் செய்துள்ளேன்.

சுயமுயற்சியாலும் தேடலினா லுமே நான் இன்றைய நிலையை அடைந்திருக்கிறேன். என்றாலும்.... என்னைப் பொறுத்த வரையில் நிறைய முயற்சிகள் செய்யவேண்டி யுள்ளது; கற்க வேண்டியுள்ளது.

இது இன்னும் ஆழமான பரந்த ஒரு தளத்திற்கு என்னை அழைத் துச் செல்லும் என நம்புகின்றேன்.

## மாவீரர் நாளை முன்னிட்டு 'எரிமலை' சஞ்சிகை நடாத்தும் சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டி

'எரிமலை' சஞ்சிகை மாவீரர் நாளை முன்னிட்டு சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகளை நடாத்துகி றது. இப்போட்டிகள், சமகால நிகழ்வு களை, புலம்பெயர் வாழ்வியல் யதார்த் தக் கோலங்களை, அகதி உலகெங்கும் அலையும் தமிழரின் துன்பியல் நிகழ்வு களைப் பிரதிபலிக்கும் உள்ளடக்கங் கள் விரும்பி வரவேற்கப்படும்.

### நிபந்தனைகளும் விதிகளும்

சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகளுக்கு வயது, பால் வேறு பாடு கிடையாது.

படைப்புக்கள் யாவும் சமகால நிகழ்வை மையமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

சிறுகதைகள், கட்டுரைகள் 1500 சொற்களுக்கு மேற்படாமலும், அமை தல் வேண்டும்.

படைப்பாளி தன்னுடைய பெயர், முகவரி என்பவற்றைத் தனித்தாளில் எழுதி அது தமது ஆக்கம் என்பதை உறுதிப்படுத்தவேண்டும்.

பிரதேச பிரதிநிதிகள் மூலமாகவும் படைப்புக்கள் சேர்ப்பிக்கப்படலாம்.

ஆக்கங்கள் முன்பு பிரசுரிக்கப்பட் டவையாகவோ, பிரசுரத்திற்கு அனுப் பப்பட்டவையாகவோ இருக்கக்கூடாது.

போட்டிக்கான ஆக்கங்கள் கார்த் திகை 10-ம் திகதிக்கு முன் எமக்குக் கிடைத்தல் வேண்டும்.

போட்டி முடிவுகள் எரிமலை இத ழில் அறிவிக்கப்படும்.

முதல் மூன்று இடங்களைப் பெறும் ஆக்கங்களுக்கு மாவீரர் நாள் விழா வில் பரிசில்கள் வழங்கப்படும்.

கடித உறையின் இடது பக்க மூலையில் 'மாவீரர் நாள் 1995' எனக் குறிப்பிட்டு எரிமலை முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கின்றோம்.

'எரிமலை'
ஆசிரியர் குழு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அபத்தமும் அர்த்தமும்

## பிரம்மஞானி

உண்மையைத் தேடும் தத்துவார்த்த விசாரணைகள் அனைத்தும் மனிதனிடமிருந்தே தொடங்கவேண்டும் என்பது சாத்தரின் நிலைப்பாடு. ஏனெனில் மனிதனே வாழ்வியக்கத்தின் மையமாக நிற்கிறான். அவனே இருப்பின் மெய்ப்பொருளாகவும் இருக்கிறான். அவனிடமிருந்தே வாழ்வின் அர்த்தங்கள் அவிழ்கின்றன. அவனே அறிவியக்கத்திற்கும் ஆதாரமாக நிற்கிறான். அவனே தன்னையும் படைத்து வரலாற்றையும் படைக்கிறான். அவனே தன்னையும் தேடி, சத்தியத்தையும் தேடுகிறான். இந்த அபூர்வமான மனிதனை, அவனது முழுமையில் தரிசித்துக்கொள்வது சாத்தியமா? அகநிலையிலும் புறநிலையிலும் உருவாக்கம் பெறும் மனிதனை, முழு மனிதனாகக் கண்டு கொள்வது எப்படி?

சாத்தரை உறுத்திவந்த கேள்வி இது. பிரஞ்சு இருப்பியத்தின் பிரதம குருவாகவும், நவ மார்க்சியத்தின் தத்துவ வித்தகராகவும், ஒரே சமயத்தில் இரு வேறுபட்ட கருத்து நிலைகளில் காலூன்றி நின்றபடி, மனிதனை அவனது ஆழத்தில் தரிசிக்க விழைந்தார் சாத்தர்.

இருப்பியம் மனிதனை ஒரு பரிமாணத்தில் விசாரணை செய்கிறது. இந்தத் தத்துவம் மனிதனைத் தனிமனிதனாகக் காண்கிறது. தனிமனிதனின் வாழ்நிலைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. தனிமனிதனின் அகவய வாழ்வை, அவனது அனுபவ உலகத்தை ஆழமாகப் பார்க்கிறது. எனவே, இருப்பியம் காணும் மனிதன் அகமனிதன். இந்த அகமனிதன் முக்கியமானவன். ஆனால் அவன் முழுமனிதனல்ல.

மனித வாழ்வின் சமூகப் பரிமாணத்தை இருப்பியம் செம்மையாகப் பார்க்கவில்லை. சமூக உலகத்தில், அதன் அசைவியக்கத்தில், மனிதனை நிலைநிறுத்திப் பார்க்கவில்லை. இதனால் சமூகத்தைப் படைக்கும் வரலாற்று மனிதனை இருப்பியம் கண்டுகொள்ளவில்லை. இதுதான் இருப்பியத் தத்துவத்தின் பிரதான குறைபாடு. இந்தக் குறைபாட்டை மார்க்சியம் நிவர்த்தி செய்துவிடுகிறது. இந்த வகையில், மார்க்சியம் ஒரு புதுமையான சமூக - வரலாற்றியல் நோக்கு என்பது சாத்தரின் கருத்து.

மார்க்சியம் சமூக உலகத்தின் நிதர்சனத்தை வலியுறுத்துகிறது. சமூக வாழ்விற்கும், சமூக உறவுகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறது. மனிதனை தனிமனிதனாகக் காணாமல், சமூக உறவுகளைச் சுமந்து நிற்கும் சமூகப் பிறவியாகக் காண்கிறது. எனவே, மார்க்சியம் காணும் மனிதன் சமூக மனிதன். மனிதனை சமூக மனிதனாகக் கண்டு, அவனை சமூக உற்பத்தி உறவுகளில் நிலைநிறுத்தி, அந்த உறவுகளை வர்க்க உறவுகளாகப் பார்த்து, அந்த வர்க்க உறவுகளால் எழும் முரணியப் போராட்டத்தை வரலாற்றின் அசைவியக்கமாக விளக்கி, மனிதனை வரலாற்றுப் படைப்பாளியாக சித்திரிக்கிறது மார்க்சியம். இந்த வகையில் கார்ள் மார்க்சின் வரலாற்றுப் பொருளியம் ஒரு உன்னதமான தத்துவம் என்பதை சாத்தர் ஏற்றுக்கொள்கிறார். எனினும், மார்க்சியம் புலப்படுத்திக் காட்டும் சமூக மனிதனும் முழு மனிதன் அல்ல என்பது சாத்தரின் வாதம்.

மார்க்சிய மனிதனுக்கு சமூக முகம் இருக்கிறது; வரலாற்று முகம் இருக்கிறது; ஆனால் மனித முகம் இருக்கவில்லை என்பது சாத்தரின் கருத்து. சாத்தரின் பார்வையில் இந்த மனித முகம் என்பது மனிதத்

### உருவகம்

## இன்பவிழிப்பு

– நாக. பத்மநாதன்

**அது** என்ன?

படமா?

நான்கு கரையும் போடப்பட்ட சட்டத்துள் அடங்கி நிற்கும் ஏதோ ஒரு படமா?

இதற்கு அப்பால் அது நின்றது!

பதிக்கப்பட்ட, ஒரு படத்தை அணிந்து அதைச் சுற்றி இடப்பட்ட சட்டத்தின் வரைவுக்குள் அது நிற்கவில்லை! தனித்துவமாய் நின்றது!

எட்டிய எதையும் சுட்டிக்காட்டும் இயல்போடு நின்றது! அதன் தெளிந்த தெளிவிலே ஓர் அழகு!

அதை 'நிலைக்கண்ணாடி' எனக் கூற என் மனம் இசையவே இல்லை!

அதனை அணுகி நின்றேன்.

அது நானாக நின்றது; நான் 'அதனாக' நிற்பதை உணர்ந்தேன்!

மெய்சிலிர்ப்பு!

பகல் இரவாகியது. இருளைக் கலைக்கும் நிலவுகூட அங்கில்லை!

நல்லதேயான இருள்!

என்ன? அங்கே உடன் ஒரு உள்ளொளியா?

மௌனம் பேசுகிறது;

நிலைக்கண்ணாடி உலகின் அளவாய்த் தெரிகிறது!

அது 'மணாளா' எனவில்லை!

'மகனே' என்கிறது. 'மைந்தனே' என்கிறது!

'உன் சிறு இன்பத்தையல்ல, உலகின் துயரத்தைப் பார்' என்கிறது!

மொட்டுக்கள் மலர முயலுகின்றன. விதைகள் முளைத்து எழ முயல்கின்றன. காற்று அலைகளையும் முகில்களையும் தொட்டு வீசி எழுகின்றது! ஆகா, எங்கும் உயிர்ப்பு! எங்கும் உறுதி! எதிலும் சுதந்திர இன்பம்!

'இவை தடைப்படும் போது துன்பம், விடுபடும் போது இன்பம்'

'அதற்குப் பெயர் என்ன?' என வினவியது என் மனம்.

'சுயம், அல்லது சுதந்திரம்! இதற்கென உழைப்பதே இதயம் காண் இன்பம்!'

இது எங்கும் வீசிய இன்பம் தெரிந்தது!

'துன்பம் எது?'

'அடங்கிக் கிடப்பது. அடங்கி வாழ்வது. மாற்றானின் இச்சைப்படி நீ வாழ முயல்வது.'

'சரி' என்றது என் மனம்.

விழித்தேன்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தைக் குறிக்கிறது. மனிதா சாரத்தைக் குறிக்கிறது. இந்த மனிதா சாரம் என்பது மானிடத்தின் பொதுவுடமையல்ல. அது தனிமனிதர்களின் தனியுடமை. ஒவ்வொரு தனிமனிதனும் தனது வாழ்வனுபவத்திலிருந்து சுயமாகத் தேடிக் கொள்ளும் தனியியல்பு. அகவயமான அனுபவத்திலிருந்து பெறப்படும் இந்தத் தனிமனிதத்துவத்தை மார்க்சியம் மறுதலிக்கிறது என்பது சாத்தரின் நிலைப்பாடு. மனிதனானவன் தனது தேர்வுகள், தீர்மானங்கள், செயற்பாடுகளிலிருந்து, ஒட்டுமொத்தத்தில் தனது உலகானுபவத்திலிருந்து உருவாக்கிக் கொள்ளும் தனிமனிதத்துவத்தை நிராகரிப்பதால், மார்க்சியம் முழு மனிதனைத் தரிசித்து நிற்கவில்லை என்பது அவரது வாதம்.

பொருளுற்பத்தியை ஆதாரமாகக் கொண்ட பொருளிய வாழ்விற்கு மார்க்சியம் முதன்மை கொடுக்கிறது. பொருளியல் புறநிலைகளின் நிர்ணயத் தன்மையை வலியுறுத்துகிறது. பொருளிய வாழ்வும் வரலாற்றுச் சூழலும் சமூகத்தின் கருத்துலகை நிச்சயித்து விடுவதாகக் கூறுகிறது. மனித மனமானது வாழ்க்கையை நிர்ணயிப்பதல்ல; பொருளிய வாழ்வே மனித மனதை நிர்ணயித்துவிடுகிறது, என்ற கருத்தை முன்வைக்கிறது. இந்தப் பார்வையின் அடிப்படையில், அக நிலையை நிர்ணயிப்பது புற நிலைகள்; மனவுலகத்தை நிர்ணயிப்பது பொருளுலகம்; தனிமனிதத்தை நிர்ணயிப்பது சமூகம்; இவ்விதம் காலம், இடம், சமூக சூழல் என்ற ரீதியில் புறவுலக நிர்ணய சக்திகளின் ஆதிக்க அழுத்தத்திற்கு உட்பட்டதாக மனித மனம் வரையறுக்கப்படுகிறது.

மார்க்சியத்தின் இந்தப் பார்வையை 'பொருளிய நிர்ணயத் தத்துவம்' என விமர்சிக்கிறார் சாத்தர். இது முற்றுமுழுதாக மனித மனதையும், மனிதனின் அக வாழ்வையும் புறநிலை நிர்ப்பந்தங்களுக்குள் சிறைப்படுத்திவிடுகிறது; மனித பிரக்ஞையின் சுயாதீனத்தையும் சிருஷ்டித் தன்மையையும் இது மறுதலிக்கிறது, என்பது சாத்தரின் குற்றச்சாட்டு.

காலம், இடம், சூழல் என்ற ரீதியில் புறநிலைகள் மனிதனின் அக நிலையில் பாதிப்புக்களை விழுத்துகின்றன என்பதை சாத்தர் மறுக்கவில்லை. சமூகப் பொருளிய வாழ்வும், சமூக உறவுகளும் மனிதனின் சிந்தனையுலகை நிச்சயித்து, நெறிப்படுத்திவிடுகிறது என்பதையும் அவர் மறுக்கவில்லை. ஆயினும், மனவுலக வாழ்வை, தனிமனித இயல்பை முற்றுமுழுதாக புறவுலக நிர்ப்பந்தங்களுக்கு ஆட்படுத்த முனைவது தவறு என்கிறார் சாத்தர். மனித மனமானது புறவுலக நிர்ப்பந்தங்களுக்கு அப்பால், நிர்ணய அழுத்தங்களுக்கு அப்பால், விஞ்சி எழும் விழிப்புத்தன்மை கொண்டது; சிருஷ்டித்தன்மை கொண்டது; சுயாதீனமுடையது, என்பது சாத்தரின் வாதம்.

மனித மன இயக்கத்தை முற்றுமுழுதாகப் பொருளுலக நிர்ப்பந்தங்களுக்குள் முடக்கிவிட முடியாது. மனவுலகத்தை பொருளுலகம் முற்றுமுழுதாக நிர்ணயிப்பதாயின் இந்த உலகத்தில் புரட்சிகரமான மாற்றம் எதுவும் நிகழ்வது சாத்தியமில்லை என்கிறார் சாத்தர். ஆனால் உலகம் சதா மாறிக்கொண்டே இருக்கிறது. ஒரு வளர்ச்சிப் பாதையில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. இந்த மாற்றமும் முன்னேற்றமும் நிகழ்வது எப்படி? சிந்தனை வளர்ச்சியும் சிருஷ்டி ஆற்றலும் இல்லாமல் மனித நாகரிகங்கள் தோன்றுவது எப்படி? சமூகங்கள் மாறுவது எப்படி? மனித சிந்தனைக்கு சிறகுகள் இருக்கின்றன. அதனை பொருளுலகச் சிறைக்குள் பூட்டிவைக்க முடியாது. பொருளுலக நிர்ப்பந்த விலங்குகளை உடைத்துக் கொண்டு வெளியில் வரும் ஆற்றல் மனித பிரக்ஞைக்கு இருக்கிறது என்கிறார் சாத்தர்.

மனித மனமானது ஆழமான விழிப்புணர்வைப் பெறும் அபாரமான தன்மையைக் கொண்டது. விழிப்புணர்வு கொள்ளும் மனதில் வெளிச்சம் பிறக்கிறது. அந்த வெளிச்சத்தால் பிறவுலக நிர்ப்பந்தங்கள் பிரக்ஞைக்குப் புலனாகிறது. இந்தப் புரிந்துணர்வால் நிர்ணயத்தின் பிடியிலிருந்து மனமானது விடுதலை பெற்றுக் கொள்கிறது. இவ்விதம் விடுதலை பெறும் மனம்தான் புரட்சிகர மனம். இந்தப் புரட்சிகரப் பிரக்ஞைதான் புரட்சிகரமாகச் சிந்திக்கும்; செயற்படும்; புரட்சியையும் செய்யும். எனவே, ஒரு புறம் பொருளிய நிர்ணயக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டு, மறுபுறம் புரட்சிகர செயற்பாட்டை வலியுறுத்துவது தவறு என்கிறார் சாத்தர். இது வைதீக மார்க்சியத்திலுள்ள முக்கிய முரண்பாடு என்பதையும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

பொருளிய நிர்ணயக் கோட்பாடு, மார்க்சிய இயங்கியல் தத்துவத்திற்கும் முரணானது என்பதும் சாத்தரின் வாதம். நிர்ணயம் என்பது வரையறையைக் குறிக்கிறது. தேக்கத்தைக் குறிக்கிறது. மாறா நிலையைக் குறிக்கிறது. ஒன்று இன்னொன்றின் மீது விழுத்தும் தாக்கத்தையும் மேலாதிக்கத்தையும் குறிக்கிறது. ஆனால் இயங்கியற் பார்வை இதற்கு மாறானது. இயங்கியலானது இயக்கத்தைக் குறிக்கிறது. மாற்றத்தைக் குறிக்கிறது. புத்தாக்கத்தைக் குறிக்கிறது. உயர்நிலை வளர்ச்சிப் போக்கைக் குறிக்கிறது. இயங்கியல் தத்துவமானது எல்லாப்

## இயற்கை ஒலிகளின் காப்பகம்

www.tamilarangam.net

இயற்கையின் ஒலிகளைப் பதிவு செய்து ஆவணப்படுத்த அமெரிக்காவில் 'லைப்பிரரிகள்' இருக்கின்றன. இவற்றில் பணிபுரிபவர்கள் நுட்பமான ஒலிப்பதிவுச் சாதனங்களுடன் காடு, மலைகள் எல்லாம் அலைந்து ஒலிகளைப் பதிவு செய்கின்றனர்.

“இயற்கை ஒலிகள் கூட, சரித்திரக் குறிப்புக்கள் போன்றவை. ஒரு காலத்தில், ஓர் இடத்தில் என்ன நடந்தது? என்பதைப் போலவே, 'என்ன ஒலி கேட்டது ?' என்பதும் முக்கியமானது” என்கிறார் இயற்கை ஒலிப்பதிவாளரான கிறேக்பட்னி என்பவர்.

எங்கு பார்த்தாலும் காடுகளும், அமைதியான புல்வெளிகளும், அவற்றில் வாழும் பலவிதமான இனிய பறவைகளும் கூட அழிந்துவருகின்றன. அவற்றைப் புகைப்படம் எடுத்து வைத்தாலும், அவற்றின் குரலை எம்மால் கேட்க முடியாது. அதனால், அவற்றின் குரல்கள் ஒலிப்பதிவு செய்யப்படுகின்றன.

மழையின் ராகம், இடியின் தாளம், புயலின் ஓசை போன்றவற்றையும், பனி மலைகள், மழைக்காடுகள் என அந்தந்த இடங்களுக்கே உரித்தான இயற்கையான ஒலிகளையும் பதிவு செய்து, அமெரிக்காவில் ஆவணப்படுத்தி வைக்கிறார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொருட்களிலும், எல்லா உறவுகளிலும் முரணியத்தைக் காண்கிறது. எதிர்வு சக்திகளின் போராட்டமாக மாற்றத்தை விளக்குகிறது. இயங்கியல் கண்ணோட்டத்தில் மனவுலக இயக்கத்தை பொருளுலக நிர்ப்பந்தங்களுக்குள் வரையறுக்க முடியாது. மனவுலக இயக்கமானது புறநிலை அழுத்தங்களையும் மீறியதாக, தனக்கே உரித்தான முரணியச் சுழற்சியில் உயர் நிலை வளர்ச்சி காண்கிறது. எனவே, பொருளிய புறநிலைகளின் தோற்றப்பாடாக, பிரதிபலிப்பாக, பிரதிபிம்பமாக, மனவுலகையோ கருத்துலகையோ சித்திரிக்க முடியாது என்கிறார் சாத்தர். இதன் அடிப்படையில் பொருளாதார அடித்தளத்தின் மேற்தளமாக கருத்துலகிற்கு விளக்கம் அளிக்க முயல்வதும் தவறு என்கிறார் அவர்.

புறநிலைகளுக்கு, அதாவது சமூக நிலைகளுக்கு முதன்மை கொடுக்கும் மார்க்சியத் தத்துவம், அக நிலைகளுக்கு அதாவது மனித மனம், மனித சுயம், மனித படைப்பாற்றல் என்ற ரீதியில் தனிமனி தத்துவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பது சாத்தரின் குற்றச்சாட்டு. இதனால் தனி மனிதத் தடயமற்ற சமூக உலகத்தை மார்க்சியம் கட்டியெழுப்பியிருக்கிறது. இந்த சமூக உலகத்தில் தனி மனிதனை இனம் காணமுடியாது. சமூக உறவுகள் என்ற சிலந்தி வலைப் பின்னலுக்குள் அவனது அடையாளம் அழிக்கப்படுகிறது. சமூக உறவுகளின் தன்மைகளைப் பிரதிபலிக்கும், சமூக உறவுகளின் சுமைகளைத் தாங்கி நிற்கும், சாரமற்ற, உயிரற்ற சமூக மனிதனை மட்டும் மார்க்சியம் காட்டுகிறது. இந்த மனிதன் முழுமனிதனல்ல என்பது சாத்தரின் நிலைப்பாடு.

அகவாழ்வும் புறவாழ்வும் புணர்ந்து பிரசவிப்பது தான் முழு மனிதத்துவம். இருப்பியம் மனிதனின் அகவாழ்வையும், மார்க்சியம் மனிதனின் புற வாழ்வையும் ஆழமாகத் தரிசித்து நிற்கும் தத்துவங்கள். எனவே இருப்பியமும் மார்க்சியமும் இணைந்து கொண்டால் முழு மனிதனைக் கண்டு கொள்வது சாத்தியமென சாத்தர் எண்ணினார். 1960-ல் அவர் எழுதிய CRITIQUE OF DIALECTICAL REASON என்ற தத்துவார்த்த நூல் மார்க்சியத்தையும் இருப்பியத்தையும் இணைக்க முனைகிறது.

'மார்க்சின் வரலாற்று பொருளியமானது மனித வரலாற்றிற்கு அறிவியல் ரீதியாக ஆதாரபூர்வமான விளக்கத்தைக் கொடுக்கிறது. அதே சமயம் இருப்பியம் தனிமனித வாழ்வின் நிதர்சனத்தை வலியுறுத்துகிறது. இந்த இரு பார்வைகளையும் கோட்பாடு ரீதியாக ஒன்றிணைப்பதன் மூலம் சமூக வரலாற்று இயக்கத்தில் தனிமனிதனின் இருப்பை நிறுவிவிடுவதே இந்த ஆய்வு நூலின் நோக்கம்' என்கிறார் சாத்தர்.

சமூக, வரலாற்று பரிமாணங்களில் தனி மனிதனை ஆய்வு செய்து, 'மார்க்சிய அறிவியலுக்கு மனிதனை அறிமுகப்படுத்தும்' சாத்தரின் நோக்கம் பெரிது. முகவுரையில் சொல்லப்படும் இந்த நோக்கினை நூலின் உள்ளடக்கம் நிறைவு செய்யத் தவறிவிட்டது என்றே சொல்ல வேண்டும்.

கார்ள் மார்க்சின் வரலாற்றுப் பொருளியத்தை மனித வரலாற்றின் உண்மை விளக்கமாக ஏற்று, அந்தச் சிந்தனையின் அடிப்படையில் நின்று தனது தத்துவத்தைப் படைத்திருப்பதாக சாத்தர் சொல்கிறார். மார்க்சிய சமூகவியலின் சிந்தனைப் பரப்பிற்குள் (கோட்பாட்டுக் கட்டமைப்பிற்குள்) மனித இயல்பினை விளக்கும் இருப்பியற் கருத்துக்களை புகுத்தி, தனி மனிதனுக்கும் சமூக உலகத்திற்கும் மத்தியிலான சிக்கலான உறவுகளை தாம் எடுத்து விளக்கியிருப்பதாக அவர் கூறுகிறார். அது மட்டுமன்றி, மார்க்சிய சிந்தனையுலகில் தனி மனிதனுக்கு இடமளித்து மார்க்சியத்தைப் புதுப்பித்திருப்பதாகவும் சாத்தர் பெருமிதம் கொள்கிறார். முகவுரையில் தரப்படும் இந்த விளக்கங்களை வாசித்துவிட்டு, சாத்தரின் நூலைப் படிப்பவர்களுக்கு ஏமாற்றமே காத்திருக்கிறது.

மிகவும் கனமான, சிக்கலான, தெளிவற்ற மொழிநடையில் எழுதப்பட்டிருக்கும் இந்த நூல், மார்க்சிய வரலாற்றியலை எந்த வகையிலும் செழுமைப்படுத்தவில்லை. மாறாக, மார்க்சிய மையக் கருத்துக்களையே திரிபுபடுத்தியிருக்கிறது. மார்க்சிய வரலாற்றியலுடன் இருப்பியத்தை இணைப்பதற்குப் பதிலாக, சாத்தர், தனக்கே உரித்தான பாணியில் ஒரு புதிய பூடகமான தத்துவத்தைப் படைத்திருக்கின்றார் என்று சொன்னால் மிகையாகாது.

## வாழ்வைப் பற்றிய தேடல்

புரியாத புதிரொன்றை
முடிச்சவிழ்க்கும் பாரம் எனக்குள்

உலர்ந்து போன இரவுகளில்
ஈரஞ் சொட்டச் சொட்ட
விழித்திருந்த அந்த நாட்களில் கூட
அதைப் புரியும் சந்தர்ப்பமில்லை.

தூங்கும் போதும்
எழும்போதும்
காற்றை வலித்து
மிதிவண்டியில் செல்லும் போதும்
பாரம் என்னை அழுத்துகிறது.

பிரயத்தனங்களின் முடிவு
பூச்சியமாகும் போது

இந்தத் தத்துவ நூலில் சாத்தர் முன்வைக்கும் கருத்துக்கள் பற்றியும், இந்தக் கருத்துகள் எந்தவகையில் மார்க்சிய வரலாற்றுப் பொருளியத்திற்கு முரண்பட்டு நிற்கின்றன என்பது பற்றியும் இனிப் பார்ப்போம்.

'இயங்கியல் அறிவியம் பற்றிய திறனாய்வு' என்ற தலைப்பில் இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது. கார்ள் மார்க்சின் வழிதழுவி மனித உலகத்து மெய்யுண்மைகளை விளக்க இயங்கியல் ஆய்வுமுறையை தான் கையாண்டிருப்பதாக சாத்தர் சொல்கிறார். ஆயினும் மார்க்சின் இயங்கியற் பார்வைக்கும் சாத்தரின் இயங்கியல் நோக்கிற்கும் அடிப்படையான வேறுபாடு உண்டு. கார்ள் மார்க்ஸ், இயங்கியலை இரு பரிமாணங்களில் அணுகினார். ஒன்று, பொருளுலகினதும் சமூக வாழ்வினதும் மூல இயக்கமாக இயங்கியலைக் கண்டார். மற்றது, இயங்கியலை ஒரு சமூக ஆய்வுக் கருவியாகக் கையாண்டார். (வெளிச்சத்தில், 'மனிதனும் வரலாறும்' என்ற தலைப்பில், பிரம்மஞானி எழுதிய தொடர்கட்டுரைகளில் மார்க்சிய இயங்கியல் பற்றி விபரமான விளக்கங்கள் தரப்பட்டுள்ளன) சாத்தரின் இயங்கியற் பார்வை வித்தியாசமானது.

சாத்தர் கற்பிக்கும் இயங்கியல், பொருளுலகத்திலோ சமூக வாழ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அது சூன்யமெனத்
தோற்றம் தருகிறது.

இப்போது வரையில்
போலிகள் மதிலாகி
மனவீட்டைக் காக்க
நான் தூங்குகிறேன்
பயணிக்கிறேன்
அனைத்தும் அதே ஒழுங்கில்

உப் பகலாக் கடல் நீரெனவான
அதற்குள் நின்று கொண்டே
கேட்கிறேன்
வாழ்க்கை எங்கிருக்கிறது?
புரியாப் புதிரின் முடிச்சவிழ்ப்பு
இன்னமும் தொடர்கிறது.

- இயல்வாணன்

மகாகவி நினைவுக் கவிதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற கவிதை

விலோ இயங்கவில்லை. அது மனித செயற்பாட்டு உலகத்தில் மட்டும் சஞ்சரிக்கிறது. இயங்கியல் என்பது மனித செயற்பாட்டிலிருந்து பிறக்கிறது; மனித செயற்பாடாக இயங்குகிறது என்கிறார் சாத்தர். மனித செயற்பாட்டிற்கு அறிவுபூர்வமான நோக்கம் இருக்கிறது; ஒரு தர்க்கீகம் இருக்கிறது. இந்த அறிவியற் தர்க்கீகமே இயங்கியல் -இப்படியான ஒரு புதிரான விளக்கத்தைக் கொடுக்கிறார் சாத்தர். இந்தப் பூடகமான தர்க்கீக ஆய்வுமுறைமையின் அடிப்படையில் மனித உலகத்தை விசாரணை செய்கிறார் சாத்தர்.

சாத்தரின் தத்துவ விசாரணை தனிமனிதனிலிருந்து, தனிமனித செயற்பாட்டிலிருந்து தொடங்குகிறது.

தனிமனிதன் தனிமையில் வாழவில்லை. அவன் சமூக உலகத்தில் வாழ்கிறான். சமூக உலகமானது தனிமனிதனுக்குப் புறம்பான, தனித்துவமான மெய்யுண்மையாக இயங்கவில்லை. தனிமனிதர்கள் என்ற அத்திவாரக் கற்களிலிருந்தே சமூக உலகம் கட்டடப்பட்டிருக்கிறது. தனிமனிதர்களைக் கொண்டதாகவே சமூகம் அமையப்பெற்றிருக்கிறது. தனிமனிதர்கள் இல்லாமல் சமூகம் என்பது இருக்கமுடியாது என்கிறார் சாத்தர்.

சமூக உலகத்தை ஒரு தன்னியக்க சக்தியாக, தனித்துவ விதிகளைக் கொண்டதாக, தனிமனிதர்களுக்கும் புறம்பானதாக, தனிமனிதர்களை வனைந்துவிடும் ஒரு பூதாகர இயந்திரமாக சித்திரித்துக் காட்டுவது தவறு. தனிமனிதர்கள்தான் சமூகத்தின் மூலப்பொருள். அந்த மையப் புள்ளியிலிருந்து சமூக உலகத்தை விசாரணை செய்யவேண்டும் என்பது சாத்தரின் வாதம். தனிமனிதனிலிருந்து சமூக உலகத்தைக் கண்டுகொள்வது எப்படி? இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கும் வகையில், மனித செயற்பாடு (Human Praxis) என்ற கருத்துருவத்தை அறிமுகப்படுத்துகிறார் சாத்தர்.

மனித செயற்பாடுதான் தனிமனிதனையும் சமூக உலகத்தையும் பிணைக்கிறது. வாழ்க்கையின் தேவைகளை நிறைவு செய்துகொள்ள மனிதர்கள் செயற்பாட்டில் ஈடுபடுகிறார்கள். ஒவ்வொருவனும் ஏதோ முயற்சியில் ஈடுபடுகிறான்; செயற்படுகிறான்; உழைக்கிறான். இந்தச் செயற்பாடு ஆக்கமானது. படைப்பாற்றல் கொண்டது. எதிர்காலத்து நிறைவையும், முழுமையையும் தேடுவது. ஒவ்வொருவனது செயற்பாடும் மற்றவனுடன் தொடர்புடையதாக இருக்கிறது. தனிமனிதர்களது ஒட்டுமொத்தமான செயற்பாடுகளின் முழுவடிவமாகவே சமூக உலகம் உருவாக்கம் பெறுகிறது என்கிறார் சாத்தர். தனிமனிதச் செயற்பாட்டில் நோக்கமும், ஆக்கமும், அர்த்தமும் இருக்கிறது. அதனால் தனிமனிதச் செயற்பாட்டில் இயங்கியல் மையம் கொள்கிறது. அது வளர்ச்சிப் போக்குடைய இயக்கம் என்பதால் அது புறநிலையை மாற்றும் தன்மையைக் கொண்டது. தனிமனிதர்களின் செயற்பாடுகள் ஒட்டுமொத்தமான முழுமை காணும் பொழுது, இயங்கியலும் சமூக அசைவியக்கமாக செயற்பட்டு சமூக வரலாற்றை நகர்த்திச் செல்கிறது என்ற பூடகமான கருத்தையும் முன்வைக்கிறார் சாத்தர்.

தனிமனிதனை மையமாகக் கொண்ட சாத்தரின் சமூகப் பார்வையையும் அவரது விசித்திரமான இயங்கியலையும் விமர்சிப்பதற்கு முன்னராக, இந்தத் தத்துவார்த்த நூலில் சாத்தர் முன்வைக்கும் மற்றைய கருத்துக்களைப் பார்ப்போம்.

- (தொடரும்)

# பச்சைச் சட்டை

மூலம்: தோ ஹூ (To huu)
ஆங்கிலம் வழி தமிழில்: சாந்தன்

பதினாறாவது வயதிலேயே போராட்ட வாழ்வினுள் நுழைந்த தோ ஹூ, தமது 25-வது வயதில் வெற்றிகரமான ஆயுத எழுச்சி ஒன்றிற்குத் தலைமை தாங்கினார். 40-வது வயதில், வியட்னாம் விடுதலைப் போராட்டத்தின் தலைவர்களில் ஒருவரானார். தோ ஹூவின் கவிதைகள் நம்பிக்கையும் துணிவும் ஊட்டுபவை.

என் சட்டைக்குச் சாயமிடு
இன்னுமொரு தரம்,
இலைப் பச்சை நிறத்தில்
என் அன்பே,
வெள்ளை அணிவது
வழக்கமல்ல, போரில்.
காற்றுக்குள்ளும் கடும்
மழையினூடும்
இன்னுமொருதரம்
நான் போக வேண்டும்-
தோளில் துவக்குடன்
வெற்றிப் பச்சையில்
சட்டை அணிந்து.

முடிவற்று முழங்கும்
குண்டிலும் ஷெல்லிலும்
இடைவெளியற்ற
இறப்புக்கள் நடுவிலும்
நான் திரும்புவேன்
எந்தன் ஊரின்
இனிய பசுமையில்
என் துயர் மறக்க.

எனக்காக
நீ சாயமிடும் சட்டை
என் தோலோடு உரசும்
எப்போதும்.
எனக்கது உயிர்ப்பூட்டும்,
எங்கள் காதலின் வசந்தம் போல
எப்போதும்
அது பசுமையேதான்.

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## 'எரிமலை'
## நடாத்தும் முதலாவது சிறுகதைப் போட்டி

இந்த நாடோடி வாழ்க்கையை வெறுத்து துன்பப்படுகின்ற ஏராளமான உள்ளங்களே! புலம் பெயர் வாழ்வில் நாம் எத்தனையோ புதிய அனுபவங்களைப் பெற்றிருக்கின்றோம். பிறந்த பூமியின் பால் எப்போதும் துடிப்பும், துயரும் உள்ளத்தின் அடியாழத்தில் இருந்து கிளர்கின்றன. அவை எம் துயிலைக் கலைக்கின்றன. முகமிழந்த அகதியாய் வாழும் இந்த வாழ்விடத் துயரம் சாதாரணமானதல்ல. எமது சுய அடையாளம் அழிந்துபோய் விடுமோ என்ற அச்சத்தை எமக்குள் ஏற்படுத்துகின்றது. இழிந்தும், நலிந்தும் போய் விடுவோமா? எங்காவது எம்மில் ஒட்டிக்கொண்டிருக்கின்ற சில பண்பாட்டு அடையாளங்களை வைத்துக் கொண்டு நாங்கள் "தமிழர்கள்" என்று கொண்டிருப்போமா? புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ எழுத்தாளர்களே! எங்கே, இன்னுமொரு சந்ததிக்குத் துயர் வந்து விடக்கூடாது என்று சபதம் எடுங்கள்! உங்களைச் சுற்றிலும் ஓராயிரம் கண்ணீர்க்கதைகள். இயந்திரமாய் சுழலும் வாழ்வின் வேகத்தை ஒரு கணம் நிறுத்தி ஆற அமர இருந்து உங்களின் சின்னச் சின்னக் கதைகளை எழுதுங்கள்!

உலகம் பூராகவும் பரந்து வாழும் தமிழீழச் சிறுகதை எழுத்தாளர்களே! உங்கள் அனைவரையும் எரிமலை நடாத்தும் இச் சிறுகதைப் போட்டியில் கலந்து கொள்ளுமாறு கேட்கின்றோம்.

முதலிடம் பெறும் மூன்று கதைகளும் எரிமலையில் பிரசுரிக்கப்படும். போட்டிக்கு வரும் சிறுகதைகள் திருப்பி அனுப்பிவைக்கப் படமாட்டாது.

நீங்கள் எழுதி அனுப்பும் சிறுகதைகளை ஆடி மாதம் 10-ம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கேட்டிருந்தோம். அத்திகதியை மார்கழி 16-ம் திகதி வரை நீடித்துள்ளோம் என்பதை அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

- ஆசிரியர்

www.tamilarangam.net

# மனத்தேர்



அவனைத் திடீரெனக் கண்ட போது, அவனின் முகம் என் மனதில் நிலைகொள்ளச் சற்று நேரம் பிடித்தது.

நிறம் கறுத்துப் போய், கழுத்துப் புறம் திடீரென நீண்டுவிட்டது போல..... அவனின் முகத்தில் எலும்புகள் இலேசாக முகடிட்ட போதிலும், வைராக்கியம் பொதிந்த இரு கண்களும் கறுப்புப் பொட்டுகளாக அப்படியேதான்.

உள்ளத்தின் ஆழம் வரை ஊடுருவும் ஆற்றலுடன்-

எத்தனை வருடங்கள் இருக்கும்?

நான் எப்படி இவனை மறந்து போனேன்?

அவன், அவனது குடும்பத்தவர் எல்லோருமே காலத்தோடு அள்ளிக் கொண்டு போன நினைவுகளாய் இருந்த எனக்கு இப்படியொரு புதுப்பித்தல் நிகழும் என நான் எதிர்பார்க்கவேயில்லை.

தெருவோரத்தில் நின்ற பூவரச மரத்தைப் பற்றியவாறு அவன் யாரோ ஒரு வழிப்போக்கரிடம் விசாரிப்பது யன்னலுடாக நன்றாகத் தெரிகிறது. நிச்சயமாக எனது வீட்டையே விசாரித்துக்கொண்டு இருக்கிறான் என்பதில் சந்தேகமே இல்லை.

பிஞ்சுக்கால்களினால் எனது முதுகில் மிதித்தேறி, எனது தோள்களைப் பற்றி காதுகளைப் பிடித்துத் திருப்பி சூரன் தலை ஆட்டிய எனது மகனின் இளமைக் காலம் நினைவுக்கு வருகிறது.

இப்பொழுது இவன் வந்து நிற்கிறான்.

நான் அவனை இவ்வளவு தூரம் வெளியே நிற்க வைத்திருக்கக் கூடாது. மனத்தின் வேகத்தோடு செயற்பட முடியாது தடுமாறிக் கொள்கிறேன். எனது செயலின் விரைவு போதவில்லை. கதவைத் திறந்துவிடுகிறேன். உணர்வுகள் மோதி சிரிப்பாகின்றன. அவனை உள்ளே வந்து அமருமாறு பணிக்கிறேன்.

அவனும் அவனுடைய நண்பர்களும் உள்ளே வந்து பக்குவமாக துப்பாக்கிகளை வைத்தவாறு அமர்கின்றனர்.

பின்னர் அவன் சொற்சிக்கனத்தோடு பேசினான்.

ஞானரதன்

ஈழத் தேசிய ஆவணச் சுவடிகள்

அவனின் பேச்சோடு எனது மனம் ஒட்டியும் ஒட்டாமலும் கட்டுப்பாடற்ற வேகத்தோடு ஓடுகிறது. எனது மனதில் எப்பொழுதோ புதையுண்டு போய்-

ஓர் இனிய வாழ்க்கையின் சாரமாக அடையாளம் காட்டியவைதான் மேலெழுகின்றன. என்ன விசித்திர மனசு?

மயிலம்பாவெளிக் காணிக்கு நானும் மகனும் புறப்படும் போதெல்லாம் எங்களுடன் வேறொரு சைக்கிளை எடுத்துக்கொண்டு அவனும் வந்துவிடுவான். கல்லடியில் சிவானந்தா கல்லூரிக்கு முன்பாகவிருக்கும் அரசமர நிழலில் ஓய்வெடுத்துக் கொள்வோம். அந்த அரசமரத் தடிக்கு வரும்போதெல்லாம் விபூதிக் குறியும் வெள்ளைச் சேலையுமாக மரவள்ளிக் கிழங்குப் பொரியல் விற்கும் கிழவியின் உருவம்தான் நினைவுக்கு வரும். பள்ளிப்படிப்போடு, பெரிய துண்டுகளாக வெட்டிப் பொரித்த மரவள்ளிக் கிழங்கு, உறைப்புக்காரமும் என்று எனது மகனும், அவனும் அந்த வெண் மணலில் ஓடித்திரிவார்கள். தேடிப் பிடித்து இருவரையும் எனது சைக்கிளில் ஏற்றிக்கொண்டு வீடு திரும்பும் வரை இப்படித்தான். இருவரும் ஒரே வகுப்பில்தான் படித்தார்கள். நான் மட்டக்களப்புக்கு மாற்றலாகி வந்த பொழுது இப்படியொரு நட்புறவு தொற்றிக்கொள்ளும் என நினைத்திருக்கவில்லை. நொச்சி முனையில் தான் வாடகைக்கு வீடு எடுக்க முடிந்தது. அயல் வீட்டிலிருந்து இவன்தான் முதன்முதலில் வந்து அறிமுகத்தைத் தொடங்கி வைத்தான். இவன் கடைக்குட்டி. இரண்டு அக்காமார், இரண்டு அண்ணாமார் என்று அவனின் குடும்பம் பெரிது. படுவான்கரையில் பூமியொன்று அவனின் தந்தையின் உழைப்போடும், வாழ்வோடும் ஒன்றிப்போயிருந்தது.

நொச்சிமுனையில்,

ஊர் றோட்டிலிருந்து பார்த்தால் கலைமகள் வீதியின் முடிவில் எங்கள் வீடு. வீதியின் எஞ்சிய பகுதி மட்டக்களப்பு வாவியின் தண்ணீர் மினுங்கலில் போய் முடியும். தூரத்தே தோணிகள் அசையும் - ஆற்றங்கரையில் துடிக்கத் துடிக்க பரட்டை ஓட்டி மீன் விலைப்படும் காலங்களில் மக்கள் ஆரவாரம் அதிகரிக்கும்.

www.tamilarangam.net

எனது மகனும், அவனும் வீட்டு நாயைக் கட்டியிழுத்து வாவிக்குக் கொண்டு போய் குளிக்க வார்த்து விட்ட பின் நாய் வீட்டைச் சுற்றியோடி, மணலில் புரண்டு உதறித் திரியும் வரை சிரிப்போடு அவனும் எனது மகனும் பின்தொடர்வார்கள்.

அந்த நிலம் மணற்பாங்கானது. கடற்கரை அரைமைல் தொலைவில் இருந்தாலும் அந்த நிலத்தில் காட்டு மரங்களல்ல, எந்த மரங்களுமே மூச்சோடு வளரக்கூடியது என நாங்கள் குறுகிய காலத்திலேயே அறிந்துகொண்டோம். ஆறுமுகத்தான் குடியிருப்புக்கும், மயிலம்பாவெளிக்குமிடையில் கடலோசை கேட்காத தூரத்தில் தான் எங்களது காணித்துண்டுகள். அவனின் தந்தையும் நானும் ஏதோ ஒரு நம்பிக்கையில் இந்தக் காடு வளர்ப்புத் திட்டத்தில் இறங்கி நான்கு வருடங்கள் முடிகின்றன. அப்பொழுது நாம் சரியாகக் களைத்துப்போயிருந்தோம். காட்டு வெளியும், அனற் காற்றும், தாகமும் எம்மைப் பின்னியிருந்தன. அவனும், எனது மகனும் காணிகளுக்குக் காவல் புரிகின்ற அப்புவின் கொட்டிலை நோக்கி தண்ணீர் எடுப்பதற்காகச் சென்றுகொண்டிருந்தார்கள். கால்கள் சுடுமணலில் சறுக்கிப் புதைய அவர்களின் நடையில் ஏற்பட்ட மாற்றம் எனக்கு இரக்கத்தை ஏற்படுத்தியது. நான் நடந்துகொண்டிருந்தேன். வேப்பமரமொன்று சடைத்து வளர்ந்திருந்தது. அதன் நிழலில்தான் நானும் அவனின் தந்தையும் ஆறுதலாக அமர்ந்து பேசிக்கொள்வோம். இன்னும் ஒரு வருடத்திற்கு பல்லைக் கடித்துக் கொண்டு இருந்துவிட்டால் எங்கள் துன்பங்கள் நீங்கிவிடும். தடைப்பட்டுப் போயிருக்கும் மகளின் திருமணம் முடிந்துவிடும் - அவனின் தந்தையின் கதைகளையெல்லாம் கேட்பேன். அம்மர நிழலில் போய் அமரலாம் எனக் கால்களை உயர்த்திய போது, பட்டுப்போய் மணலில் உக்கிக்கொண்டிருக்கும் காரை முட்கள் கால்களைக் கூச வைக்கின்றன. இன்னொரு புறத்தில் காற்றோடு அள்ளிச் செல்லப்பட்டுப் புதையுண்டு போன குன்றுமணிகள் மீண்டும் மிதந்து அழகு காட்டின.

தொட்டாற் சுருங்கிகளே சிலிர்த்துப் பூத்திருந்தன. நாரைகள் பறந்து வந்து மலைவேம்பு உச்சியில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## சிறீலங்கா:

# விரலுக்கு மீறிய வீக்கம்

**விரலுக்கேற்ற வீக்கம் வரவுக்கேற்ற செலவு என்பார்கள். சிறீலங்காவுக்கு வரவு வருகிறதோ இல்லையோ பாதுகாப்புச் செலவு என்ற பெயரில் செலவுகள் கூரையைப் பிய்த்துக் கொண்டு போகிறது. சமீபத்தில் முன்னோக்கிப் பாய்தலில் ஏற்பட்ட தோல்வியை அடுத்து 200 மில்லியன் டொலருக்கு அவசர ஆயுதக் கொள்வனவு; பாதுகாப்பு செலவுக்கு மேலும் 462 கோடி ரூபா நிதி கோரி அவசர குறை நிரப்புப் பிரேரணை எனப் பிரதி பாதுகாப்பு அமைச்சருக்கு ஏகப்பட்ட தலையிடிகள்.**

இந்த வருடத்துக்கான பாதுகாப்புச் செலவாக 2700 கோடி ரூபா சந்திரிகா அரசினால் உத்தியோக பூர்வமாக வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் ஒதுக்கியிருந்த போதிலும் 3000 கோடி ரூபாவுக்கு மேலான தொகை ஒதுக்கப்பட்டிருக்கலாம் என அரசியல் நிபுணர்கள் கூறுகின்றனர். அம்மையார் ஆரம்பித்த வெண்தாமரை இயக்கம் யுத்தத்திற்கான பல கோடி ரூபாக்களை சிங்கள மக்களிடம் இருந்து சேகரிக்க திட்டமிட்டு திரட்டியும் வருகிறது.

இவ்வாறான பாதுகாப்புச் செலவின் அதிகரிப்பு நாட்டின் பொருளாதாரத்தை எங்கு கொண்டு போய் நிறுத்துமோ என பொருளாதார நிபுணர்கள் விழி பிதுங்க மறுபுறம் சமாதான தேவதை என எண்ணி சந்திரிகா அம்மையாருக்கு 62.28 வீத வாக்குகளை அள்ளி வழங்கிய திருவாளர் பொதுஜனம் யுத்தச் செலவு அதிகரிப்பினால் ஏற்படும் சுமைகளைக்கட்டி அழுகின்றார். அத்தியாவசியப் பொருட்களிலிருந்து ஆடம்பரப் பொருட்கள் வரை வரி அறவீடுகள் கிடுகிடுவென உயர்ந்து செல்வதே இதற்கு காரணம் என்ற கண்மூடித்தனமான கணிப்பு, கோடிக்கணக்கில் ஆயுதங்களைக் குவிப்பதில் வந்து நிற்கிறது. தமிழ் மக்களின் போராட்டத்திலுள்ள தார்மீக நியாயம், விடுதலை வேட்கை, உறுதிப்பாடு, அர்ப்பணிப்பு என்பவற்றை கணிப்பிடாத வரை வெறும் ஆயுத ஆட்பலங்கள் சிறிலங்கா ராணுவத்தை வீங்க வைக்குமே அன்றி வளர்ச்சிப் பரிமாணத்துக்கு இட்டுச் செல்லுமெனக் கூற முடியாது.

நோகாமல் உட்காரும் லாவகம் களைப்பினிடையே மனிதனை உற்சாகமூட்டியது. நான் வேப்பமர நிழலில் கால்களை நீட்டி, அமர்ந்து சேட்டைக் கழற்றி மரக்கொப்பில் வீசினேன். உடனேயே கடற்கரைத் திசையிலிருந்து ஊதற்காற்று வீசுவது தெரிகிறது. கிழக்கே கருமுகிற் கூட்டம் வெள்ளி விளிம்புகள் கட்டி மூட்டம் கொண்டிருந்தது. வியர்வை காய்ந்து உடல் சில்லிட்டது. அவனும் எனது மகனும் பாத்திர மொன்றில் தண்ணீருடன் வந்து சேர்கிறார்கள். தண்ணீரை வாய்க்குள் ஊற்றிய போது முகத்தையும் நெஞ்சையும் நனைத்தது. எனதுள்ளமே நீரில் சங்கமமாகிவிட்ட சுகம் போல - நான் சாய்ந்து மணலில் சரிகிறேன். எவ்வளவு நேரம் அப்படி வானுயர வளர்ந்திருந்த காட்டு மரங்களைப் பார்த்தவாறு சரிந்திருந்தேனோ தெரியவில்லை. அவனின் தந்தை கூறியது போல இன்னும் கொஞ்சக் காலத்தில் ஆகக் குறைந்தது ஆளுக்கு அறுபதினாயிரம் ரூபாவென்றாலும் தேறும். ஐந்து வருட உழைப்பு. அவனும் எனது மகனும் தன்னிச்சையாக வளர்ந்திருந்த பேய்க் கொம்மட்டிக் காய்களை எறிந்து விளையாடிக்கொண்டிருந்தார்கள்.

அவனின் தந்தை வந்திருந்தால் வேலை உசாராகப் போய்க்கொண்டிருக்கும். வந்தவுடனேயே வேலை தொடங்கிவிடும். சற்று நேரத்தில் புளிச்சாதமும் ஏறாவூர் தயிருமாக மணலில் வைத்துச் சாப்பிடுவோம். மீண்டும் கத்தி, கோடாரி, மண் வெட்டியென்று வியர்வை பிழிந்தெடுத்த நாட்கள் எத்தனை?

பதிமருந்து, இப்பில் இப்பில், சவுக்கு, பலாவென்று ஒழுங்குக் கிரமத்தோடு எங்களின் உழைப்பின் சாட்சியாக அம்மரங்கள் அந்தக் கன்னி நிலத்தில் தழைத்தோங்கியிருந்தன. சறுக்கல் நடையோடு அலுமினியக் குடத்தில் அவன் துரவிலிருந்து தண்ணீர் எடுத்து வந்து எனது மகனிடம் கொடுத்துவிட்டு எனது மகன் நீட்டிக்கொண்டிருக்கும் வெற்றுக் குடத்தை வாங்கிகொண்டு துரவு நோக்கிப் போவான். முதுகில் வெயில் சூடேறும் வரை தண்ணீர் ஊற்றுவோம். ஆவணி, புரட்டாதி கழிந்து வானம் கறுக்கும், காற்று மாறும், மழைபெய்யும். ஒவ்வொரு சனியும் ஞாயிறும் காலை ஐந்தரை மணிக்கு நொச்சிமுனையிலிருந்து






சூரிச்சில் 22-07-1995 அன்று தமிழீழ விடுதலைப் புலிகள் சுவிஸ் கிளையின் மகளிர் அணியினால் இரண்டாவது தடவையாக 'கறுப்பு யூலை தினம்' அனுஷ்டிக்கப்பட்டது. பிற்பகல் 6.30 மணியளவில் மௌன அஞ்சலி, தேசியக் கொடியேற்றல், ஈகச்சுடரேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வுகளைத் தொடர்ந்து தமிழீழத்திலிருந்து வருகை தந்திருந்த பிரபல நாதஸ்வர தவில் வித்துவான்கள் நாதஸ்வர தவில் விருந்துடன் தமிழீழப் புரட்சிப் பாடல்களை இசையருவியாகவும் தந்து நிகழ்ச்சியை சிறப்பித்தனர். மகளிர் அணியினரால் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் கவிதா நிகழ்வு ஒன்று நடாத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் 'பொய் முகங்கள்' என்ற சமூக நாடகம் அரங்கேற்றப்பட்டது. இந்நாடகமானது சிலர் பெண்களை இரண்டாம்தர நிலையில் நடத்துவதையும், அவர்களுக்கு உரிய உரிமைகளை வழங்க மறுப்பதையும், இருவரும் வேலை செய்தாலும் பெண் வீட்டு வேலைகள் அனைத்தையும் செய்யும்படி வற்புறுத்தப்படு

புறப்படுவோம். சைக்கிலோட்டம் எட்டுமைல். மணற் பூமியானதால் நடையாக ஒரு மைல். இப்படித்தான் ஐந்து வருடங்கள் கழிந்தன.

அதன் பிறகு எனக்கு இடமாற்றம் கிடைத்தது. யாழ்ப்பாணம் குடும்பத்தோடு வந்து சேர்ந்தேன். அப்பொழுது இந்திய இராணுவம் எங்கும் நிலைகொண்டிருந்தது. அவனின் தந்தையிடமிருந்து ஒரு கடிதம் எனக்கு வந்தது. அதில் மயிலாம்பா வெளிக்குப் போகமுடியாதென்றும், இரவு பகலாக லொறிகளில் எங்களது காணிகளில் இருந்த மரங்கள் எல்லாம் காவலரண்கள் அமைப்பதற்காக இந்திய இராணுவத்தாலும் மற்றும் அவர்களின் கையாட்களாலும் வெட்டி ஏற்றிச்செல்லப்பட்டுவிட்டன எனவும் அவனின் தந்தை எழுதியிருந்தார். அதன் பின்பு அவனின் தந்தை எழுதவே இல்லை. அவரை விசாரணைக்காக இந்திய இராணுவம் ஒருநாள் அழைத்துச் சென்றபோது ஊரவர்கள் சிலர் கண்டார்களாம். அதன் பின்பு எங்களின் நட்புறவு இருளில் மூழ்கியது. நட்புறவு மட்டுமா?

★★★

இந்திய சிறீலங்கா இராணுவங்களின் அட்டூழியங்களிலிருந்து இவனைத் தப்பித்தவர்கள் மீண்டுருப்பார்களா? அல்லது அவர்களின் கதை சோகமான பக்கங்களாகப் புரண்டு போயிருக்குமா? அப்படியிருக்குமாயின் அவற்றை மீளவும் நினைவுக்குக் கொண்டு வந்து அவனைத் துன்புறுத்த விரும்பாமல் நான் மௌனமாகவே அமர்ந்திருக்கிறேன். அவனின் மனதில் புயலொன்று அடங்கிப் போயிருக்குமாயின் அதைக் கிளறிவிடுவதில் என்ன பயன் இருக்கப் போகிறது? என்னைப் போலவே அவனும் என் மகன், என் மனைவி என்ன ஆனார்கள் என்று கேட்காமல் இருப்பது போல....

என்மன இருக்கையிலிருந்து அறிவு, அனுபவம், எனது அடையாளம் எல்லாமே விலகிச் சென்றுவிடுகின்றன. அவன் வீட்டுக்குள் நுழைந்தவுடனேயே கடதாசி மாலைகள் சூட்டப்பட்டிருக்கும் எனது மகனின், எனது மனைவியின் படங்களைப் பார்த்திருக்கக்கூடும்.

"என்ன மாமா பேசாமல் இருக்கிறீங்க. நீங்க தனியாவா இருக்கிறீங்க. எனக்கு நேரமாகுது. நான் போயிற்று வாறன் மாமா" என விடை பெறுகிறான்.

நான் இழந்து போன அத்தனையும் வந்து செறிந்துவிட்டது போன்ற உணர்வில் அவன் புதிதாய் தோற்றம் பெறுகிறான். நான் வழியனுப்பி விடுகிறேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



வதையும், அவள் தன்னிடமுள்ள திறைமை களை வெளிக்கொணர முடியாமல் தடுக்கப் படுவதையும் படம்பிடித்துக் காட்டியது. 'இது எப்போது தீரும்' என்ற கேள்வியை எல் லோரிலும் எழுப்பியது. தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளைப் பிரதிநிதி திரு. ந. ...ளிதரன் அவர்கள் சிறப்புரையாற்றினார். சுவிஸ் தமிழர் கலைஞர் ஒன்றியத்தின் எழுச்சிகான மாலைப்பொழுது நிகழ்ச்சியும் இடம்பெற்றது. அனைத்து நிகழ்ச்சிகளையும் மகளிர் அணியினரே தொகுத்து வழங்கியி ருந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இத்தாலி, பலர்மோ மாநகரில் கடந்த 23-07-1995 ஞாயிற்றுக்கிழமை 'செஞ் சோலைக் கலைமாலை' என்னும் கலா நிகழ்வு இடம்பெற்றது. திரு. பிலிப்போ ஜிகாந்தி அவர்கள் மங்கள விளக்கேற்றி வைக்க நிகழ்வுகள் ஆரம்பமாகின. 'இதயதாரகை' இசைக்குழுவின் 'இரங்கும் இசைமாலை' நிகழ்ச்சியைத் தொடர்ந்து, திலீபன் தமிழ்ப் பாடசாலை மாணவர்களும், மாலதி கலைப்பள்ளி மாணவிகளும் இணைந்து, விடுதலை உணர்வு ஊட்டும் எம் தேசத்து உயிர்ப் பாடல்களுக்கு பரதக் கலையால் உருவம் வழங்கி, அனைத்து மக்களினதும் உணர்வைத் தொட்டுப் பாராட்டைப் பெற்றனர்.

www.tamilarangam.net

தென் தமிழீழத்து மக்களின் சோகங்களையும், அவர்களது வாழ்வோட்டத்தை அழித்து, சிறைப்படுத்திய சிங்களப் படைகளின் கோரத்தாண்டவத்தையும், அம் மக்களின் வீரம் செறிந்த போராட்ட நிகழ்வுகளையும் 'எதிர் நீச்சல்' என்னும் இசை நாடகமாக மக்கள் முன் படைத்தனர், மாலதி கலைப்பள்ளி மாணவ மாணவியர். ஆசிரியர் திருமதி. பாலசிறி அவர்களால் இது நெறிப்படுத்தப் பட்டது. போராட்ட விழிப்புணர்வை ஏற்படுத்துவதாக இந்நாடகம் விளங்கியது. 1995-ம் ஆண்டுக்கான மாவீரர் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி கொண்ட கழகங்கள், விளையாட்டு வீரர்களுக்கு மாவீரர் வெற்றிக் கிண்ணங்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இறுதியாக தமிழர் கலை பண்பாட்டுக் கழகம் வழங்கிய 'விதி வரைந்த மனிதர்கள்' நாடகம் அரங்கேறியது. எமது சமூகத்தில் புரையோடி சிறிது சிறிதாக மறைந்து வரும் சாதியப் பிரச்சினைகளையும், பெண் அடக்குமுறை போன்ற பிரச்சினைகளையும் மக்கள் முன் எடுத்துக்காட்டியது. அதன் உண்மைத் தன்மை பார்வையாளர்களின் மனச்சாட்சியைத் தட்டி சிந்திக்கத் தூண்டுவதாக இருந்தமை அதன் வெற்றியாகும்.







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




www.tamilarangam.net

# சர்வதேச ரீதியில் தமிழரின் பேரணிகள் உலகளாவிய தமிழினம் புலிகளுக்குப் பேராதரவு

புலிகள் இயக்கத்திற்கு எதிராக சந்திரிகா அரசு மேற்கொண்டு வரும் சர்வதேசப் பிரச்சாரத்திற்குப் பதிலடி கொடுப்பது போல, உலகத் தமிழர்கள் புலிகள் இயக்கத்திற்கு ஆதரவு தெரிவித்து மாபெரும் பேரணிகளை நடாத்தி வருகின்றனர். உலக நாடுக்ளின் தலைநகரங்களில் நடந்து வரும் இந்த ஆதரவுப் பேரணிகளில் தமிழர்கள் ஒன்று திரண்ட செய்தி, சிங்கள அரசிற்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அதே வேளை, சர்வதேச சமூகமும் உண்மைநிலையை உணர்ந்துகொள்ள அது ஏதுவாக அமையலாம்.

பதவி ஏற்ற காலம் முதலே தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்காக சந்திரிகா அம்மையார், ஒரு அரசியல் இராணுவத் திட்டத்தைத் தயாரித்து வைத்திருந்தார். அரசியல் ரீதியாக புலிகளை அந்நியப் படுத்தி, பின்னர் இராணுவ பலத்தைப் பயன்படுத்தி அவர்களை அழித்து விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதே, அந்தத் திட்டம். இத்திட்டத்தின் முதற் பகுதியை நிறைவேற்றுவதற்குரிய ஒரு தந்திரோபாயமாகவே, “பேச்சு வார்த்தை” என்ற நாடகத்தை சந்திரிகா அரசு அரங்கேற்றியது. பேச்சு வார்த்தையை புலிகள் இயக்கம் முறித்துக்கொள்ளும் சூழலை ஏற்படுத்தி, அதன் மூலம் பேச்சு முறிந்ததும், அந்தச் சூழலைப் பயன்படுத்தி சர்வதேச ரீதியாகப் புலிகளை ஓரங்கட்டலாம் என்று சந்திரிகா அரசு கணக்குப்போட்டது.

பேச்சுவார்த்தை முறிவடைந்ததும் பல மேலை நாடுகள் விடயம் புரியாமல் புலிகள் இயக்கத்தை அதற்காகக் கண்டித்தன; இந்தக் கண்டனங்கள் சந்திரிகா அரசை உற்சாகப் படுத்தின. சர்வதேச ரீதியாக புலிகளை ஓரங்கட்டுவதற்கு இதுதான் தக்க தருணம் என்று கருதிய சந்திரிகா அரசு, தனது வெளிநாட்டமைச்சரை உலக நாடுகளுக்கு அனுப்பி, புலிகள் இயக்கத்திற்கு எதிராகப் பிரச்சாரத்தை மேற்கொண்டது. உலக நாடுகளிலுள்ள புலிகளின் அலுவலகங்களை மூடச் செய்து - அங்கே போராட்டத்திற்கு ஆதரவான நடவடிக்கைகளைத் தடுப்பதே, அந்தப் பிரச்சாரத்தின் நோக்கமாக இருந்தது. ஆயினும் அந்தந்த நாடுகளின் சட்டங்களுக்கும் _ சமூக வாழ்வுக்கும் எந்த ஒரு இடைஞ்சலும் இல்லாது புலிகள் இயக்கம் செயற்பட்டதால், சிங்கள அரசின் கோரிக்கைகள் எடுபடாமல் போய் விட்டன.

இதேவேளை, புலிகள் இயக்கத்திற்கெதிரான சந்திரிகா அரசின் பிரச்சாரப் போரை, வெளிநாடுகளில் வதியும் தமிழர்கள், புலிகள் இயக்கத்திற்கு ஆதரவான பேரணிகளை நடாத்தியதுடன் - புலிகள் இயக்கத்தையும் விடுதலைப் போராட்டத்தையும் உலக நாடுகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அங்கீகரிக்க வேண்டும் என்ற கோரிக்கைகளையும் எழுப்பினர். இந்த வகையில் - சிங்கள அரசு எமது போராட்டத்திற்குக் கொடுக்க முனைந்த ஒருவகை நெருக்கடியை, புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் ஒன்றிணைந்து போராட்ட ஆதரவுப் பேரணிகளை நடாத்தி, தமது கடமையை நிறைவேற்றி உள்ளனர்.

இங்கிலாந்து, ஜேர்மனி, டென்மார்க், நோர்வே, பிரான்ஸ், சுவிற்சர்லாந்து, அவுஸ்திரேலியா, கனடா, சுவீடன், அமெரிக்கா ஆகிய நாடுகளில் வாழும் தமிழர்கள் போராட்டத்திற்கு ஆதரவாகவும் - புலிகள் இயக்கத்திற்கு அனுசரணையாகவும் நடாத்திய ஆதரவுப் பேரணிகளுக்கு, அந்தந்த நாடுகளின் பத்திரிகைகள் - தொலைக்காட்சிகள் முக்கியத்துவம் கொடுத்துச் செய்திகள் வெளியிட்டிருந்தன. இதிலும் கனடாவின் 'ரொறன்ரோ'வில் நடந்த ஆதரவுப் பேரணியில் இருபதாயிரத்துக்கு மேற்பட்டோர் பங்கு பற்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது. தலைவர் பிரபாகரனின் புகைப்படங்களைத் தாங்கியவாறு அணிவகுத்துச் சென்ற இந்த மக்கள் பேரணியில், கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் மற்றும் ஒன்ராறியோ மாநில சட்டசபை உறுப்பினர்களும், பிரசித்த பெற்ற சில கனேடிய சட்டத்தரணிகளும் கலந்து கொண்டிருந்தனர். அன்று மாலை 17-06-95 இந்த மாபெரும் பேரணியை வர்ணித்த 'றோமன் தொலைக்காட்சி நிறுவனம்' "ரொறன்ரோவின் வரலாற்றில் இதுவரை காணாத பெரிய ஊர்வலம்" என வர்ணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

புலிகள் இயக்கத்திற்கு ஆதரவாக, வெளிநாடுகளில் வதியும் தமிழர்கள் மாபெரும் ஆதரவுப் பேரணிகளை நடாத்தியதால், சர்வதேசரீதியில் எமது விடுதலைப்போரின் நியாயத் தன்மை மீண்டும் ஒரு முறை உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் சந்திரிகா அரசின் பிரச்சாரம் சர்வதேச சமூகத்திடம் எடுபடாமல் போகும் சூழலும் எழுந்துள்ளது. இது சிங்கள அரசுக்குப் பலத்த ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கும் என்பதில் ஐயமில்லை. இதனால், போராட்டத்தை ஒடுக்க சந்திரிகா அம்மையார் வரைந்த நாசகாரத் திட்டத்தின் ஒரு பகுதி தோல்வி கண்டுவிட்டது என்று கூறலாம்.

www.tamilarangam.net

இது ஒரு புறமிருக்க, தமிழ்நாட்டிலும் புலிகள் இயக்கத்திற்கு ஆதரவான உணர்வலை மீண்டும் எழுச்சியடையத் தொடங்கியுள்ளது. புலிகள் இயக்கம் தொடர்பான பாரிய அழுத்தங்களும், பயமுறுத்தல்களும் அங்கே இருந்தபோதிலும், பெரும்பாலான தமிழ்நாட்டுக் கட்சிகள் ஒன்றிணைந்து, புலிகளுக்கு ஆதரவான உணர்வலைகளை மக்களிடத்தில் தோற்றுவிக்கும் வகையில் கூட்டங்களை நடாத்தியுள்ளன. 'யாழ். வான் பரப்பில்' வைத்து இரண்டு விமானப்படை விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்ட பின்னர், புலிகள் இயக்கத்திற்கான ஆதரவு தமிழகமெங்கும் மீண்டும் கிளம்பியுள்ளது எனக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. அத்துடன், புலிகள் இயக்கத்தைத் தனது பகைமைச் சக்தியாகப் பார்க்கும் இந்திய மத்திய அரசின் நிலைப்பாட்டிற்கு எதிராக தமிழ்நாட்டின் தலைவர்கள் பலர் கருத்துக் கூறியும் வருகின்றனர். தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குப் பேராதரவு அளிக்கக் கூடிய நிலை தமிழகத்திலும் வளர்ந்து வருவதையே இது காட்டுகின்றது.

இந்த வகையில், 'மூன்றாம் ஈழப் போரில்' புலிகள் இயக்கம் பெற்று வரும் இராணுவ மேலாண்மை, உலகத் தமிழர்களை உற்சாகப்படுத்தி - நம்பிக்கை ஊட்டி வருகின்றது என்பது வெளிப்படை!

**'விடுதலைப் புலிகள்' பத்திரிகையிலிருந்து**




டென்மார்க்கில் நடந்த பேரணியின் போது...




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாட்டாளிப் பெருங்கவிஞன்
# பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்!



"பாடுவது ஒன்று; நாடுவது வேறொன்று" என்கின்ற செயற்பாடில்லாத - பாடுவதும் ஒன்றே; நாடுவதும் ஒன்றே எனும் இலட்சிய நடைமுறைக் கவிஞர் வரிசையிலே பாரதியார், பாரதிதாசன் இருவருக்கும் பின் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரமே 'பளிச்'சென்று தெரிகிறான். நேர்மை, நெஞ்சுறுதி, இலட்சிய தாகம், மானுட நேயம் ஆகியவற்றை மூலாதாரங்களாகக் கொண்டு, அவனது கவிதாசக்தி வெளிப்பட்டது. அடிமட்ட மக்களுடன் ஒருவனாக, அடிபட்டு அடிபட்டு வாழ்ந்த அவனது பாடல்களில் எல்லாம், உழைக்கும் வர்க்கத்தின் உதிரத்துடிப்பே அடிநாதமாக ஓங்கி ஒலிக்கும்!

**"திட்டம் போட்டுத் திருடுற கூட்டம்**
**திருடிக்கொண்டே இருக்குது!- அதைச்**
**சட்டம் போட்டுத் தடுக்கிற கூட்டம்**
**தடுத்துக் கொண்டே இருக்குது!"**

என அவன் பாடுவது, சாதாரண சாமான்யத் திருடர்களையல்ல; சமுதாயத்தையே சுரண்டி விழுங்குகின்ற உழைப்புத் திருடர்களைத்தான்! ஒருமுறை, அவன் பாடல்கள் எழுதிய திரைப்படத்தின் தயாரிப்பாளரான கல்யாணராமஐயர் என்பவர், பாடல்களுக்குரிய ஊதியத் தொகையை அவனுக்கு வழங்காமல் நீண்டநாட்கள் இழுத்தடித்தார். கவிஞனும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தான்; முடியவில்லை. ஒரு நாள், அந்தப் பட முதலாளி உள்ளே இருந்துகொண்டே ஆளைக் காத்திருக்கும்படி, ஏவலாளனை விட்டுச் சொல்ல செய்தான். பட்டுக்கோட்டையான் வெகுண்டெழுந்து, அந்த இடத்தில் வைத்தே ஒரு சிறு காகிதத்தில்,

**"தாயாற் பிறந்தேன்; தமிழால் அறிவு**
**பெற்றேன்!**
**நாயே! நேற்றுன்னை நடுத்தெருவில்**
**சந்தித்தேன்!**
**நீயார் என்னை நில் என்று சொல்வதற்கு?"**

என்று, கனல் பறக்கும் கவிதையை எழுதி, ஏவலாளனிடமே கொடுத்து, பட முதலாளியிடம் கொடுக்கச் செய்தான். பயந்துபோன அந்தப் பழைய பண்டாரம், அறம்பாடிவிட்டானே கவிஞன் என, அலறியடித்துக் கொண்டோடிவந்து பணத்தைக் கொடுத்தான் பட்டுக்கோட்டையானிடம்! தன்னுடைய உழைப்பை எவராவது உதாசீனப்படுத்திய போது, அவன் உறுமிக்கொண்டு அவர் மீது பாயத் தவறியதே இல்லை. அதே போல, மற்றைய உழைப்பாளிகளுக்காகவும் கவிதைகளாலே உரிமை முழக்கமிட்ட நற்பண்பு அவனுடையது. உடலுழைப்பு, மூளையுழைப்பு இரண்டையுமே செய்வன திருந்தச் செய்த அந்தப் பாட்டாளிப் பெருங்கவிஞன், தான் வாழ்ந்து முடித்த இருபத்தொன்பதே வயதுக்குள், பதினேழு வகையான தொழில்களைச் செய்து போன சாதனையாளன்! பட்டாணிச் சுண்டல், பழவகை வியாபாரத்திலிருந்து, படவுலகப் பாட்டெழுதும் தொழில்வரை அவனது உழைப்பு பரிமாண வளர்ச்சி கண்டுள்ளது. அதனால்தான்,

**"செய்யுந் தொழிலே தெய்வம்! - அந்தத்**
**திறமைதான் நமது செல்வம்!**
**கையும் காலும்தான் உதவி! - கொண்ட**
**கடமைதான் நமக்குப் பதவி!"**

என திடசங்கற்பம் செய்து, கவிதை பாடினான்.

முதலாளித்துவக் கொடுமைகள் ஒருபோதும் தானாகத் தீரப்போவதில்லை. அவற்றை, எதிர்த்துப் போராடித் தான் தீர்த்துக்கட்ட வேண்டுமென்பதை,

**"தனியுடமைக் கொடுமைகள் தீரத்**
**தொண்டு செய்படா ! - அட!**
**தானாய் எல்லாம் மாறும் என்பது**
**பழைய பொய்யடா!"**

## கவிதை

**"எந்தக் கவிஞனும் தன் இஷ்டத்துக்கோ அல்லது பிறர் கட்டாயத்துக்கோ கவிதை எழுத முடியாது. மன எழுச்சியோடுதான் கவிதை உதயமாகும். அற்புத உணர்ச்சியிலிருந்து, சோக முதிர்ச்சியிலிருந்து, இன்ப வெறியிலிருந்து உண்மைக் கவிதை உதயமாகிறது. பிறர் கட்டளையிட்டு கவிஞன் கவிதை எழுத முயல்வது வீண்முயற்சிதான்; அவ்வாறு எழுதப்பட்ட கவிதை, யாப்பின் சுமையே தவிர, உண்மைக் கவிதையாக என்றும் நின்று நிலவ முடியாது.**

**... வாழ்க்கையின் பிரதிபலிப்பாக, அழியாத உண்மையாக சிருஷ்டிக்கப்படுவதே கவிதை - கவிஞனின் ஆவேசமொழி.**

**.... உலகத்தில், கவிதை எதையும் தொட்டு நிற்கும் ஆற்றல் பெற்றது. எப்பொருளும் கவிதையில் இடம் பெறும்; உலக சிருஷ்டிக்கு மேலாக, கவிஞனின் கற்பனை உலகம் மிகமிக விசாலமானது. எதையும் கொள்ளவும் தள்ளவும் ஆற்றல் பெற்ற ஆன்மீக ஆக்கம் கவிதை!**

**.... ஒரு கவிஞனை மற்றொரு கவிஞன்தான், அருமையாக மொழிபெயர்க்க முடியும். மூலத்தை நிர்மூலமாக்கும் மொழிபெயர்ப்பு கவிதையின் அந்தரங்கத்தையே புதைத்து விடும். சிறந்த செல்வாக்குள்ள கவிஞர்கள், மனோதிடம் கொண்டு மொழிபெயர்ப்பில் ஓரளவு இறங்கலாம். மட்டமான - உணர்ச்சியற்ற மொழிபெயர்ப்பில் மூலத்தின் மின்னல் சிதறி வெடித்துப்போகும்...."**

ஆங்கிலக் கவிஞன் ஷெல்லி 1820-ல் எழுதிய **'Defence of Poetry'** என்ற கட்டுரையின் சில பகுதிகள்.

**தமிழில்: வீ. ஆர். எம். செட்டியார்.**

**நன்றி: 'கவிதை மின்னல்'**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

என்கிற பாடல் வரிகளின் மூலம் திடமாக வலியுறுத்துகிறான். "**தானாய் எல்லாம் மாறும்**" எனும் மூடவாசகத்தைப் "பழைய பொய்" என்பதன் வாயிலாக, அது நீண்ட நெடுங் காலமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் பொய்வாசகம் என, மிக நய மாகச் சுட்டிக்காட்டிவிடுகிறான் கல்யாணசுந்தரம்! அந்தப் பழைய பொய்யை, அன்றைய பொய்யர்களும், இன்றைய பொய்யர்களும் இன்னுங்கூடப் பிரயோகித்துவரும் பேருலகில்,

**"சின்னப்பயலே! சின்னப்பயலே!**
**சேதி கேளடா! - நான்**
**சொல்லப்போற வார்த்தையை**
**நல்லா எண்ணிப் பாரடா!"**

என்னும் அந்தப் பாட்டுக்கு, இன்றைக்கும் என்றைக்கும் மிக மிக அவசியத் தேவை இருக்கும் என்றே தோன்றுகின்றது. அதையெல்லாம் அவன் முற்றும் உணர்ந்தபடியால் தானோ,

**"சொல்லுறதைச் சொல்லிப் புட்டேன்!**
**செய்யுறதைச் செஞ்சிடுங்க!**
**நல்லதுன்னா கேட்டிடுங்க!**
**கெட்டதுன்னா விட்டிடுங்க!"**

எனப் பாடிவிட்டு, அதே பாடலின் நிறைவுச் சரணத்தில்,

**"சித்தரொடு யோகிகளும்**
**சிந்தனையில் ஞானிகளும்,**
**புத்தரொடு, ஏசுவும்**
**உத்தமர் காந்தியும்**
**எத்தனையோ உண்மைகளை**
**எழுதி, எழுதி வைச்சாங்க!**
**எல்லாம்தான் படிச்சீங்க!**
**என்ன பண்ணிக் கிழிச்சீங்க?"**

என்கிற, கோபாவேசக் கேள்வியுடன் பாட்டை முடித்திருக்கிறான் போலும்! எங்கே? இந்தப்பாடலை முழுவதுமாகப் பாடிக்கொண்டு வாருங்கள் பார்க்கலாம். கடைசி வரியை முடிக்கும்போது, அந்த வார்த்தைகளின் சீற்றத்தொனி உங்களைக் கிழித்து விடுவது உணரவில்லையா?! "என்ன பண்ணிக் கிழிச்சீங்க?" எனும் வினாப்பதத்தை எத்தனையோ இடங்களில், எத்தனையோ முறை கேள்விப்பட்டிருந்தாலும் கூட, அவை அத்தனைக்கும் இல்லவே இல்லாத அர்த்தப் பெருஞ்செறிவும், ஓங்கி அறைந்துவிடுவதைப் போன்ற கோபவீச்சும், பட்டுக்கோட்டையாரின் இந்தப் பாடலிலுள்ள அந்த வார்த்தைகளுக்குள் மட்டுமே பொதிந்திருக்கின்றன.

www.tamilarangam.net

வாழ்க்கையை அப்படியே வார்த்தைகளாக்கிக் கவிதை பாடிய அவன், உழைத்துப் பிழைப்பவரின் உரிமைப்போர் வென்றிட, உரத்துக் கூவிய சிவப்புக் குயில்! வறுமையை வார்த்தை வடிவத்தில் மட்டுமல்லாது, வாழ்க்கை வடிவத்திலும் தரிசித்த அக் கவிஞன்,

**"தேனாறு பாயுது! செங்கதிர் சாயுது!**
**ஆனாலும் மக்கள் வயிறு காயுது!"**

எனப் பாடும் போது, பசி, பட்டினியின் விஸ்பரூபம், பாடல் வரிகளினூடாகப் படிப்பவரதும், கேட்பவரதும் நெஞ்சங்களை ஊடுருவித் தைக்கிறது. 'கல்யாணப்பரிசு' என்கிற திரைப்படத்தில் இடம் பெற்ற அவனது பாடல்களின் மூலம், தமிழர்கள் எல்லாருக்குமே பரிச்சயமானவனாக மிகப் பிரபல்யம் பெற்ற அவன்,

**"தூங்காதே தம்பி! தூங்காதே! - நீ**
**சோம்பேறி என்ற பெயர் வாங்காதே!"**

என்று பாடி, உழைக்காமல் உறங்கிக்கொண்டிருந்த உலுத்தரைத் துயிலெழுப்புவதற்காக, இரவு பகல் பாராமல் விழித்திருந்து உழைத்ததனால், இருபத்தொன்பதாவது வயதில் அவனே இறுதித்தூக்கம் கொண்டதுதான், நெஞ்சைப் பிழிந்தெடுக்கும் நிரந்தர சோகம்!

**"குட்டி ஆடு தப்பி வந்தா,**
**குள்ளநரிக்குச் சொந்தம்!**
**குள்ளநரி தப்பிவந்தா,**
**குறவனுக்குச் சொந்தம்!**
**தட்டுக் கெட்ட மனிதர் கண்ணிற்**
**பட்டதெல்லாம் சொந்தம்!**
**சட்டப்படி பார்க்கப் போனா**
**எட்டடிதான் சொந்தம்!"**

என்று சொன்ன அந்த ஆறடி மனிதன், ஆறடி நீள நிலத்துக்குள் அடங்கிவிட்ட போதும், அவன் எழுதிய பெருவாரியான பாடல்களின் மூலமாக,

**"உண்மை ஒருநாள் வெளியாகும்! -**
**அதில்**
**உள்ளங்கள் யாவும் தெளிவாகும்!**
**பொறுமை ஒருநாள் புலியாகும்! -**
**அதற்குப்**
**பொய்யும், புரட்டும் பலியாகும்!"**

என்பதை நெஞ்சார நம்பி, அசையாத உறுதியுடன் வெற்றி நடைபோட்ட, அந்தப் பாட்டாளிக் கவிஞனை ஆராதிப்போம்.

தமிழ்த்தேசிய ஆவணச் சுவடிகள்

# யுத்தத்தின் மூலம் சீவியம்

**- ராவய**

**முன்னைய ஐக்கிய தேசியக் கட்சி அரசு போலவே தற்போதைய பொதுஜன முன்னணி அரசும் யுத்தத்தின் மூலமே சீவியம் நடத்த முற்படுகிறது என 'ராவய' பத்திரிகையின் அரசியல் விமர்சகர் குறிப்பிட்டுள்ளார். இதற்கமையவே அரசு பெரும்போர் ஒன்றுக்கான முனைப்புடன் இருப்பதாகக் காட்டிக் கொள்ளும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது.**

**யாழ்ப்பாணத்தை மிக விரைவில் கைப்பற்றப் போவதாக பெரும் பிரச்சாரம் ஒன்று நடத்தப்படுவதுடன் யுத்தச் செலவுக்கான நிதி ஒதுக்கீடுகள், நிதி திரட்டல்கள், ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள், ஆயுத தளபாட கொள்வனவுகள் என அரச தரப்பு முஸ்தீபுகளில் அனல் பறக்கிறது.**

**மக்கள் மத்தியில் இராணுவ பலம் குறித்து சரிந்து போன நம்பிக்கையை முண்டு கொடுத்து நிமிர்த்தும் முயற்சியிலும் அரசு இறங்கியுள்ளது. ஆனால் இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் தீர்வுகாண முடியாது. இவ்விரண்டும் அசைக்க முடியாத உண்மைகள். எனவே இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு சாத்தியமற்றுப்போகும் நிலையில் அரசியற் தீர்வு அவசியமாகிறது.**

**அவ்வாறான ஒரு அரசியற் தீர்வும் விடுதலைப் புலிகளுடன் செய்துகொள்ளப்படும் பட்சத்திலேயே நடைமுறைச் சாத்தியப்படும்.**

**ஆனால் சிறிலங்கா அரசோ இவை எதனையும் கருத்தில் கொள்ளாது புதிதாக ஒரு அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்வைத்துள்ளது.**

**இதன் குறை, நிறைகள் ஒரு புறம் இருக்க, இது எவ்வளவு தூரம் சாத்தியமாகும் என்பது முக்கியமான கேள்வி.**

**விடுதலைப்புலிகளின் சம்மதம் இன்றி இத் தீர்வுத் திட்டம் நிறைவேற்றப் படும் என்றும் விடுதலைப்புலிகளோடு அரசு பேச்சுக்களை நடத்தாது என்றும் புலிகளை ராணுவ ரீதியில் முறியடிப்போம் என்றும் அரசு கூறுகிறது.**

**புலிகள் இன்றிய தீர்வு சாத்தியமாகாது என்பது அரசுக்கு தெரியாத விடயமல்ல. ஆகவே தீர்வுத்திட்ட நகல் என்பது வெளிப் போர்வைக்கானது; அதாவது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு எதனையும் காணும் நோக்கம் அரசிற்கு இல்லை. இந்நிலையில் அரசு முன் வைத்துள்ள தீர்வுத்திட்ட யோசனை போர் நீடிப்பதற்கான சூழலை ஏற்படுத்தும் முயற்சியே அன்றி இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வுகாண இதய சுத்தியுடன் மேற்கொள்ளும் நடவடிக்கை அல்ல . எனவே யுத்தத்தின் மூலம் தனது வாழ் நாளை ஓட்ட சந்திரிகா அரசு தீர்மானித்து விட்டது என்ற ராவயவின் பார்வை சாலப் பொருந்தும்.**

www.tamilarangam.net

## ‘ஈழநாதம்’ ஆசிரியர் தலையங்கத்திலிருந்து

# பரவும் உணர்வலைகள்

திரு. வை. கோபால்சாமி தலைமையிலான மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் தனது முதலாவது மாநாட்டில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஆதரித்துத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது. தமிழக மக்கள் மத்தியில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு நீண்டகாலமாகவே உளப்பூர்வமான ஆதரவு இருந்து வருவது மறுக்கமுடியாத உண்மையாயினும், இன்றைய அரசியற் சூழ்நிலையில் இத் தீர்மானத்திற்கு அரசியல் ரீதியிலான முதன்மை நிறைய உண்டு என்பதும் மறுப்பதற்கில்லை.

இத் தீர்மானமானது ஒரு வகையில் ஒரு முற்போக்கான நடவடிக்கை என்றே கொள்ளவேண்டும். தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஆதரிப்பது தமது எதிர்கால அரசியல் நலனுக்கு ஆபத்து விளைவிக்கும் என தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் இலங்கையில் சிங்களப் பேரினவாதம் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ள அரச பயங்கரவாதத்தைப் பற்றியே பேசாத நிலையில் ஈழத்தமிழர் பிரச்சினைக்கு ஒரே தீர்வு தமிழீழம் தான் என்பதும், எந்தவித ஆபத்து வரினும் போராட்டத்திற்கு தலைமை தாங்கி வரும் விடுதலைப்புலிகளை ஆதரிப்பது என்பதும் முன்னேற்றகரமானவைதான்.

இந்திய இராணுவம் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிராகச் செயற்பட்டமையும், இதன் காரணமாக தமிழ் மக்கள் பெரும் இழப்புக்களையும், நெருக்கடிகளையும், சந்திக்க வேண்டி வந்தமையும், முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டமையும் இந்தியாவிற்கும் விடுதலைப்புலிகள் இயக்கம் உட்பட இலங்கைத் தமிழ் மக்களுக்கும் இடையில் மனக்கசப்பையும் முரண்பாட்டையும் உருவாகியிருந்தன.

இதே சமயம் தமிழக அரசியல்வாதிகளும் இலங்கைத் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறை என்பதை விட ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதிலேயே அக்கறையாக இருந்தமையால் ஈழத் தமிழரின் விடுதலைப் போராட்டமென்பது அவர்களால் புறந்தள்ளப்பட்ட தொன்றாக இருந்தது. இதன் காரணமாக ஈழத் தமிழர் போராட்டத்தில் உளப்பூர்வமாக அக்கறை கொண்டிருந்த தமிழக மக்களின் அபிலாசைகளை நசுக்கவும் திசை திருப்பி விடவுமே முனைந்தனர்.

இந்நிலையானது தமிழக மக்கள் மத்தியில் தமிழீழ விடுதலைப் போராட்டம் என்பது மறைக்கப்பட்டதொன்றாகவும், தமிழக மக்களின் விருப்பு வெறுப்புக்களைக் கருத்தில் கொள்ளாது இலங்கைத்தமிழர் விடயத்தில் இந்திய மத்திய அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பது போன்றதொரு நிலையை உருவாக்கியும் இருந்தது.

ஆயினும் இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஆதரவான குரல்கள் தமிழகத்திலிருந்து காலத்திற்கு காலம் கேட்காமலும் இருக்கவில்லை. ஆனால் அக் குரல்கள் அரசியற் பலம் பெற்றவையாக, பெரிய தாக்கங்களை விளைவிக்கக் கூடியவையாக இருக்கவில்லை.

ஆனால் தற்பொழுது ம. தி. மு. க. இலங்கைத் தமிழர் தொடர்பாக மேற்கொண்டுள்ள தீர்மானமானது அரசியல் ரீதியில் தாக்கத்தை விளைவிக்கக் கூடியதாகும். ஏனெனில் ம. தி. மு. க. தமிழகத்தில் குறிப்பிடத்தக்களவு பரந்துபட்ட மக்கள் ஆதரவைக் கொண்டுள்ளதோடு இந்திய தேசிய கட்சிகளுடனும் நெருக்கத்தைக் கொண்டதாகும்.

இந்த வகையில் தற்பொழுது சுமார் நான்கு வருடங்களின் பின்னர் ஈழத்தமிழருக்கு ஆதரவாகப் பெரும் குரலொன்று தமிழகத்தில் கொடுக்கப்பட்டுள்ளது எனலாம். இது இலங்கைத் தமிழ் மக்கள் உலகில் தனித்து விடப்படவும் மாட்டார்கள் என்பதை வெளிக்காட்டியுள்ளதோடு இலங்கைத் தமிழருக்கு எதிரான நடவடிக்கைகளை எவரும் குறிப்பாக இந்தியா தான் விரும்பியவாறு மேற்கொள்ளமுடியாது என்பதையும் வெளிக்காட்டியுள்ளது எனலாம்.

இத்தீர்மானமானது இந்திய மத்திய அரசைப் பொறுத்தும், சிறிலங்கா அரசாங்கத்தைப் பொறுத்தும் தமிழர் விவகாரத்தைக் கையாள்வதில் சில சங்கடங்களை ஏற்படுத்தலாம். அதாவது இந்தியாவும் சிறிலங்காவும் கூட்டாக தமிழீழப் போராட்டத்தை நசுக்க மேற்கொள்ளும் தீர்மானங்கள் தமிழக அரசியலைப் பாதிக்கும் நிலை உருவாகலாம். இது எதிர்காலத்தில் இந்திய அரசியலிலேயே விளைவுகளை ஏற்படுத்தக் கூடும்.




**‘முன்னோக்கிப் பாய்தல்’ இராணுவ வெறித்தனத்துக்குள் அகப்பட்ட மழலைப் பிஞ்சுகளில் இவனும் ஒருவன். இந்தச் சிறியவனின் சின்னவிழிகள் சொல்வதென்ன?**

**இந்தப் பார்வையுள் பொதிந்தவைகளை கவிதையாயும் மொழியலாம். எங்கே எழுதி அனுப்புங்கள் பார்க்கலாம்!**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழத் தமிழரை ஆதரிக்கிறேன் என் தலை கொய்யினும் கொய்க!



தமிழினதின் விடிவிற்கும், தமிழ் மொழியின் வாழ்விற்கும் அல்லும் பகலும் அனவருதமும் தன் பேச்சாலும், மூச்சாலும் பாடுபட்ட பாவலர் பெருஞ்சித்திரனாரின் மறைவு தமிழ் கூறும் நல்லுலகத்துக்கு பெரிய பேரிழப்பாகும்.

"தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்ற புரட்சிக் கவி பாரதிதாசனின் சூளுரைக்கு இலக்கியமாகவும் இலக்கணமாகவும் வாழ்ந்தவர் புலவர் பெருஞ்சித்திரனார்.

படை பலவரினும், தடைபல இருப்பினும் அவற்றை உடைக்க களத்தில் தனிப் போராளியாக விளங்கியவர்.

தடா சட்டமா? புலித்தடைச் சட்டமா? எந்தச் சட்டம் பாய்ந்தாலும் கொஞ்சமும் அஞ்சாது விழித்த கண் மூடாதவர்.

சிறை பெருஞ்சித்திரனாரைப் பொறுத்தளவில் புகுந்த வீடாக இருந்தது.

எபபோதும் அவர் திருவாய் தமிழ், தமிழன், தமிழ்நாடு என்று முழங்கிக் கொண்டிருந்தது.

"வாழ்ந்தாலும் தமிழுக்கும், தமிழர்க்கும்
வாழ்வேன்!
வளைந்தாலும் நெளிந்தாலும் தமிழ்ப்
பொருட்டே ஆவேன்!
தாழ்ந்தாலும் வீழ்ந்தாலும் தமிழ்
மேல்தான் வீழ்வேன்!
தனியேனாய் நின்றாலும் என் கொள்கை
மாறேன்!
சூழ்ந்தாலும் தமிழ்ச்சுற்றம் சூழ்ந்துரிமை
கேட்பேன்!
சூழ்ச்சியினால் பிரித்தென்றன் உடலை
இருகூறாய்ப் போழ்ந்தாலும்
சிதைத்தாலும் முடிந்த முடிவே!
புதைத்தாலும் எரித்தாலும்
அணுக்களெல்லலாம் அதுவே!"

சொல் ஒன்று செயல் வேறு - இப்படி வாழ்பவர்களே உலகில் அதிகம்பேர் இருக்கிறார்கள். ஆனால் சொல்லும் செயலும் ஒன்றென வாழ்ந்து காட்டியவர் புலவர் பெருஞ்சித்திரனார்.

எதைப் பாடினாரோ அதைப் போலவே இம்மியளவும் வேறு படாது வாழ்ந்து காட்டினார்.

என் மனைவி, என் மக்கள், என் குடும்பம், என் வீடு என்று சுவர் எழுப்பி 'உண்டு உடுத்து வாழ்ந்தேன் நான் இரண்டுகால் மாடு போல.' என்று வாழாமல், உலகில் உள்ள எட்டுக் கோடி தமிழர்களின் விடிவுக்கு பூபாளம் பாடிய கவிஞன் பெருஞ்சித்திரனார்.

தமிழ்நாடு டில்லியின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறவேண்டும். தமிழீழம் சிங்கள ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறவேண்டும் என்று ஓயாது, ஒழியாது குரல் கொடுத்தார்.

"என் மொழி, என்னினம், என்னாடு
நலிகையில்
எதனையும் பெரிதென
கொள்ளமாட்டேன் - வேறு
எவரையும் புகழ்ந்துரை
சொல்லமாட்டேன்.
மனைவிக்கும் மக்களுக்கும்
மாளிகையில் வாழ்வதற்கும்
மற்றெதற்கும் பல்லிளிப்புக்
காட்டமாட்டேன்.
என் மொழியை, என்னினத்தை,
என் நிலத்தை மாற்றானிடம்
இட்டுவிட்டுச் சோம்பிவிட
உள்ளம் இசையேன்"

இப்படி, இம் என்னும் முன் இருநூறு, அம் என்றால் ஆயிரம் சத்தான கவிதைகள் முத்தான தமிழில் பாடியவர்.

"ஆண்டு நூறானாலும் அன்னைத்
தமிழ்நாடு
வேண்டும் விடுதலை என்றும்
விலக்கோம்
பூண்டோம் உறுதி புறப்பட்டோம் என்றே
மூண்ட இடியாய் முழங்காய் தமிழ்
மகனே!"

என்று நித்தம் நித்தம் சங்கத் தமிழில் சங்கநாதம் செய்தவர்.

"பூட்டிய இரும்புக் கூட்டின் கதவு
திறக்கப்பட்டது!
சிறுத்தையே வெளியில் வா!
எலி என உன்னை இகழ்ந்தவர்
நடுங்கப்
புலி எனச் செயல் செய்யப் புறப்படு
வெளியில்!"

இந்த வீரம் தோய்ந்த கவிதை வரிகளைப் பாடிய பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த தமிழ் நாட்டில் சிறிது காலத்துக்கு முன், 'புலி' என்றாலே,

"இழுத்துப் போங்கள் காவல்துறைக்கு",
"தள்ளிவிடுங்கள் சிறைக்கூட்டுக்குள்"

என்று ஆணவம் பிடித்த ஆட்சியாளர்கள் கொக்கரித்தார்கள். தடா அவர் மீது வீசப்பட்டபோது,

"இதோ நான் ஒருவன் இருக்கின்றன்
எனைச் சிறை செய்யினும் செய்க!
ஈழத்தமிழரை ஆதரிக்கின்றேன்
என் தலை கொய்யினும் கொய்க!"

என்று பெருஞ்சித்திரனார் என்ற சிறுத்தை உறுமிற்று.

புலவர் பெருஞ்சித்திரனார் சொற்களை தேனில் தோய்த்துக் கொடுப்பதில்லை. இரும்பைக் காய்ச்சிய நெருப்புக் குழம்பில் சொற்களைத் தோய்த்துக் கொடுப்பார்.

1987-ல் தமிழீழத்தில் புகுந்த இந்திய வானரப் படை தமிழ் நிலத்தை தகனம் செய்த போது, தமிழ்ப் பெண் குலத்தை வேட்டையாடி, அவர்கள் கற்பை சூறையாடியபோது, பொதுமக்களை இரக்கமின்றி கொன்றுவிட்டு புலிகள் எனப் பொய்ப்பிரச்சாரம் செய்த போது, கவிஞன் பெருஞ்சித்திரனா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ரின் கோபம் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி மீது பாய்ந்தது. அவரது நெற்றிக்கண் திறந்தது. வார்த்தைத் துண்டுகள் குண்டுகளாக வெடித்தன.

"சிங்களக் கொலைஞன் செயவர்த்தனன்
எனும்
வெங்கணன் விரித்த வலையில் விழுந்து
செந்தமிழ் இனத்தை சீரழித்திடவே
முந்து இராஜீவ் என்னும் முண்டையின்
மகனே
யாழ்த் தமிழ் மக்களின் யாக்கைகள்
எல்லாம்
போழ்த்துயிர் குடிக்கும் அரக்கப் பூதனே!
நீயும் நின்துணையும் பின்னிரு மக்களும்
ஏயுமிவ் வுலகத்து இருக்குநாள் தோறும்
எந்தமிழ் நல்லினத் தேற்றம் குலைதலால்
வெந்தழியும் நாள் விரைந்துனக் கெய்துக!
வீழ்ச்சியுறுக! நின்னுடல் வெடித்துச்
சுக்குநூறாகச் சிதறுக!"

என்று பாடினார்.

கவிஞர்கள் பலரைப் பார்க்கலாம். மங்கையையும், மதுவையும், வெண்ணிலவையும், தென்றலையும் இன்றும் பாடி மகிழும் கவிஞர்கள் பலருண்டு.

'கற்பில் சிறந்தவள் கண்ணகியா அல்லது மாதவியா?' என இன்றும் பட்டிமன்றம் நடத்தும் புலவர்கள் பலருண்டு.

ஆனால், என் மொழி, என்னினம், என்நாடு என முழக்கமிடும் பெருஞ்சித்திரனார் போன்ற கூழுக்குப் பாடாத கவிஞர்களைப் பார்ப்பது அருமை.

"என்மொழி, என்னினம், என்நாடு
நலிகையில்
எதனையும் பெரிதென எண்ணமாட்டேன்
- வேறு
எவரையும் புகழ்ந்துரை
சொல்லமாட்டேன்! வரும்
புன்மொழி, பழியுரை, துன்பங்கள்
யாவையும்
பொருட்டென மதித்துளம்
கொள்ளமாட்டேன் - இந்தப்
பூட்கையில் ஓரடி தள்ள மாட்டேன்"

என்று பாடிய புலவர் பெருஞ்சித்திரனார் நாமம் இந்த வானும், வையகமும், நெருப்பும், நீரும், காற்றும் உள்ளளவும், கடைசித் தமிழன் உள்ளளவும் வாழும்!

தமிழுக்கும் தமிழினத்துக்கும் தொண்டு செய்தோன் சாவதில்லை. இது நான்குமறைத் தீர்ப்பு.

# மக்களும் புலிகளும்

www.tamilarangam.net

அண்மையில் 'முன்னோக்கிப் பாய்தல்' நடவடிக்கையின் போது ஏற்பட்ட மனித அவலநிலையானது, விடுதலைப் புலிகளுக்கும், யாழ். மக்களுக்கும் இடையில் செயற்பாட்டு ரீதியிலான பிணைப்பை வெளிப்படுத்துவதாக இருந்தது. மக்கள் தாங்களாகவே முன்வந்து போர்க்கால நெருக்கடியில் ஏற்பட்ட தேவைகளுக்கு உதவிகளும் தானங்களும் புரிந்தனர்.

இந்நடவடிக்கையில் 3 இலட்சம் மக்கள் அகதிகளானபோது, அனுபவம் நிறைந்த பல நிவாரண அமைப்புக்கள் கூட இந்நிலையை சமாளிக்க இயலாதிருந்தது. ஆயினும் விடுதலைப் புலிகள் சகல நிவாரண அமைப்புத் தொண்டர்களையும், கிராம சேவகர்களையும், கல்லூரி அதிபர், ஆசிரியர்களையும் ஒன்று சேர்த்து இம் மாபெரும் நெருக்கடி நிலையை எதிர்கொண்டு நிவராணப் பணிகளை எளிதாக்கினர்.

யூலை 9-ம் திகதி வலிகாமம் மேற்கில் இராணுவம் தனது நடவடிக்கையைத் தொடங்கிய போது 50,000-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்தனர். சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பளை, உடுவில் ஆகிய இடங்களிலிருந்த மக்கள், ஆக்கிரமிப்பு இராணுவத்தின் நேரடித் தாக்குதலில் இருந்து பாதுகாப்புத் தேடி கூட்டம் கூட்டமாக வீதிகளில் ஓடிக்கொண்டிருந்தனர். மழையெனப் பொழிந்த தொடர்ச்சியான பீரங்கித் தாக்குதல்களினாலும் மக்கள் இடம்பெயர நேர்ந்தது. யாழ். நகரிலும், கரையோரங்களிலும் நடைபெற்ற எறிகணை, பீரங்கித் தாக்குதலாலும் இந்நிலை ஏற்பட்டது. சிறிய எண்ணிக்கையானோர் யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் மேலும் தென்மராட்சிப் பகுதிகளில் தங்கள் உறவினர் வீடுகளில் தங்கினர். ஏனைய பல இலட்சம் மக்களுக்காக மனிதாபிமான செயலாக கல்லூரிகளும், பல்கலைக் கழகமும், கோவில்களும், தேவாலயங்களும் தம் வாயில்களைத் திறந்துவிட்டன.

விடுதலைப் புலிகள் உடனடியாக நிவாரணப் பணிகளுக்காக தொண்டர் குழுக்ளை உருவாக்கினர். அவர்கள் அகதி முகாம்களில் அத்தியாவசிய தேவைகளை (உணவு, நீர்) வழங்க ஏற்பாடுகளை மேற்கொண்டனர். மேலும் காயப்பட்டவர்களுக்கும், நோயாளிகளுக்கும் மருத்துவ உதவிகளை அக்குழுக்கள் கவனித்தன. யாழ்ப்பாணம் எங்கும், அகதிகள் தங்குவதற்கு வசதியான வீடுகள், கோவில்கள், முகாம்கள் போன்றவற்றிற்குச் செல்வதற்கான திசைகாட்டும் அறிவிப்புப் பலகைகள் காணப்பட்டன.

உடுத்த புடவைகளுடன் அகதிகள் வெளியேறிய காரணத்தால், இவர்களுக்காக வீடுவீடாக நிவாரணத் தொடண்டர்கள் ஆடை சேகரிக்க முன்வந்த செயலுக்கு யாழ். மக்கள் தாராளமாக வாரி வழங்கினர்.

இராணுவத்தை விரட்டியடித்து, எமது பகுதிகளை மீண்டும் கைப்பற்றிய விடுதலைப் புலிகள், அங்கு மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இராணுவத்தின் நிலக்கண்ணிகளை அகற்றி, இராணுவக் காவல் அரண்களிலிருந்து ஏற்படக்கூடிய எறிகணை அபாயத்தைக் கணித்து, அப்பகுதிகள் மக்கள் வாழ்வதற்கு தகுதியுடையனவா என்பதை உறுதிப்படுத்தினர். விடுதலைப் புலிகள், மக்கள் வாழலாம் என்று சமிக்ஞை காட்டிய பின்னர், மக்கள் நன்றியுடனும், ஆறுதலுடனும் மீண்டும் தமது இடங்களுக்குச் சென்றனர்.

மிகப்பெரும் நெருக்கடி நிலையை ஒன்றுபட்டு வெற்றிகண்ட பெருமை யாழ்ப்பாண மக்களுக்கும், விடுதலைப் புலிகளுக்குமே உரித்தாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



**கண்டம் மாறிய நண்பனுக்கு தாயகத்திலிருந்தொரு கடிதம்**

www.tamilarangam.net

# சங்காரம் முடிந்த கையோடு....

**இன்னும் சாப்பிடவில்லை. மழையில் நனைந்து இப்போதுதான் வந்தேன். கடும்மழை. குடை இருந்ததுதான், பிடிக்க மனமில்லை. மழையில் நனைந்தே வரவேண்டுமென்ற சந்தோசம். சந்தோசத்தால் பசிக்கவும் இல்லை.**

அன்புள்ள சிறி,

உன்னுடைய கடிதங்கள் இரண்டுக்குமான பதிலை ஒன்றாக முந்த நாள் எழுதி அனுப்பி விட்டேன். இன்று, நெஞ்சுக்குள் பொங்கிப் பொங்கி வரும் மகிழ்ச்சியை, ஊரெல்லாம் நிறைந்திருக்கும் சந்தோசத்தை உனக்கு தந்துவிட வேண்டுமென்ற தவிப்பில் இதை எழுதுகின்றேன்.

நண்பனே! நேற்றைக்கும் இன்றைக்குமாக இரண்டு விமானங்கள் இங்கே சுட்டு வீழ்த்தப்பட்டன. இந்தச் செய்தியை எந்த வானொலியோ அல்லது யாராவது நண்பனொருவன் தொலைபேசியில் தெரிவிக்கும் போதோ நீ ஆச்சரியப்படுவாய். நம்புவதா, விடுவதா என்று கூட அதிசயமாக இருக்கும் உனக்கு. ஆனால் சத்தியமாக விமானங்களின் கதை முடிந்தது. அவை சுடப்பட்டு நொருங்கியதாகவே உண்மைச் சரித்திரம் சொல்கிறது. இங்கே எல்லோருக்கும் ஆனந்தம். உனக்கும் சந்தோசமாகவிருக்கும்.

யாருக்கும் ஞாபகம் மறவாத, பீப்பாக் குண்டுகளைப் போடும் 'அவ்ரோ'ப் பிளேன்களே அழிந்தவை. ஒன்றிற்குப் பின்னால் மற்றதாக நாளுக்கொன்றாக இரண்டும் வீழ்ந்தன. சனங்கள் செட்டை முளைத்துப் பறக்கிறார்கள். வானத்தில் தெல்லுமாறித் திரிந்த எமகிங்கரர்கள் கூண்டோடழிந்தாரே! என்ற மகிழ்ச்சி எல்லோருக்கும். செல்லத்துரை மாமாவுக்கு புழுகம் சொல்லி மாளாது. தான் சொல்லி வந்தது இப்ப நடந்திருக்குதாம். நீ இங்கே இருக்கும்போது, 'பாருங்கள் புலிகள் பிளேனை விழுத்தேக்கை அதுக்குப் பிறகு சிங்களப் படையள் படுற பாட்டை' என்று அவர் அடிக்கடி சொல்வது ஞாபகமிருக்கும். பாக்கியம் அன்றி, தான் இனிச் செத்தாலும் பரவாயில்லையாம். பிறந்த பேறைப் பெற்ற திருப்தி 'பிளேன்'-கள் எரியேக்கை பார்த்தது எண்டு ஒரு சந்தோசம். இப்படி இப்படி ஊருக்குள்ள சின்னன் பெரிசுகள் என்றில்லாமல் எல்லோருடைய கதையும் இதுதான். வாசிகசாலையடியில் நான் வரும்போது மழையில் நனைந்தபடி சனம் கூடியிருந்தது. மழை பெய்கிறதுகூட மறந்த மகிழ்ச்சியடா.

எனக்கு இதை எப்படி எழுதுகிறதென்று தெரியாத தத்தளிப்பு. நீ இங்கே இருக்காமல் போய்விட்டாய். எவ்வளவு கவலை? நீயும் இங்கே இருக்காது விட்டுட்டுப் போனதற்காக இப்போது நிறையக் கவலைப்படுவாய்.

முந்தி நாங்கள் அனுபவித்த அந்தக் காட்சிகளை??.... நாங்கள் ஓட... ஓட... கரந்தாய்க் குளத்துக்குப் பின்னால் இருந்த தென்னங்காணிக்குள்ள எத்தனை பீப்பாக்களை தள்ளிய இரணியன்கள். எங்கட பள்ளிக்கூடக் கட்டிடத்தையும் அழிச்சதுகள் இந்தப் பீப்பாக் குண்டுகள் தானே? அன்றைக்கு நாங்கள் பட்ட பாடு. ஒவ்வொரு பீப்பாவும் ஆடி ஆடி வர அதைப் பார்த்தபடி விலகி விலகி நாங்கள் ஓடின ஓட்டம். எத்தனை தென்னைகளை அழித்தார்கள்? பாவியள் செல்லத்தம்பி அம்மானின்ர ஆறேழு மாடுகள் எப்படிச் சிதறிக் கிடந்ததுகள்? எவ்வளவு பெடியளை இப்படிப் பீப்பாவை உருட்டி அழித்திருப்பாங்கள். இப்ப, கண்ணுக்கு முன்னால் கூண்டோடு மாண்ட காட்சி...

முதல்நாள் பலாலியில் இருந்து கொழும்புக்கெனப் போன 'பிளேன்' (நாவற்குழிக்கு மேல் என்று நினைக்கிறேன்) வானத்திலேயே தீப்பிடித்தது. சனமெல்லாம் போட்டது போட்டபடி நிண்டு கூத்தாடிச்சுது கள். ஏதேசி என்ற அதிஸ்டம் நானும் பார்க்கக் கிடைத்தது. எரிந்து கொண்டு போன பிளேன் திரும்பி மெல்ல, மெதுவாக பலாலிக்குக் கிட்டவாக வர தொப்பெண்டு விழுந்து தன்னுடைய கதையை முடிச்சுது.

மற்றது, அடுத்தநாள் கொழும்பிலிருந்து பலாலிக்கு வரும்போது அடிபட்டு தீ மூண்டு புகைச்சுக் கொண்டு போய் நிலாவரையுக்கை விழுந்தது. சனங்கள் துள்ளிக் குதிக்குதுகளடா. இருக்காதா? எமகிங்கரர்கள் அழிந்தால் உலகம் விடிந்த மாதிரித்தானே?

எத்தனை தடவைகள் அலைக் கழித்து இந்தப் பறவைகள் எங்கள், நிணந்தேடின? எத்தனை உயிர்களைக் குடித்தெழுந்தன? எல்லாம் காலமாற்றம்தான். புலிகளின் ஆற்றலை இப்ப ஊருலகம் எல்லாம் அதிகமாக அறிஞ்சுவருகுது. சிறீ லங்கா அரசாங்கத்தின் பொய்யும் புரட்டும், திண்டாட்டமும் எல்லோருக்கும் விளங்கிவிட்டது. இனித்தான் சந்திரிகா அரசுக்கும் ஞானம் வெளிக்கும்.

எங்களின் விடுதலைப் போராட்டத்தின் பெறுமானத்தை உலகம் இன்னும் விளங்காமல் இருக்கிறது என்ற உன் கவலை இனி மெல்ல மெல்ல மாறும் என நம்புகிறேன். எங்கள் விடுதலை நெருங்கி வருவதை இங்கே எல்லோரும் நன்றாக உணர்கின்றார்கள்.

உண்மையில் நீ ஒரு துர்ப்பாக்கியசாலிதான் என்பதை இப்போது நம்புகிறேன். முன்பு நீ சொல்லும் போது நான் அப்படியல்ல என்று சொன்னேன். விடுதலைப் போர் நடக்கும்போது அதனுடன் நெருங்கி நிற்காத மனிதன் முழுமையற்றவன் என்பது எவ்வளவோ உண்மை தான். இங்கே நீயில்லையென்றாலும் நம் விடுதலைக்காக நீயிருக்கும் நாட்டிலிருந்தே உழை.

பசிக்கிறது நண்பனே!

விமானங்கள் விழுந்த மகிழ்ச்சியின் ஆரவாரத்தில் இன்னும் சமையல் முடியவில்லை.

நானும் சேர்ந்தே சமைக்கவேண்டும்.

நல்லது. அதிகமதிகமான புதினங்களுடன் சந்திப்போம்.

நன்றி.

அன்புடன்,
பிரகலாத ஹேமந்த்
*30.04.1995.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

